விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ MADRAS CEMENTS LTD. RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 28 சனிக்கிழமை (12.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 024

## 106 மேலதிக வாக்குகளினால்

# நிறைவேறியது குற்றப் பிரேரணை

(கொழும்பு)



பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணை அறிக்கை 106 மேலதிக வாக்குகளினால் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. அறிக்கைக்கு ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 49 வாக்குகளும் கிடைத்தன. ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் அறிக்கைக்கு எதிர்ாக வாக்களித்தன. (02ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற நடவடிக்கைகள் நேற்றும் செயலிழப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பான பராளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கை விவாதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் சட்டத்தரணிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நேற்றுமுன்தினமும் நேற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் செயலிழந்துள்ளன. புதுக் கடை நீதிமன்ற வளாகத்தில் கூடிய சட்டத் தரணிகள் தலையில் கறுப்புப்பட்டி அணிந்து எதிர்ப்பு (20ஆம் பக்கம் பார்க்க)

## உச்சநீதிமன்ற தீர்ப்பை மீறி ஷிராணிக்கு எதிராக தீர்மானம்

### அமெரிக்க தூதரகம் கவலை

(கொழும்பு)

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி தலைமை நீதிபதிக்கு எதிராக நடந்த கண்டனப் பதவி நீக்கத் தீர்மானம் குறித்து தாம் மிகவும் கவலையடைந்துள்ளதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தின் வாக்கெடுப்பு நடந்த ஒரு சில நிமிடங்களில் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில், இலங்கையில் நீதித்துறைக்கும் அரசுக்கும் இடையே இருக்கும் அதிகாரப் பகிர்வு குறித்த கேள்விகளை இவ்விவகாரம் எழுப்பியுள்ளதாக கூறியுள்ளது.

அமைதிகரமான ஆர்ப்பாட்டங்களை நடத்த அனைவருக்கும் இருக்கும் உரிமையை அனைத்து தரப்பினரும் மதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ள அமெரிக்க தூதரகம், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வோரின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுள்ளது.

இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைப்பாளர் பதவியிலிருந்து மேர்வின் விலகல்!

(களனி)

களனி தேர்தல் தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து அமைச்சர் மேர்வின் சில்வா பதவி விலகியுள்ளார்.

தற்காலிக அடிப்படையில் களனி தேர்தல் தொகுதி அமைப்பாளர் பதவியை இராஜினாமா செய்வதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித மடவலவின் கொலையுடன் தொடர்பில்லை. தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

உயர் நீதிமன்ற வளாகத்தில் கறுப்புக்கொடியை பறக்கவிட்டு, கறுப்பு துணியால் வாயைக் கட்டிக்கொண்டு ஷிராணிக்கு ஆதரவாக சட்டத்தரணிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டபோது...



## ரிசானாவின் மரண தண்டனை கொடூரமானது - பிரித்தானியா

(கொழும்பு)

ரிசானா நபீக்கிற்கு தலையை வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதானது கொடூரமானதும் மனிதத்தன்மை அற்றதுமான நடவடிக்கை என பிரித்தானியா கண்டனம் தெரிவித்துள்ளது.

ரிசானாவிற்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை நிறுத்தக்கோரி தாய்நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட பல விண்ணப்பங்களை சவூதி அதிகாரிகள் ம்றுத்துவிட்டு, ரிசானா நபீக்கிற்கு தண்டனையை நிறைவேற்றியுள்ளனர்.

கடந்த 2005இல் தனது கவனிப்பிலிருந்த குழந்தை ஒன்றை மூச்சு திணறச் செய்து கொன்றார் என்ற குற்றச்சாட்டில் 24 வயதான ரிசானா நபீக்கிற்கு கடந்த 9ஆம் திகதி சவூதியில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

குழந்தையின் தாயுடனான வாய்த்தர்க்கத்தின் பின் இவர், நான்கு மாத ஆண் குழந்தையை மூச்சடைக்க செய்து கொன்றார் என (20ஆம் பக்கம் பார்க்க)

## 10 நிமிடங்களுக்கு சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை பதவியில் இருந்து நீக்கும் யோசனை மீதான விவாதம் நாடாளு மன்றத்தில் நிறைவடைந்ததை அடுத்து சபாநாயகர் சமல் ராஜபக்ஷவினால் சபை அமர்வுகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பில் நாடாளுமன்ற தெரிவு க் குழு நடத்திய விசாரணையின் போது அவர் குற்றவாளி (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் இடமாற்றம் 2012ற்கான நிபந்தனைகள் உருவாக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

2012 மார்கழி ஆசிரிய இடமாற்றம் விடயம் தொடர்பான இறுதித்தீர்மானம் நேற்று மாகாணக் கல்வித்திணைக்களப் பணிப்பாளர், மேலதிக் மாகாணக் கல்விப்பணிப்பாளர், மகாணக் கல்வித்திணைக்களப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தமிழ் ஆசிரியர்சங்கம் ஆகியோர் இணைந்து கலந்துரையாடி [illegible] வேற்றப்பட்டுள்ளன.

1. ஆசிரியர் இடமாற்றம் - 2012 மார்கழிக்கான நிபந்தனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையிலேயே இவ் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

2. கௌரவ ஆளுநரால் நியமிக்கப்பட்ட ஆசிரிய இடமாற்ற மீளாய்வு குழுவினால் தயாரிக்கப்பட்ட பட்டியல், ஏற்கெனவே இடமாற்ற சபை மூலம் வெளியிடப்பட்ட பட்டியல் ஆகிய [illegible] (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் சிலர் வாக்களிக்கவில்லை!

(கொழும்பு)

குற்றப் பிரேரணைக்கு எதிரான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிலையில், அமைச்சர்களான டியு குணசேகர, சந்திரசிறி கஜதீர மற்றும் திஸ்ஸவிதாரண ஆகியோர் அந்தவாக்கெடுப்பில்கலந்துகொள்ளவில்லை.

அத்துடன், ஆளுங்கட்சி எம்.பியான ரஜீவ விஜேசிங்க, எதிரணி உறுப்பினரான ஸ்ரீரங்கா ஆகியோரும் வாக்களிக்கவில்லை. எனினும் லங்கா சமசமாஜக் கட்சியைச்சேர்ந்த வைஜிபத் மசிறி, அரசாங்கத்துடன்இணைந்துபிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிறைவேறியது...

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப் பிரேரணை தொடர்பில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தெரிவுகுழு அறிக்கை குறித்து நேற்று இறுதிக் கட்ட விவாதம் இடம்பெற்றது.

நேற்று பகல் ஒரு மணிக்கு பாராளுமன்றம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமை கூடி இறுதி விவாதம் இடம்பெற்று மாலை 6:30 மணிக்கு வாக்கெடுப்பு இடம்பெற்றது. இந்த வாக்கெடுப்பில் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப்பிரேரணை 106 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது.

தெரிவுக்குழு அறிக்கை ஆதரவாக155 வாக்குகளும், எதிராக 49 வாக்குகளும் பெறப்பட்டன.

ஐ.தே.க, த.தே.கூ அறிக்கையை எதிர்த்து வாக்களித்தன.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது 14 குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி ஆளும் கட்சி உறுப்பினர்கள் 117பேர் கையெழுத்திட்டு குற்றப்பிரேரணை ஒன்றை பாராளுமன்ற சபாநாயகரிடம் கடந்த நவம்பர் மாத இறுதியில் கையளித்தனர்.

பின்னர் அது குறித்து பாராளுமன்றில் ஆராயப்பட்டு குற்றப்பிரேரணையை விசாரிக்க பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப் பட்டது.

தெரிவுக்குழுவில் 11 பேர் உள்ளடக்கப்பட்டனர். ஐ.தே.க 2, த.தே.கூ 1, ஜ.தே.கூ 1, ஐ.ம.சு.மு 7 என உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

அதன் படி ஷிராணி பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு அழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை இடையில் ஷிராணி தனது சட்டத்தரணிகளுடன் வெளிநடப்புச் செய்தார். அதற்கு காரணம் தெரிவுக் குழுவில் உள்ள அரசு கட்சி உறுப்பினர்கள் தன்னை அவமதிக்கும் வகையில் வார்த்தைப் பிரயோகங்களை செய்ததாக ஷிராணி குற்றம்சுமத்தினார்.

இது குறித்து சபாநாயகருக்கு கடிதம் ஒன்றினையும் அனுப்பினார்.

ஷிராணி தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறியபோது எதிர்க் கட்சி உறுப்பினர்களும் வெளியேறினர்.

எனினும் அரசு கட்சி உறுப்பினர்கள் சாட்சிகளை அழைத்து விசாரணையை நிறைவு செய்து அறிக்கை தயாரித்து மறுநாள் பாராளுமன்றிலும் சமர்ப்பித்தனர்.

14 குற்றச்சாட்டுக்களில் 5 குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டு அதில் மூன்றில் ஷிராணி குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். இரண்டு குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை.

இந்நிலையில் பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கையை சவாலுக்கு உட்படுத்தி பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மேன் முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

ஷிராணியின் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேன் முறையீட்டு நீதிமன்றம் பாராளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு அழைப்பாணை விடுத்தது.

எனினும் பாராளுமன்றத்தில் விவாதம் இடம்பெற்று அதில் எடுக்கப்பட்ட இறுதி தீர்ப்பின் படி நீதிமன்ற அழைப்பாணையை ஏற்றுக் கொள்ள முடியாது என சபாநாயகர் அறிவித்து விட்டார்.

எனினும் நீதிமன்றம் மீண்டும் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு அழைப்பாணை விடுத்ததோடு பாராளுமன்ற தெரிவுக்குழு குறித்து உயர்நீதிமன்றிடம் வியாக்கியானம் கோரியிருந்தது.

நீதிமன்றம் விடுத்த அழைப்பை த.தே.கூ, ஜ.தே.கூ உறுப்பினர்கள் ஏற்று நீதிமன்றில் ஆஜரான நிலையில், ஐ.ம.சு.மு ,ஐ.தே.க என்பன நீதிமன்ற அழைப்பாணையை மறுத்து ஆஜராகவில்லை.

இந் நிலையில் உயர்நீதிமன்றின் வியாக்கியானத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

அதாவது பாராளுமன்ற கட்டளைகள் சட்டம் இல்லை என்பதால் பிரதம நீதியரசரை விசாரணை செய்து தண்டனை வழங்கும் ஆணை, அதிகாரம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு கிடையாது என அந்த வியாக்கியானத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனால் பாராளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை செல்லுபடியற்றது என அறிவித்து நீதிமன்றம் அதனை இரத்துச் செய்தது.

### பாராளுமன்றமா? நீதிமன்றமா?

இதற்கிடையில் பாராளுமன்றமா? நீதிமன்றமா? நாட்டில் மீயுயர் அதிகாரம் கொண்டது என்ற போட்டி நாட்டில் ஏற்பட்டுள்ள நிலையில் ஷிராணிக்கு ஆதரவாகவும் எதிராகவும் குற்றப்பிரேரணைக்கு ஆதரவாகவும் எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் குற்றப் பிரேரணை குறித்த தெரிவுக்குழு அறிக்கை பாராளுமன்றில் நேற்றும் நேற்று முன்தினமும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நேற்று மாலை வாக்கெடுப்பு இடம்பெற்றது.

வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையில் தெரிவுக்குழு அறிக்கை நிறைவேற்றப்பட்டமையின் காரணமாக ஷிராணி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு உண்டு. அவரும் அதனை செய்வார். காரணம் அரசுதான் குற்றப்பிரேணையை முன்வைத்தது.

இறுதியில் ஷிராணி பண்டாரநாயக்க பதவியில் இருந்து நீக்கப்படுவார். அதன் பின் புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்படுவார்.

இதேவேளை, புதிய நீதியரசரை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

### தீர்மான அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைப்பு

நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த அறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடியினால் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த பாராளுமன்ற அறிக்கை குறித்து ஜனாதிபதி இறுதி (19ஆம் பக்கம் பார்க்க)

செல்லா சினிமா யாழ்ப்பாணம்

இன்று முதல்
A/C
DIGITAL dts SURROUND
கார்த்தி, அனுஷ்கா, சந்தானம் மற்றும் பலர் நடிப்பில்
10.30, 2.30, 6.30, 9.30

## மரண அறிவித்தல்

### கந்தையா வைத்திலிங்கம்



(உரிமையாளர்-நவசக்தி உணவகம்)

புங்குடுதீவு 09-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இலக்கம் 55, கச்சேரியடி கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கந்தையா வைத்திலிங்கம் 10.01.2013-ம் திகதியன்று குவைத்தில் காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான கனகசுந்தரம் ,கிருஷ்ணபிள்ளை (சிவசக்தி மில்), பகவதி மற்றும் பரமலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும் மற்றும் உதயகுமார்,கோகுலவாணி,உசானந்தினி, சதீஸ்குமார், ஜேந்தினி, நிசாந்தினி ,லோஜினி ஆகியோரின் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

(சி-2101)

பிள்ளையார் இன்

40% கழிவு

இன்றுமுதல் அதி விசேட40 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85 /-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829
(சி-1976)

## வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம்
## வதிரி, கரவெட்டி

### பயிற்சிநெறி பயிலுனர்கள், போதனாசிரியருக்கான விண்ணப்பம் - 2013

பின்வரும் பயிற்சி நெறிகள் பாடசாலையை விட்டு விலகியோருக்காக 2013 பெப்ரவரி மாதம் முதல் நடத்தப்படவுள்ளது.

1. தகவல் தொழில்நுட்பமும் விசேட ஆங்கிலமும் (முழுநேரம் வார நாட்கள்)
2. தொடர்பாடலுக்கான ஆங்கிலம்(செவ்வாய், வியாழன் பி.ப. 3.00 -5.00)
3. சிங்கள மொழி (வார இறுதி நாட்கள்)
4. தமிழ் சுருக்கெழுத்து (வார இறுதி நாட்கள்)
5. தமிழ் தட்டெழுத்து( வார நாட்கள்)

(4, 5) இவ் இரண்டும் பயில்பவர்களுக்கு இறுதி இரண்டுமாதங்கள் கணனியில் தட்டச்சு பயிற்சி வழங்கப்படும்.

பின்வரும் பயிற்சி நெறிகளை போதிக்கக்கூடிய உயர் தகைமையுடைய போதனாசிரியர்கள் தேவையாகவுள்ளனர்.

1. தகவல் தொழில்நுட்பம்
2. சிங்கள மொழிப் பயிற்சி

ஆர்வமுடையவர்கள் தங்களது முழு விபரத்தினையும் உள்ளடக்கி சுயமாக தயாரித்த விண்ணப்பத்தினை ( தொலைபேசி இலக்கத்துடன்) சுயமுகவரி இடப்பட்டு முத்திரை ஒட்டிய கடித உறையுடன் ‘செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், வதிரி, கரவெட்டி’ என்ற முகவரிக்கு நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ 21.01.2013-ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
வதிரி, கரவெட்டி.
T.P.: 021 226 4211

புவனேந்திரன் ரமேஸ்வரன்
செயலாளர்

(சி-2107)

## 2013 இற்கான புதிய அனுமதிகள்

BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| Play Group | Montessori | Pre School |
|---|---|---|
| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |

இப்பொழுது பெற்றோர்களின் வசதி கருதி எமது சில வளாகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

கற்பித்தல் முறை:
★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
★ தமிழ் கட்டாய பாடம்.
★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கைவேலைக் கண்காட்சி. Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம் 84, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் — மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
நீர்வேலி
கோப்பாய் — கோப்பாய் மத்தி
சாவகச்சேரி — சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை
மானிப்பாய் 1
அச்சுவேலி — ஆதார வைத்தியசாலை அருகாமை
மானிப்பாய் 2 — சங்கரப்பிள்ளை வீதி
சங்கானை — பிரதேச செயலகம் அருகாமை
சுன்னாகம் — Dr. சுப்பிரமணியம் வீதி சுன்னாகம்
வடமராட்சி — கரவெட்டி

## சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

Certificate in English — இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
Diploma in English — G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு
ESOL A1, A2 — Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
IELTS — உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்
★ Pre Foundation
★ Foundation
★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

(சி/2104)

British BUSINESS COLLEGE
BRITISH BUSINESS COLLEGE
64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel:021 222 5796, 077 362 7055

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரிட்சை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies - Sri Lanka. Reg. No: P 9718

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மோட்சம்

ஒருவர் நீண்ட நேரமாக ஆகாயத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அங்கே எதை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று இன்னொருவர் கேட்டார்.

"எனக்கு மோட்சம் கிடைக்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது... அது எங்கேயிருக்கிறது என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

"அது அங்கே இல்லை சேர்!" என்றார்.

"அப்படியென்றால் அது இருக்கிற இடம் உங்களுக்குத் தெரியுமா?" என்றார்.

"அது எனக்குத் தெரிந்தால் இப்படி ஏன் உங்களுக்குத் தகவல் சொல்லிக் கொண்டு இங்கே இருக்கிறேன்" என்றேன்.

இவ்வாறு கூறிவிட்டு மீண்டும் ஆகாயத்தை பார்த்தபடி இருந்தார்.

இது தொடர்பாக சாய்பாபா என்ன சொல்கிறார் தெரியுமா?

"மோட்சம் என்பது ஆகாயத்தில் இருந்து விழும் ஒன்றல்ல. பூமியில் இருந்து எழும்பி வருவதுமில்லை. அது இந்த உலகில் இருக்கிறதும் இல்லை.

மோட்சம் என்பது ஒரு நிலை... அந்த நிலையை நம்மால் அடைய முடியுமா? முடியும்!

இதயத்திலே இருக்கும் ஆசைகள் ஒவ்வொன்றையும் பொறுக்கி எடுத்து எரிந்தால்... அதன்பின் ஏற்படும் நிலை தான் மோட்ச நிலை.

இதற்கு ஒரு உதாரணம்...

சுலபமாக உயர போகக் கூடியது எது? காற்றிலே கடதாசி, பஞ்சு என்பன பறக்கும். இவை இரண்டிலும் "கனம்" இல்லை.

மனிதன் அப்படி பறக்க வேண்டும் என்றால்... அதற்கு என்ன செய்ய வேண்டும்...

அவனிடம் உள்ளடங்கிய ஆசைகள்... சுயநல நாட்டத்தோடு பொருட்களை சேர்க்கிற தன்மை... இதிலேதான் மனிதனுக்கு மேலே ஒரு சுமையாக அமர்ந்திருந்து அழுத்திக் கொண்டிருக்கிறது. நாட்கள் நகர ஆசைகள் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது.

சுயநல நாட்டமோ ஆகாயத்தையே எட்டிப் பிடிக்குமளவிற்கு அதிகமாக உயர்ந்து விட்டது.

இவ்வாறு மனிதனை அமுக்கி வைத்திருக்கும் போது அவன் எங்கே பறக்க முடியும்?

எழுந்து நிற்பதற்கே கஷ்டம். அவன் எங்கே மோட்ச நிலையை எட்டிப் பிடிக்கிறது.

ஒரு குருவோ அல்லது சாமியாரோ, "இது உங்களுக்குரிய மோட்சம்; வைத்துக் கொள்ளுங்கள்" என்று பெற்றுக் கொடுக்க முடியாது.

ஒருவருடைய உண்மையான தன்மை அவருக்குள்ளே இருக்கும் மெய்ப்பொருளாகும்; அதை உணர்வதுதான் மோட்சம் ஆகும். அதை விடுத்து வெளியிலே இந்தப் பெயரைச் சொல்லி வியாபாரம் செய்பவர்களையெல்லாம் நம்பக்கூடாது.

ஒரு விமானத்திலே இவ்வளவு தான் 'பாரம்' ஏற்ற வேண்டும் எனக் கணக்கு இருக்கிறது... அதற்கு மேலே ஏற்றமாட்டார்கள்.

ஒரு இயந்திரத்திற்கு இவ்வளவு கட்டுப்பாடு இருக்கும் போது, ஆன்மீகத்திலே ஈடுபாடுடையவர்களுக்கு இது எந்த அளவிற்கு அவசியம் என்பதை நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

மிருகங்களுக்கு வெளிப்பார்வைதான் இருக்கிறது. உள் பார்வை கிடையாது.

பச்சைப்புல் எங்கேயாவது கண்ணுக்கு நேரில் தென்பட்டால், பசுமாடு அங்கே போய்விடும். அது யாருடைய நிலம்... அங்கே போவது சரியா என்றெல்லாம் யோசிக்காது.

மனிதத்தன்மை அப்படிப்பட்டதல்ல. இவன் உள்பார்வை பார்க்க வேண்டும்... அங்கே இருக்கும் சுமைகளைத் தூக்கியெறிய வேண்டும். அப்போதுதான் ஆகாயத்திலே பறக்க முடியும். மோட்ச பாக்கியத்தை பெற முடியும்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மும்மொழியாற்றலை அதிகரிப்பதற்கு அரசாங்கம் உதவிகளை வழங்கும்

## வடக்கு மாகாண ஆளுநர் உறுதி

மொழியாற்றலை அதிகரிக்கத் தேவையான உதவிகளை அரசாங்கம் வழங்கத்தயாராகவுள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இரண்டாம் மொழிக் கல்விக்கான கல்லூரி மாணவர்கள் வடமாகாண ஆளுநர் சந்திப்பு நேற்று கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை

இந்த நாட்டில் மும்மொழியினையும் விருத்தி செய்யும் நோக்குடன் பல வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கடந்த 2012 ஆம் ஆண்டை மும்மொழி ஆண்டாக பிரகடனம் செய்தார்.

இதனைவிட மும்மொழியையும் விருத்திசெய்யும் நோக்குடன் 5 ஆண்டு திட்டம் ஒன்றையும் தயாரித்து சமர்ப்பித்துள்ளார். மொழியாற்றலை அதிகரிக்கத் தேவையான உதவிகளை வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளது என்பதை இந்த இடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். மும்மொழியாற்றலை விருத்தி செய்யும் திட்டம் வெற்றி பெற இந்தநாட்டிலுள்ள சகல இனத்தவர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தாய்மொழி தமிழாக இருந்தால் அவர்கள் இரண்டாம் மொழியான சிங்களத்தையும் சிங்களமொழி தாய் மொழியாக இருந்தால் அவர்கள் இரண்டாம் மொழியான தமிழினையும் கற்கவேண்டும்.

சிங்களவர்களும் ஆங்கில மொழியைக் கற்கவேண்டும். அத்தோடு தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இணைப்பு மொழியாக ஆங்கில மொழியுள்ளது. அந்த நிலை மாற்றப்பட்டு சிங்களவர்களுக்கு தமிழ் மொழியும் தமிழர்களுக்கு சிங்கள மொழியும் தொடர்பாடல் மொழியாக மாறவேண்டும். இளைஞர்களைப் பொறுத்தவரை ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவர்களாகவுள்ளனர்.

மேலும் எனது தாய்மொழி சிங்களம் என்றபோதிலும் தமிழ்மொழியை கற்கவேண்டும். அந்தமொழியில் உங்கள் முன்னிலையில் பேசவேண்டும் என்ற ஆர்வம் உள்ளது.

எல்லோருடனும் தொடர்பாடலை ஏற்படுத்த மொழி தடையாகவுள்ளது. எனவேதான் மும்மொழியையும் விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் மும்மொழித் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிங்களவராக இருக்கலாம். தமிழராக இருக்கலாம். சமுதாயத்தில் சிறந்த இடத்திற்கு வரவேண்டுமானால் மொழி அறிவு அவசியம். மும்மொழியையும் திறம்பட கற்று தேர்ச்சியுடையவர்களாக உங்களை மாற்றிக்கொள்ளுங்கள்.

மேலும் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் இரண்டாம் மொழிக்கல்வி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியிலுள்ள அதாவது சிங்களப் பாடசாலைகளில் தமிழ்மொழியும் தமிழ்ப்பாடசாலைகளில் சிங்கள மொழியும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் இந்த நடைமுறை அமுல் படுத்தப்பட்டு வருகின்றது.

வடபகுதி பாடசாலைகளில் சிங்கள மொழியான இரண்டாம் மொழி குறுகிய காலப்பகுதியில் நடைமுறைக்குகொண்டுவரப்பட்டபோதும் தென்பகுதியில் தமிழ்மொழி கற்பிக்கும் நடைமுறை பல மாதங்களுக்கு முன்பே கொண்டு வரப்பட்டுவிட்டது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் உரையாற்றிய ஆளுநர் தமிழ் மொழியிலும் உரையாற்ற விரும்புவதாக தெரிவித்தார். தமிழில் உரையாற்றும்போது இந்த நாட்டில் வாழும் நாம் எல்லோரும் மும்மொழியையும் கற்றுக் கொள்ளவேண்டும். நன்றிவணக்கம் எனக்கூறியும் மும்மொழியிலும் உரையாற்றியதிருப்தியுடன் தனதுஉரையினை முடித்துக் கொண்டார். இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், இந்து, பௌத்த கலாசார பேரவையின் தலைவர் இராமச்சந்திரன் உள்ளிட்டபலர் கலந்துகொண்டனர். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 240 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 60-80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 220 | 250 |
| தக்காளி | 100-110 | 160 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 40 | 60 | 60 |
| கரட் | 100 | 80 | 120 | 140 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 50 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 80-140 | 100 | 130-140 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 150 | 180 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 60 | 70 |
| பயற்றங்காய் | 150 | 160 | 140 | 140 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 140 |
| பீற்றூட் | 100 | 80 | 120 | 120 |
| கறிமிளகாய் | 200 | 300 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 500 | 700 | -- | -- |
| போஞ்சி | 70 | 120 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 160-200 | 140 | -- |
| கீரை - 1 பிடி | 7-12 | 30 | 20-30 | 30 |
| தேசிக்காய் | 40 | 90 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 40 | 40-50 | 35-40 |
| இராசவள்ளி | 110-120 | 70 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 40 | 100 |

# இராசி பலன்

12.01.2013

(மார்கழி 28, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு

பிரதமை பின்னிரவு 12.08 மணிவரை

உத்தராடம் முன்னிரவு 11.04 மணிவரை

இராகுகாலம் 9.33-11.03 மணிவரை

சுபநேரம் 3.33-5.03 மணிவரை

**மேடம்** தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு, நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, தடைகள் அகன்று காரியங்கள் கைகூடும், உடல் நலம் சீராகும்.

**மிதுனம்** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படலாம், குடும்பத்தில் சிறு சிறு மனஸ்தாபங்கள் தோன்றலாம், பிரயாண பயமுண்டு, போசனசுகமுண்டு.

**கடகம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்,முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிங்கம்** ஆரோக்கியமான நாள், சுவாரஸ்யமான நாள், தொழில் முன்னேற்றமுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பகைவர்கள் விலகுவர்.

**கன்னி** சுப செய்திகள் வந்து சேரும் நாள், சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள், மாமன், மைத்துனர் வழியில் உதவிகள் வந்து சேரலாம், பொது இடங்களில் ஆக்கம் காட்டுவீர்கள்.

**துலாம்** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம்கூடும், செய்தொழிலில் மேன்மையுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், பாராட்டும் புகழும் கூடும், தொழில் முன்னேற்றத்திற்கு பெண்வழி ஒத்துழைப்பு கிடைக்கும், முயற்சிகள் கைகூடும்.

**தனுசு** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, நீண்டநாளைய விருப்பங்கள் நிறைவேறும்.

**மகரம்** நீண்ட நேரம் பணிபுரிய நேரிடலாம், கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கும்பம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, வழிபாட்டில் நாட்டம் செல்லும், தொழில் வளர்ச்சி கருதி அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கேட்பீர்கள்.

**மீனம்** தேவைகள் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும், போசன நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### கவனிப்பாரற்ற நிலையில்

# கொடிகாமம்- பருத்தித்துறை வீதி பேருந்து தரிப்பிடம்

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமம்- பருத்தித்துறை வீதியில் உள்ள பஸ் தரிப்பிடமானது கவனிப்பாரற்ற நிலையில் உள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


இப்பேருந்து தரிப்பிடத்தினை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் பொதுமக்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள் என ஏராளமானவர்கள் பயன்படுத்துகின்றனர்.

இப்பேருந்து தரிப்பிடத்தின் பின்புறத்தில் வெற்று பியர் ரின்கள், பொலித்தீன் பைகள் போன்றன காணப்படுவதால் நீர்தேங்கி நின்று டெங்கு நுளம்பு பரவக்கூடிய நிலைமை காணப்படுகின்றது.

இப்பேருந்து நிலையத்திற்கு அருகில் மலசலகூடம் உள்ளபோதிலும் அதனை பயன்படுத்தாது இப்பேருந்தின் பின்புறத்தில் சிறுநீர் கழிப்பதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பேருந்து நிலையத்திற்குள்ளே துவிச்சக்கரவண்டி, மோட்டார்வண்டி போன்றவற்றை நிறுத்துவதால் பயணிகள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பேருந்து தரிப்பிடத்திற்கு மின்சார வசதி இன்மையால் இரவு நேரங்களில் இருள் சூழ்ந்த பகுதியாக காணப்படுவதோடு சமுதாய சீர்கேடு போன்ற நிகழ்வுகள் இடம்பெற வழிகோலுகின்றது. எனவே, இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-29)



நன்றி: ஐலன்ட்

## தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியின் ஹப்பன் புலமைப்பரிசில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாண மேற்தரக்கிளை பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

தேசிய சேமிப்பு வங்கி வடபகுதி கிளைகளில் சிறுவர் சேமிப்பு கணக்கினை நடைமுறைப்படுத்தி வரும் மாணவர்களை கடந்த 2012 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்கள் தமது விபரங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் அந்தந்தக் கிளைகளில் (கணக்கு நடைமுறையில் உள்ள கிளை) பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

# மீசாலை ஊரெல்லை வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

தென்மராட்சிப்பகுதி மீசாலை பிரதான வீதியையும் டச்சு வீதியையும் இணைக்கும் வடக்குத் தெற்கு முதலாவது வீதி (ஊர் எல்லை வீதி நீண்ட காலமாக திருத்தப்படாமல் இருப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியானது கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக எவ்வித திருத்த வேலைகளும் ,இடம்பெறவில்லை. இவ்வீதியால் தினமும் பலர் பயணம் செய்கின்றனர். இவ்வீதி திருத்தப்படாமல் உள்ளதால் தினமும் மக்கள் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

மிகக்குறைந்த நீளமான ஒன்றரை கிலோ மீற்றர் நீளமான இவ்வீதியே இதுவரை திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. அத்துடன் தற்பொழுது பெய்து வரும் மழையினாலும் இவ்வீதியூடாக பயணிப்போர் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவை தொடர்பாக சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளுக்கும் அறிவித்தும் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாக தெரியவில்லை. அத்துடன் பருத்தித்துறையில் இயங்கும் வீதி அபிவிருத்தித்திணைக்கள அலுவலகத்திலும் நேரடியாகச் சென்று முறையிட்டுள்ளோம். அதற்கும் அலட்சியமான பதிலே கிடைத்தது.

இதனையடுத்து சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர். அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

இந்தவீதி நகரசபைக்கு எல்லையாக இருக்கும் முதல் வீதியாகும். இந்த வீதியை நல்ல முறையில் வைத்திருப்பது நகரசபையின் கடமையும் மக்களின் கடமையும் ஆகும். ஆகையினால் எமது நகர சபையினரின் சகல வீதிகளும் நல்ல முறையில் திருத்த வேலைகள் நடைபெற்று முடிந்து சிறந்து விளங்கும் போது எமது வீதி மட்டும் இவ்வளவு பழுதடைந்த நிலையில் இருப்பது மிகவும் வேதனையளிக்கிறது.

எனவே, எமது மக்களின் அன்றாட பிரச்சினையாக விளங்கும் போக்குவரத்துக் கஷ்டங்களை நீக்குவதற்கு தங்கள் அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் எமது வீதி பற்றி நீங்கள் நேரடியாகத் தலையிட்டு உரிய அதிகாரிகளுடன் கதைத்து எமது வீதியை புனரமைத்துத் தரும்படி கோரிக்கை விடுக்கின்றோம் என்றுள்ளது. (அ-9)

# அல்வாய் மடத்தடியில் விபத்து; இருவர் படுகாயமடைந்தனர்

அல்வாய் மடத்தடி பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற முச்சக்கர வண்டி- மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அல்வாய் கிழக்கு மடத்தடி சந்தியில் இருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளும் முச்சக்கரவண்டியும் மோதிய விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த அல்வாய் வடக்கு மகாத்மா வீதியைச் சேர்ந்த கி.அருமைத்துரை (வயது 55), மோட்டார் சைக்கிளில் பயணித்த அல்வாய் கிழக்கு கொலணி பகுதியைச் சேர்ந்த அ.நிறோஜன் (வயது 21) என்ற இளைஞரும் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24)

# மருந்தாளர்கள் பணிப்புறக்கணிப்பு; நோயாளர்கள் பெரும் அவதி

(யாழ்ப்பாணம்)

மருந்தாளர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினால் நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

அரச வைத்தியசாலைகளில் பணி புரியும் மருந்தாளர்கள் நேற்றுக்காலை 8 மணி தொடக்கம் இன்று காலை 8 மணிவரை பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதென தீர்மானித்து நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்திற்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் மருந்தாளர்களும் ஆதரவினைக் கொடுத்தனர்.

நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 12 கோரிக்கையினை முன்வைத்து கடந்த 9 ஆம் திகதி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினை ஆரம்பித்தனர்.

இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தினால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியதோடு தேவையற்ற அலைச்சல் எனவும் விசனப்பட்டுக் கொண்டனர். (அ-6)




# மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களுக்கு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அனர்த்த முகர்மைத்துவக் குழுக்களை வலுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சகல மாவட்டங்களிலும் உள்ள அனர்த்த முகாமைத்துவ குழுக்களை வலுப்படுத்தும் நோக்குடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் இந்த விசேட கலந்துரையாடல் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்பட்டு வருவதோடு எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்திலும் அவரது பங்கேற்புடன் நடைபெறவுள்ளது.

நாட்டிலுள்ள பல மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் சரிவர இயங்கவில்லை. இதனைக் கருத்தில் கொண்டே இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனைவிட வறுமையற்றதோர் இலங்கை என்னும் தொனிப்பொருளில் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதோடு விவசாயம், கால்நடை வளர்ப்பு, கடற்றொழில் போன்ற தொழிற் றுறை சார்ந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-6)

# வெள்ளிக்கிழமைகளில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள்

## மக்கள் குற்றச்சாட்டு

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமம், வரணி போன்ற பகுதிகளில் வெள்ளிக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதாகவும் இதனால் அறநெறி பாடசாலைகள் இயங்க தடையாக இருப்பதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெள்ளிக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களை நிறுத்தி அறநெறி பாடசாலை வகுப்புகளையே நடத்த வேண்டும் என்பது இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்புரையாகும்.

ஆனால் இதனை தனியார் கல்வி நிலைய நிர்வாகத்தினர் கடைப்பிடிப்பதில்லை.

எனவே இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து வெள்ளிக்கிழமைகளில் அறநெறி பாடசாலைகள் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-29)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

தாளையடி வடக்கு தாளையடியைச் சேர்ந்த ஸ்ரனிஸ்லோஸ் மேர்சிலின் றொமியா 916121539V என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (அ-9)

## திருவாசக முற்றோதல்

நல்லூர் கமலாம்பிகை சமேத கைலாயநாதர் சிவன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் திருவாசக முற்றோதலும் திருக்கோவை பாராயணம் செய்தலும் நடைபெறவுள்ளதாக சிவன் ஆலயக்குரு கிருஷ்ணானந்த சர்மா அறிவித்துள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆயிரத்து 821 பட்டதாரிகளுக்கு நிரந்த நியமனம் வழங்கப்படும்

## 10 ஆயிரம் தமிழ் பட்டதாரிகள் உள்ளடக்கம்

50 ஆயிரத்து 821 பட்டதாரிகளுக்கு அரச சேவையில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இன்று சனிக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள விசேட நிகழ்வில் இவர்களுக்கான நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

10 ஆயிரம் தமிழ் பட்டதாரிகள் உட்பட 50 ஆயிரத்து 821 பேருக்கும் விரும்பிய இடங்களில் விரும்பிய துறைகளில் நிரந்தர நியமனம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என நேற்று முன்தினம் அமைச்சில் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

அமைச்சரவை அனுமதிக்கு அமைய 50 ஆயிரத்து 824 பட்ட தாரிகளும் கடந்த வரு டம் அரச சேவையில் இணைக்கப்பட்டு ஒருவருட பயிற்சியைப் பூர்த்தி செய்த அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. அவர்களுக்கு விரும்பிய மாவட்டத்தில்விரும்பியதுறையில் நிரந்தர நியமனம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து ள்ளது. பயிற்சிகளைப்பெற்றஅனைவரையும் இம்முறை சாதாரண நீதிகளுக்கு மாறாக மீண்டும் விண்ணப்பம் கோராமல், நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தாமல் நிரந்தர நியமனம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. கடந்த காலங்களில் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் போது காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. பட்டதாரிகளை அவர்களின் மாவட்டங்களிலேயே நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மூன்று இனங்களையும் சேர்ந்த மூன்று பட்டதாரிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறும் விசேட நிகழ்வில் நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கவுள்ளார் என்றார். (அ-2)




**நீங்கள் விரும்பிய இடங்களில்....**

காணி-வீடுகளை வாங்கித் தருவதற்கும், விற்றுக் கொடுப்பதற்குமான நம்பிக்கையான ஒரே நிறுவனம்

Real Estate

**ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்**
Rajaluxmy Enterprise

26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
தொ.பே: 0779994603, 0215684810
E-mail:nrluxmy@gmail.com (இ)



**The Jaffna Academy & School of Technology and St. John's College Jaffna**

**PRELIMINARY COURSE IN ENGLISH**

- A three-month English Course for School leavers/Job seekers
- The course content comprises the four skills - Listening, Speaking, Reading & Writing.
- Evaluation & Award of certificate at the end of the course.
- Free Handouts.

*Commencement: 16th Jan 2013*

*Lessons on Weekdays from 3.30 - 5.30 p.m.*

(சி/2100)





வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**மன வளக்கலை யோகா**

**உடல் நலம், மன நலம், உயிர்வளம் பெருக்க யோகாசன பயிற்சிகள்**

ஒவ்வொரு மாதமும் 15 ஆம் 16 ஆம் 17 ஆம் திகதிகளில்
• பயிற்சிகள் நடைபெறும். பயின்று பலன் பெறுங்கள்

**இடம் :** அருளகம், 14/4, முதலாம் ஒழுங்கை, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (இ)

**நேரம் : 4.30 மணி**

தொடர்புகளுக்கு : 021 320 2286, 0774528039


## அறிவித்தல்

**எமது சங்கத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் விபரம்**

**தலைவர் :** திரு வீ. ராஜ்குமார்
**உப தலைவர் :** திரு. மு.தர்மகுலராசா
**செயலாளர் :** செ.யோகநாதன்
**உப செயலாளர் :** திரு.சி.சிறீதரன்
**பொருளாளர் :** திரு. பா.றஞ்சித்குமார்
**நிர்வாக உறுப்பினர்கள் :** திரு. சி. அன்ரன் லோறன்ஸ், திரு. ப. யூட்ஜெயக்குமார், திரு. த.சுகந்தன், திரு.செ. ஜெயசீலன்,
**போசகர் :** திரு. மா. சிவசுப்பிரமணியம்

### வேண்டுகோள்

- ❑ வாடகைச் சேவையிலீடுபடும் ஓட்டோக்கள் எமது தலைமைச் சங்கத்திலோ அல்லது தமது பகுதிகளுக்குரிய கிளைச் சங்கங்களிலோ ஓட்டோவிற்குரிய ஆவணங்கள், தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் இவற்றின் பிரதிகளை ஒன்று சமர்ப்பித்து பதிவுசெய்து சேவையில் ஈடுபடவேண்டும்.
- ❑ தலைமைச்சங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அங்கத்துவ அடையாள அட்டையை உடன் வைத்திருத்தல்வேண்டும்.
- ❑ ஓட்டோக்களுக்குரிய தரிப்பிடக் குறியீடுகளை ஓட்டோவில் பொறித்திருத்தல் வேண்டும்.
- ❑ மாதாந்த சந்தாப்பணம் செலுத்தி தமது அங்கத்துவத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- ❑ தரிப்பிடங்களில் அமைதியும் கட்டுப்பாடுகளையும் அனுசரித்து தரிப்பிடங்களையும் அசிங்கப்படுத்தாதிருத்தல்வேண்டும்.
- ❑ ஓட்டோ சேவையின்போது சாரதிகள் கட்டைக் காற்சட்டை அணியாது, அநாகரிக ஆடைகள் அணியாது, தூய உடையணிந்து சாரதிகளும் புனிதமாயிருத்தல் வேண்டும்.
- ❑ ஓட்டோ சேவையின்போது மது அருந்திய நிலையில் சேவையிலீடுபட்டு, விபத்துக்கள், விபரீதங்களை உருவாக்கி பயணிகளுக்கும், பொதுமக்களுக்கும் ஏனைய போக்குவரத்துச் சாதனங்களுக்கும் அச்சுறுத்தலாக இராது மது அருந்திய நிலையில் சேவையீடு படாதிருத்தல்வேண்டும்.
- ❑ மது அருந்திய நிலையில் ஓட்டோ தரிப்பிடங்களுக்கும் சமுகமளித்தல் ஆகாது. ஓட்டோ சேவையின்போது சாரதிகள் புகைத்தல், வெற்றிலை போடுதல் என்பவற்றாலும் பயணிகளுக்கு இடையூறு ஏற்படும். எனவே சேவையின்போதோ, தரிப்பிடங்களிலோ புகைத்தல், வெற்றிலை போட்டு உமிழ்நீரை தரிப்பிடங்களில் துப்புதல் என்பவற்றை தவிர்க்க வேண்டும்.
- ❑ ஓட்டோ சேவைகள் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளை சுமுகமாக தீர்க்கவேண்டும். தரிப்பிடப் பொறுப்பாளருடன் அனுகலாம் அல்லது அவரூடாக சங்கத்துடன் தொடர்புகொண்டு தீர்வு காணலாம். இதைவிடுத்து வாக்குவாதங்களை ஏற்படுத்தலும் கைகலப்பில் ஈடுபடுவதையும் தவிர்க்கவேண்டும்.
- ❑ பயணிகளிடம் கட்டண அறவீட்டில் கண்ணியமாக நடந்து பயணிக்கு சுகமான பயணத்திற்கு தாங்கள் உதவவேண்டும்.
- ❑ சமூகவிரோத நடவடிக்கைகளுக்கு தாங்களும் தங்கள் ஓட்டோ சேவையும் துணை போகலாகாது.

மேற்காட்டப்பட்டுள்ளவற்றைக் கவனத்தில் கொள்ளாது கண்டவாறு, கட்டுப்பாடின்றி ஓட்டோ சேவையிலீடுபட்டு சாரதிய போக்குவரத்து விதிமுறைகளை மீறி செயற்பட்டு தங்கள் ஓட்டோ தொழிலுக்கும் ஆபத்தினை ஏற்படுத்தாது பிறருடைய விமர்சனங்களையும் ஏற்படுத்தாது உயிரைக் காவுகொள்ளும் விபத்துக்களைத் தவிர்த்து நாமும் பாதுகாக்கப்பட்டு இச்சேவையின் மூலம் நற்பெயரும் நற்பயனும் அடைவோமாக.


இவர்களுக்கு **மணமகள் தேவை** — **கல்யாண மாலை** — இவர்களுக்கு **மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>உயரம்: 5' 3"<br>கி.பா: 32, 7இல் செவ்.<br>தொழில்/ தகைமை : A/L, அரச தொழில்<br>தொ. இல : B -981 | பிறப்பு: 1970 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>உயரம்: 5' 2"<br>கி.பா: 81, 1இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L<br>தொ. இல : G - 970 |
| பிறப்பு: 1981 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5' 6"<br>கி.பா : 14.5, 2இல் செவ்.<br>தொழில்/ தகைமை : Software Engineer (கணணிப்பொறியியலாளர்)<br>தொ. இல : B - 968 | பிறப்பு: 1964 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5' 7"<br>கி.பா: 29 1/2<br>தொழில்/ தகைமை: O/L<br>எ.பா. விவாகரத்தானவர்களும் ஏற்கப்படும்<br>தொ. இல : G - 976 |
| பிறப்பு: 1980 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>உயரம்: 5' 8"<br>கி.பா: 132, 1.இல் செவ்.<br>தொழில்: Diploma in Physical Education<br>கிரிக்கட் மெய்வல்லுனர் நடுவர்.<br>தொ. இல : B - 954 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>உயரம்: 5' 7"<br>கி.பா: 14, 2இல் செவ்<br>தொழில்/ தகைமை: O/L<br>தொ. இல : G - 977 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>உயரம்: 5' 10", 2 இல் செவ்.<br>கி.பா: 15<br>தொழில்/ தகைமை:BSc, BBd, Teacher<br>தொ. இல : B - 974 | பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 2<br>உயரம்: 5' 3"<br>கி.பா: 53<br>தொழில்/ தகைமை: BA, Teacher<br>எ.பா: சைவபோசனம்<br>தொ. இல : G - 978 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விடுதலைப்புலி என்றால் என்னையும் விசாரிக்கலாம்

## விக்கிரமபாகு சவால்

நான் விடுதலைப்புலியென்று கூறினால் ஒரு தடவையேனும் விசாரணை மேற்கொள்ளவில்லையே .அவ்வாறு துணிவு இருந்தால் என்னிடம் வந்து பொலிஸார் விசாரணையை மேற்கொள்ளலாம் என்று புதிய இடது சாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நான் விடுதலைப்புலியா? நான் பிரபாகரனுடன் ஒன்றாக கைகோர்த்துக்கொண்டு திரிந்தேன்.அவ்வாறு நான் விடுதலைப்புலி என்று கூறினால் ஒரு தடவையேனும் விசாரணை மேற்கொள்ளவில்லையே. அவ்வாறு துணிவு இருந்தால் என்னிடம் வந்து பொலிஸார் விசாரணையை மேற்கொள்ளலாம்.

அரசாங்கம் என்னை புலியென்று கூறுகின்றது.நான் பிரபாகரனோடு கைகோர்த்துக் கொண்டு ஒன்றாகவே அலைந்து திரிந்தேன்.

அவ்வாறு நான் விடுதலைப்புலியென்றால் இதுவரை ஒருநாள் கூட என்னை விசாரணைக்குட்படுத்தவில்லை.என்னை விசாரிக்க வரும் பொலிஸாரையும் பார்க்கத்தான் போகின்றேன்.

நாட்டின் பல இடங்களில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு காரணமாக இருந்த சிலர் இன்று அரசாங்கத்தில் இராஜபோக வாழ்க்கை நடத்துகின்றனர்.

இதனை விடுத்து என்னை விடுதலைப் புலி என்று கூறுவது வேடிக்கையானது என்றார். (அ-2)

# திவிநெகுமவுக்கு ஆதரவளித்தவர்கள் தமிழ்மக்கள் உரிமை பற்றி பேசமுடியாது

## ஜ.ம.மு. ஊடக செயலாளர் பாஸ்கரா

திவிநெகும சட்ட மூலத்திற்கு ஆதரவு தெரிவித்த சிறுபான்மை இனத்தைச் சார்ந்த கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இனிவரும் காலங்களிலாவது சிறுபான்மை சமூகத்தின் உரிமை பற்றி பேசி சமூகத்தை ஏமாற்றுவதை கைவிடவேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஆண்டாண்டு காலமாக தமது சொந்த நலனுக்காக அரசுடன் இருந்து தமது இருப்பை தக்கவைத்துக் கொள்ளும் சிறுபான்மை இனக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு சாதகமாக செயற்பட்டதன் பின் மக்கள் நம்பும்படி பசுப்பு வார்த்தைகளைத் தெரிவித்து வந்தது புதிய விடயம் அல்ல.

அதேவேளை மாகாணசபை தமிழ் பேசும் மக்களின் தீர்வோ அன்றி குறைந்த பட்ச சலுகையோ இல்லை என்ற வேளையிலும் அதில் உள்ள அற்பசொற்ப அதிகாரங்களையும் எடுப்பதற்கு ஆதரவு தெரிவித்தல் என்பது தமிழ் பேசும் மக்களின் தலை விதி. எப்படிப் போனாலும் தமது தலைவிதி நன்றாக இருந்தால் சரி என்ற நிலைப்பாட்டில் ஆதரவு தெரிவித்த சிறுபான்மை இனக்கட்சி உறுப்பினர்கள் உள்ளத்தை அவர்களின் செயல் தெட்டத்தெளிவாக மக்களுக்கு புடம் போட்டு காட்டுகின்றது.

எனவே எதிர்வரும் காலங்களில் ஆதரவு தெரிவித்த சிறுபான்மைக் கட்சிகள் தாம் தனித்துவத்துடன் இயங்குகின்றோம். இல்லையேல் தமிழ்பேசும் மக்களின் உரிமை செயற்பாட்டை நாம் என்றும் காட்டிக் கொடுத்ததில்லை என்று அறிக்கை விட்டுக் கொண்டு தாமும் குழம்பி மக்களையும் குழப்பாமல் தாம் அரசு சார்பு நிலைப்பாடு என்ற ஒரே நிலைப்பாட்டில் இருந்தால் மக்கள் தமது செயற்பாடுகள் நிதானத்துடன் செயற்பட வசதியாகவும் உதவியாகவும் உலகத்திற்கு தெளிவான செய்தியை சொல்லவும் வசதியாக இருக்கும். (அ-2)



கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள சிறுவர் உலகம் முன்பள்ளியின் கலைநிகழ்வு அண்மையில் இணுவில் அறிவாலயத்தில் நடைபெற்றது.இதில் மாணவர்களின் கலை நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

# என்னை எப்போது விடுவித்து வீட்டுக்கு அழைத்து செல்வீர்கள்!

## ரிஸானாவின் கடைசி வார்த்தை

மரணதண்டனையிலிருந்து ரிஸானா நபீக்கின் உயிரைப் பாதுகாப்பதற்காக இலங்கையும் சவுதி அரேபியாவும் மேற்கொண்ட இறுதிக்கட்ட முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்துள்ளன என ஜனாதிபதியின் மத்திய கிழக்கு விவகாரங்களுக்குப் பொறுப்பான இணைப்புச் செயலாளர் காதர் மஸீர் மௌலானா தெரிவித்துள்ளார்.

ரிஸானா நபீக்கை மரணதண்டனையிலிருந்து விடுவிப்பதற்காக சவுதி அரேபியாவில் தங்கியிருந்து செயற்பட்டு அங்கிருந்து நாடு திரும்பியுள்ளபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னரான இறுதிக்கட்ட முயற்சிகள் பற்றி அவர் கூறுகையில்,ரிஸானா நபீக்குக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படவிருப்பதாக தகவல் கிடைத்தும் அது தொடர்பாக எமது ஜனாதிபதியின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வந்தேன்.

அச்சமயம் ஜனாதிபதி ரிஸானாவின் உயிரைக்காப்பற்ற உச்சகட்ட முயற்சிகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கினார்.

அத்தோடு ஒரு தந்தையின் ஸ்தானத்திலிருந்து ரிஸானாவின் உயிரைப்பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்படி சவுதி அரேபியாவிடம் ஜனாதிபதி மஹிந்த மீண்டும் வேண்டுகோள் விடுத்தார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் சவுதி அரேபியாவில் கடமையாற்றும் இலங்கைக்கான தூதுவர் அஹமட் ஏ.ஜவாத்துடன் நானும் இணைந்து ரிஸானா பணியாற்றிய வீட்டு உரிமையாளரின் கோத்திரத் தலைவரான ஷேஹ் பைசல்ஹுமைத் உத்தைபியையும் உதவி தலைவரையும் நேரில் சென்று கடந்த 7 ஆம் திகதி சந்தித்தோம். இச்சந்திப்பு சுமார் இரு மணித்தியாலங்கள் கோத்திரத் தலைவரின் இல்லத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பின் போது ரிஸானாவின் உயிரைப் பாதுகாக்க உதவுமாறு அதற்கான நியாயங்களை அவருக்கு எடுத்துக்கூறினோம்.

எமது பக்க நியாயங்களை செவியேற்ற கோத்திரத்தலைவர் இவ்விவகாரம் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டது.உங்கள் நாட்டு தலைவர் (ஜனாதிபதி) இவ்விடயத்தில் எடுத்த விஷேட கவனத்தையிட்டு நாம் ரிஸானாவை மரண தண்டனையிலிருந்து பாதுகாக்கவென் பெரிதும் முயற்சி எடுத்தோம். ஆனால் உயிரிழந்த குழந்தையின் தாய் மன்னிப்பு வழங்க முடியாது என்பதில் பிடிவாதமாகவிருந்தார் இதனால் எமது முயற்சி கைகூடவில்லை.

அதேநேரம் இவ்விவகாரம் தொடர்பாக இக்குழந்தையின் தந்தையை முதலில் அழைத்துப் பேசினோம்.அங்கு திருப்திகரமானபதில் கிடைக்கவில்லை.அதனால் அத்தந்தை கடமையாற்றும் நிதியமைச்சின் உயரதிகாரியை அழைத்துப் பேசி அவரூடாகவும் சமரச முயற்சியை மேற்கொண்டோம். அதுவும் பலனளிக்கவில்லை.

கடந்த 5 ஆம் திகதி நான் ரிஸானா நபீக்கை அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கு நேரில் சென்று அவரைச் சந்தித்தேன். அச்சமயம் அவர் மௌலானா என்னை வந்து பார்த்து விட்டுச் செல்கிறீர்கள். எப்போது என்னை விடுவித்து அழைத்துச் செல்வீர்கள் எனக் கேட்டார் .அச்சமயம் அவருக்கு ஆறுதல் கூறினேன்.

ரிஸானா சிறையில் இருக்கும் பொழுது போக்காக ரேந்தை பின்னக்கூடியவராக இருந்தார். அதனால் அவருக்கு தேவையான நூல் வகைகளையும் அன்றும் எடுத்துக் கொடுத் விட்டே வந்தேன்.

இதேவேளை எமது ஜனாதிபதியின் வேண்டுகோளை கௌரவிக்கும் வகையில் சவுதி அரேபிய இளவரசர் ஸல்மான் குறித்த பெற்றோருடன் தொடர்பு கொண்டு நோய்வாய்ப் பட்டிருக்கும் உங்களது குழந்தையயை எனது சொந்த செலவில் ஜேர்மனிக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளித்து குணப்படுத்தி விடுகின்றேன் உயிரிழந்துள்ள பிள்ளைக்கு இழப்பீட்டுத் தொகையையும் வழங்குகின்றேன். ரிஸானா நபீக்குக்கு மன்னிப்பு வழங்கி விடுமாறு கூறினார். இச்செய்தியை நானே அக்குடும்பத்தினருக்குப் பரிமாறினேன். அப் பெற்றோரின் குழந்தையொன்று சவுதி அரேபியாவிலேயே குணப்படுத்த முடியாத நோயொன்றுக்கு உள்ளாகியுள்ளது.

இதேநேரம் இளவரசர் ஸல்மான் பெண்கள் குழுவொன்றை குறித்த குழந்தையின் தாயிடம் அனுப்பி ரிஸானாவுக்கு மன்னிப்பு வழங்குமாறு கேட்டார்.

எல்லா முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.

என்றாலும் சவுதி அரேபியா சட்டப்படி ஒரு தீர்ப்பு வெளியாகி அத்தீர்ப்பு மூன்று மாத காலத்திற்குள் நிறைவேற்றப்பட்டு விடும். ஆனால் ரிஸானா விவகாரத்தில் எமது ஜனாதிபதி விஷேட கவனம் செலுத்தியதன் பயனாக அவருக்கான தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு சவுதி அரேபிய அரசு ஏழு வருடங்கள் தாமதித்தது. இதனூடாக குறித்த குழந்தையின் பெற்றோரிடம் மனமாற்றம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை.

இவ்வாறான நிலையில்தான் அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்று மிகுந்த மனவேதனையுடன் அவர் கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கள் எல்லோரும் ஒன்றிணைவோம்; இந்து சமயத்தை வளர்த்தெடுப்போம்

## சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த தினம் இன்று


நரர் என்றால் மனிதர் எனப்பொருள் படும். தேவர்களுக்குத் தலைவன் இந்திரன் போல மனிதர்களுக்குத் தலைவனாக 1863 ஆம் ஆண்டு தை மாதம் மகரஜோதியன்று வங்காளத்தில் அவதரித்தவரே நரேந்திரனாவார். இங்கிலாந்து நாட்டினர். இலங்கை-இந்திய நாடுகளையெல்லாம் நசுக்கி நம்மை அடிமையாக்கி நம் கோயில்களை இடித்தழித்து அரசாண்ட காலத்தில் வீறுகொண்ட வீரத்துறவியாக இந்துக்களுக்கோர் உதய சூரியனாக எழுந்தவர் நரேந்திரன்.

ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடராகி அவருடைய உபதேசத்தாலும் ஆன்மீக ஞானத்தாலும் இறைவனைக் கண்டுகளித்த பெரியார் விவேகானந்தர். இவர் உலகமே போற்றுகின்ற உத்தம ஞானியானார். 1833 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அமெரிக்க சிக்காக்கோவில் நடைபெற்ற சர்வமத மகாநாட்டின் மேடையை இந்துத் துறவியாக அலங்கரித்தவர். இந்து சமயத்தின் மேன்மைத் தன்மையையும் ஏனைய சமயங்களுக்கெல்லாம் தாய்ச்சமயமான பெருமைகளையும் நவீன விஞ்ஞானத்திற்கே அடிகோலிய மெய்ச்சமயம் என்பதையும் மேலை நாட்டினருக்கும் பிற சமயத்தவருக்கும் எடுத்து முழங்கினார்.

பல மாதங்கள் அமெரிக்காவில் வாழ்ந்து இந்து சமயத்தைப் பரப்பி பின்னர் லண்டனுக்கும் சென்று இந்து சமய சிந்தனைகளைப் பரப்பினார். பல பெரியோர்கள், பேராசிரியர்கள் மத்தியிலும் இந்து சமய திருநூல்களை எடுத்து விளக்கினார். இதனால் பலர் சுவாமி விவேகானந்தரின்பால் கவரப்பட்டனர். இவர்களில் கிறிஸ்தவர்களான பலரும் அடங்குவர்.

இந்து சமயத்தின் வலிமைக்கு மூலகாரணம் ஆன்மீகம்தான். இன்று ஆன்மீகம் குறைந்து உலோகாயுதம் அதிகரித்து பொருளுக்காக, பணத்துக்காக ஆன்மீகத்தை விட்டு இந்துக்கள் செல்கிறார்கள். இந்து சமயத்தின் உறுதியான தத்துவங்களையும் உண்மைகளையும் கற்கின்றார்களில்லை. கற்றுக் கொள்ளும்போதுதான் இந்து சமயத்தின் மகிமை புலப்படும் என இந்துக்களை விழிப்படையச் செய்தவர் சுவாமி விவேகானந்தர். இதற்காக இராமகிருஷ்ணமிஷனூடாகப் பல பாடசாலைகளை உருவாக்கியவர்.

சுவாமிஜி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 1897 ஆம் ஆண்டு தை மாதம் 25 ஆம் திகதி வருகைதந்து உரையாற்றிய பின்வரும் கருத்து நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டும். ஒருவனுக்கு ஒருவேளை உணவு கொடுத்தால் மறுவேளை பசிக்கும். மறுவேளை கொடுத்தால் மறுநாள் பசிக்கும். உணவைத் திரும்பத் திரும்பக் கொடுக்க வேண்டும். ஆனால், ஆன்மீகக் கல்வியை வழங்குங்கள், ஞானதானம் செய்யுங்கள், ஒவ்வொருவரும்



மேனிலை அடைந்து மறுபிறப்பின்றி சிவன் கழல் சேர்வார்கள் என கற்ற சமூகத்தினரிடையே கூறிய வார்த்தைகள் இன்றும் பொருந்துகின்றதல்லவா?

ஆனால், இன்று இந்துக்கள் இந்து சமய புனிதத் திருநூல்களை ஆழமாகக் கற்பது அருகி விட்டது. மறுதலையாக கீழ்த்தரமான புலனின்பங்களில் நாடுகிறார்கள். படித்தவர்களும் பகடைக்காய்களாக மாறிவிட்டார்கள். ஆன்மீகம் உயர்ந்த நிலை என்பதைப் போதிப்பவர்களும் இந்து சமயத் தலைவர்கள் என்று நினைப்பவர்களும் இன்று ஆன்மீகத்தை மறந்து விட்டார்கள்.

ஆன்மீக அறிவு, உணர்வு இன்றி லௌகீக அறிவு மட்டுமே செயற்படுவது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல் தீமையையே ஏற்படுத்தும். நாம் உண்மையான ஆன்மீக நெறியில் சமூகத்தை உருவாக்க வேண்டும்.

யாரும் தங்கள் மூளையைத் தாங்களே பார்த்தது கிடையாது. ஆனால், மூளை எல்லோரிடமும் இருக்கிறது. ஒரு அந்நியன் வந்து உனக்கு மூளை இல்லையே நீ பார்த்திருக்கின்றாயா? என்றதும் நம்மில் சிலர் ஓம் என்று எடுபட்டுக் கொள்கிறார்கள். தர்க்க ரீதியாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான் மறைகள், 28 சிவாகமங்கள், 12 திருமுறைகள், 14 மெய்கண்ட சாஸ்திரங்கள் போன்ற இந்து சமயத்திருநூல்களைப் போன்று உண்மையான, மற்றவர்களுக்கு தீங்கு பயக்காத நன்மையே தரும் நூல்கள் உலகில் உள்ளனவா? இல்லவே இல்லை. ஆனால், அவற்றை இன்று படிப்பது கிடையாது. நுனிப்புல் மேய்ந்து விட்டு வாழ்கிறார்கள். வடமொழி தெரிந்தவர்கள் இவற்றை ஆராய்ந்து இலகு நூல்கள் எழுத வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் கூறிய ஒரு மேலான சிந்தனையை நாம் சிந்திக்கும் காலம், செயற்படுத்தும் காலம் வந்து விட்டது. 40 மில்லியன் இங்கிலாந்து நாட்டு ஆங்கிலேயர்கள் 300 மில்லியன் தொகை கொண்ட இலங்கை, இந்தியர்களை 19 ஆம் நூற்றாண்டில் அடக்கி ஆண்டனர் என்றால் என்ன காரணம் தெரியுமா? இந்த 40 மில்லியன் ஆங்கிலேயர்களும் ஒருங்கிணைந்த சமூகமாக இருந்தனர். ஆனால், நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாகவே உள்ளோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு சங்கங்களைக் கொண்டிருக்கிறோம். இந்துக்கள் பலரை ஒன்றிணைத்தோமா இல்லையா?

இந்து இளைஞர்களே! யுவதிகளே! நல்ல எதிர்காலம் இந்துக்களுக்கு அமைய இருக்கின்றது. மேலை நாடுகளில் இந்துக்கள் இணைவதில் அதிகரித்து வருகின்றார்கள். இலங்கையிலும் இந்துக்களை ஒன்றிணைப்போம். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது பழமொழியல்ல. இன்று அவசியமான பொன்மொழி. நம்முடைய தமிழர்கள் எல்லோரும் ஒரு காலத்தில் இந்துக்களே. ஆனால், இன்று தமிழினம் குன்றிப்போகின்றது. தமிழர் கலாசாரம் கேள்விக்குறியாகின்றது. எதிலும் அந்நிய கலாசாரம், அந்நிய மோகம் , தமிழர் என்ற அடையாளத்தைத் தேடித்தான் காண வேண்டும்.

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனன ஆண்டிலாவது நாம் எல்லோரும் ஒன்றிணைவோம். இந்து என்பதில் எல்லா வேற்றுமைகளையும் மறந்து ஒன்று சேர்வோம். இந்து சமயப்பெரியார்களே ஒன்று சேரவாருங்கள். பக்தர்களே ஒன்று சேருங்கள். தொண்டர்களே ஒன்று சேருங்கள். உண்மையான ஆன்மீகவாதிகளாக இந்து சமயத்தை வளர்க்க முன்வாருங்கள் என்று வேண்டுகின்றோம். இது நல்ல தருணம். இந்துஸ்வயம், சேவாசங்கம் உலகம் முழுவதிலும் தன்கிளைகளைப் பரப்பியுள்ளது. இந்துக்களை ஒன்றிணைத்துக் கொள்கிறார்கள். நாமும் இணைவோம். சுவாமி விவேகானந்தரின் விழுமியப் பண்புகளை எம்மில் சேர்த்துக் கொள்வோம். செயற்படுத்துங்கள். இந்துக்கள் எல்லோரையும் ஒற்றுமைப்படுத்துவோம். ஒன்றிணைப்போம் என்று கருதிய கருமம் கைகூடும் வரை ஓயாது உழைப்போம் என்ற வைரவரிகளை நடைமுறைப்படுத்துவோம்.

இந்துவே துணிந்து கொள். சிவனது அனுக்கிரகம் உனக்கு கிடைக்கும். இந்து சமயத்திற்காக, வளர்ச்சிக்காக என்ன செய்தாய், என்பதை சிந்தித்துப்பார். இந்து சமயத் தலைவர்களே, ஆலயங்களை மட்டும் நிர்வகித்தால் போதாது. இந்துக்களை ஒன்றிணைத்தோமா இந்து சங்கங்களே இந்து சமய வளர்ச்சியை ஏற்படுத்துகிறோமா அல்லது சாதி ஏற்றத்தாழ்வுகளைக் கடைப்பிடிக்கின்றோமா? பிறப்பு இறைவன் விதித்தது. சாதி மனிதன் விதித்தது. சாதியிலும் சமயம் பெரிது என்பார் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. இந்துவிடத்தில் இந்து எனும் உணர்வை ஏற்படுத்துவோம்.

இந்துக்களே! இந்துவர்க வாழ்வோம். இந்து சமயத்தைக் காப்போம். இந்துக்களே எழுந்து வாருங்கள். இந்துஸ்வயம் சேவாசங்கத்தின் அங்கத்தவராக இணையுங்கள். புதியதோர் வரலாறு படைப்போம்.

**சைவப்புலவர்**
**செ.கந்தசத்தியதாசன்**

# சிரச்சேதம் செய்யப்பட்ட ரிஸானாவின் கடைசி ஆசைகூட கேட்கப்படவில்லை

## பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு கண்டனம்

ஷரியா சட்டத்தை சரியாகப் புரிந்து கொள்ளாமல் அச்சட்டத்தை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் ரிஸானாவுக்கு நேர்ந்த அநீதியை கேள்வி கேட்க மறுப்பது முட்டாள்தனம் என்று இலங்கையின் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பைச் சேர்ந்த சித்தாரா ஷ்ரீன் அப்துல் சரூர் தெரிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரிஸானா விவகாரத்தில் ஆரம்பம் முதலே இலங்கை முஸ்லிம் சிவில் சமூகத்தின் பங்களிப்பு போதுமானதாக இருக்கவில்லை. மூதூர் மக்கள் சில முயற்சிகளை செய்தாலும் அவர்களால் உயர்மட்டம் வரை செல்ல முடியவில்லை. அத்துடன் முஸ்லிம் அரசியல்வாதிகளும் இலங்கை அரசாங்கமும் இந்த விடயத்தில் போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

குறிப்பாக விசாரணையின் போது சரியான மொழிபெயர்ப்பு செய்யப்படவில்லை. அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே பெறப்பட்டுள்ளது. இதனை தட்டிக்கேட்க எமது அரசாங்கம் சரியான ஒரு சட்டவல்லுநரை நியமிக்கவில்லை.

இறந்த குழந்தையின் பிரேத பரிசோதனை அறிக்கையில் கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளதாக குறிப்பிட்டிருந்த போதிலும் ரிஸானாவின் கைரேகை அந்த அறிக்கையில் இருக்கவில்லை. அத்துடன் இலங்கை அரசும் சவுதி அரசும் இணைந்து இரண்டு தரப்பினரது பெற்றோர்களையும் ஒன்று சேர்த்து மன்னிப்புக் கேட்க வைக்கக்கூடிய ஒழுங்குகளை மேற்கொள்ள எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன் இந்த விவகாரத்தில் எதுவும் ஷரியா சட்டத்தின் அடிப்படையில் நடக்கவில்லை என்றும் அந்தச் சட்டத்தை சரியாக புரிந்து கொள்ளாமல் அந்தச் சட்டத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக ரிஸானாவுக்கு நடந்த அநீதியை கேள்வி கேட்காமல் இருப்பது முட்டாள்தனம்.

அடுத்து மரணதண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்னர் ரிஸானா விடம் கடைசி ஆசை என்ன என்று கூட கேள்வி கேட்கப்படவில்லை. அவரிடம் உள்ள இறுதி ஆசையைக்கூட நிறைவேற்றி வைக்காதது கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

அத்துடன் இவரது மரணதண்டனை நிறைவேற்றம் குறித்து இலங்கை சவுதி அரசாங்கமோ அல்லது இலங்கை அரசாங்கமோ அவரது பெற்றோருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு எதனையும் விடுக்கவில்லை. அவரது சடலத்திற்கு என்ன நடந்தது என்பது குறித்தும் அறிவிக்கவில்லை. இச்செயற்பாடு இரு அரசாங்கங்களையும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும் என்றார். (அ-2)

## ரிஸானா குடும்பத்திற்கு 3 இலட்சம் ரூபா உதவி

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட பணிப்பெண் ரிஸானா நபீக்கின் குடும்பத்திற்கு 3 இலட்சம் ரூபா உதவித் தொகை வழங்க சமூக சேவைகள் அமைச்சர் பீலிக் பெரேரா தீர்மானித்துள்ளார்.

மூதூர் மாவட்ட செயலாளர் ஊடாக இந் நிதி வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

முற்றுப்பெறாத நிலையிலுள்ள ரிஸானாவின் வீட்டை நிர்மாணிக்கும் பொருட்டு இந் நிதி வழங்கப்படவுள்ளது. (அ-2)

# சிவிச் சென்ரர் கிராமத்தில் கிராம அ.சங்கம் இல்லை

## அமைக்கப்பட வேண்டுமென வலியுறுத்து

கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இராமநாதபுரம் புதிய சிவிச்சென்ரர் கிராமத்தில் எவ்வித அபிவிருத்தி பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த கிராமத்தில் 75 குடும்பங்கள் வாழ்கின்ற நிலையில் எவ்வித அபிவிருத்தி பணிகளும் முன்னெடுக்கப்படாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இக்கிராமத்திற்கு கிராம அபிவிருத்தி சங்கம் அமைக்கப்படாமையினாலேயே அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. இராமநாதபுரம், புதுக்காடு ஆகிய கிராம அபிவிருத்தி சங்கங்களுடன் இணைந்தே மேற்படி கிராமம் இயங்கி வருகின்றது.

எனவே மேற்குறித்த கிராமத்திற்கென கிராம அபிவிருத்தி சங்கத்தை அமைத்து கிராம அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க உரிய தரப்பினர் முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

338



## ஆட்டத்தின் இரகசியம்

வெகுகாலத்திற்கு முன் ஒரு ஆச்சார்ய சுவாமிகள் இருந்தார். அவர் மிகவும் படித்தவர்.

சுவாமிகள் வருடத்தில் ஆறு மாதம் மட்டுமே ஆசிரமத்திலிருந்து சீடர்களுக்கு மந்திரங்களை உபதேசிப்பார். மீதமுள்ள ஆறு மாதங்களையும் நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்து கழிப்பார்.

அவர் ஒரு தடவை சுற்றுப் பிரயாணத்தின் போது ஒரு ஊரை அடைந்தார். சீடர்களும் அவரை வரவேற்று தக்க மரியாதைகளுடன் அவ்வூர் பெருமாள் கோவிலின் மண்டபத்தில் அவர் தங்க ஏற்பாடு செய்தனர்.

அவர் அங்கு வந்தது முதல் ஊரே திமிலோகப்பட்டது. பஜனை கோஷ்டிகள், பிரபந்தம் பாடும் கோஷ்டிகளென்று எங்கே பார்த்தாலும் ஒரே பக்தர்கள் கூட்டம் கொஞ்ச நாட்களானது. சுவாமிகள் அந்த ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப்போக நிச்சயித்தார். எங்கு செல்வது என்று யோசித்தவாறே அந்த மண்டபத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். அப்போது ஊருக்குச் சற்று வெளியே ஒரு மனிதன் செய்யும் சேட்டைகளைக் கண்டு ஆச்

## அம்புலிமாமா கதைகள்


சரியப்பட்டுப் பார்த்து நின்றார்.

உடனே அவனிருக்கும் இடத்திற்கு விரைந்து சென்றார். அவனோ சுவாமிகள் வந்ததை கவனித்ததாகவே தெரியவில்லை. தனக்குத் தானே ஏதோ பேசிக் கொண்டும் கையையும் காலையும் ஆட்டிக் கொண்டுமிருந்தான். இதைக் கண்டு சுவாமிகள் அப்பா இதென்ன நீ யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாய்? உன்னையும் என்னையும் தவிர இங்கு வேறு யாருமே இல்லையே என்று கேட்டார்.

நான் பேசிக்கொண்டிருக்கவில்லை. விளையாடிக் கொண்டிருக்கிறேன். இதோ என்னுடன் விளையாடிக் கொண்டிருப்பவரை நீங்கள் பார்க்கமுடியாதுதான் என்று கூறினான் அந்த விந்தைப் பேர்வழி.

இதைக்கண்டு சுவாமிகள் மனதிற்குள் சிரித்துக்கொண்டார். அவனை ஒரு முழுபைத்தியம் என்றே முடிவு கட்டிவிட்டார். ஆனாலும் அவனைப் பார்த்து அப்பா நீ விளையாடும் விளையாட்டின் பெயர் என்ன? உன்னுடன் விளையாடும் அந்தப் பேர் வழியார்? என்று கேட்டார்.





அதுதானே என் இரகசியம். ஆனாலும் உங்களிடம் நான் சொல்வதில் தடையில்லை. நான் சதுரங்கம் விளையாடிக்கொண்டிருக்கிறேன். இதோ என்னுடன் விளையாடிக்கொண்டிருப்பவர் சாக்சாத் பகவானேதான் என்று சர்வ சாதாரண முறையில் சொன்னான் அவன்.

இந்தத் தடவை சுவாமிகளால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. இவன் ஒரு புதுரகப் பித்துக்குளி என்று தீர்மானித்துவிட்டார். ஆனாலும் இன்னும் என்னதான் அவன் சொல்கிறானோ என்பதைக்கேட்க விரும்பி அப்படியானால் யாருக்கு வெற்றி என்று கேட்டார்.

இருங்கள். இன்னும் ஆட்டம் முடியவில்லை என்று அவன் சொல்லியவாறே மேலேயுள்ள மரக்கிளையைப் பார்த்து இதோ உன் ராஜாவுக்கு ஆபத்து என்று நீங்கள் சொன்னதைக்கேட்டேன் பிரபோ. நீங்கள்தான் இப்போது ஜெயித்தீர்கள் என்று தன் அங்கியின் பையில் கையைப்போட்டான்.

இதைக்கண்டு சுவாமிகள் பிரமித்து நின்றார். பின்பு தோற்றவர் ஜெயித்தவருக்கு ஒன்றுமே கொடுப்பதில்லையா என்று அவனைப் பார்த்துக்கேட்டார்.

கொடுக்காமலா இருப்பார்கள்? ஒரு ஆட்டத்திற்கு இரண்டு மோகராக்கள் என்றான் அவன். அப்படியானால் நீ இப்போது இரண்டு மோகராக்களைக் கொடுக்கவில்லையா என்று கேட்டார் சுவாமிகள். அப்போதே அவன் தன் அங்கியிலிருந்து கையை எடுத்து இரண்டு மோகராக்களைக் காட்டி கடவுள் எப்போதும் என்னிடம் இருந்து இந்த இரண்டு மோகராக்களை நேரில் வந்து பெற்றுக்கொள்ளமாட்டார். ஆட்டம் முடியும்போது ஒரு பக்தர் என் முன் வருவார். அவரிடம் இந்த இரண்டு மோகராக்களைக் கொடுத்து விடுவேன். அந்த பக்தரிடம் கொடுத்தால் அது பகவானுக்குக் கொடுத்தமாதிரி. இன்று நீங்கள் தயவு செய்து இதைப்பெற்றுக் கொள்ளுங்கள். அப்போதுதான் நான் அதைப் பகவானுக்குச் சேர்ப்பது போலாகும் என்று சொல்லி பளபளவென



மின்னும் அந்தத் தங்க நாணயங்களைச் சுவாமிகளின் இரு கைகளில் கொடுத்தான். சுவாமிகளும் அதைப் பெற்றுக் கொண்டு அட பைத்தியமே என்று மனதிற்குள் சிரித்தவாறே தன் இருப்பிடம் சேர்ந்தார்.

இரண்டு மாதங்கள் கழிந்தன. சுவாமிகள் தனது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு சீடர்கள் கொடுத்த காணிக்கைகளு டன் தனது ஆசிரமத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். வழியில் முன்பு அந்த விந்தைப் பேர்வழியைச் சந்தித்த கிராமத்தை அடைந்தார். மறுபடியும் அந்தப் பேர்வழி அதே மரத்தடியில் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறானா என்பதை அறிய ஆவல் கொண்டார். எனவே அவன் முன்பு விளையாடிக் கொண்டிருந்த இடத்தை அடைந்ததும் அவனை அங்கு கண்டார்.

அப்பா இந்தத் தடவை ஆட்டத்தில் யார் ஜெயித்தது? என்று அவனைப் பார்த்ததுமே சுவாமிகள் கேட்டார். அதைக்காதில் போட்டுக் கொள்ளாமல் அவன் எதையோ நகர்த்தி உம். உங்கள் ராஜாவுக்கு ஆபத்து என்று சந்தோசத்துடன் கூச்சலிட்டான் அவன்.

அடேயப்பா என்ன சந்தோசம்! இருக்கும் நிலையைப் பார்த்தால் நீ ஜெயித்துவிட்டாய் போல் இருக்கிறதே என்று கேட்டார் சுவாமிகள்.

ஜெயித்தேன் சுவாமி. இந்தத் தடவை பந்தயத் தொகைகூட நூறு மோகராக்கள் என்று சொல்லி ஹஹ்ஹா என்று சிரித்தான். அப்படியானால் கடவுள் அந்தத் தொகையை உனக்கு எப்படிக் கொடுப்பார்? என்று தன்னை மீறிவரும் சிரிப்பை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டே கேட்டார் சுவாமிகள்.


கடவுள் நேரில் வராமல் அந்தச் சமயத்தில் ஒரு பக்தர் வந்து எனக்குப் பணம்கொடுப்பார். இன்று நீங்களே அப்படி வந்திருக்கிறீர்கள் என்று கூறி பக்கத்தில் கிடந்த தடியையும் கையில் எடுத்துக் கொண்டான். சுவாமிகள் திருதிரு வென்று விழித்துப் பயந்து இதுவரை சிஷ்ய கோடிகள் காணிக்கையாகத் தனக்குச் செலுத்திய அவ்வளவு பணத்தையும் எண்ணினார். சரியாக நூறு மோகராக்கள் இருந்தன. மறு பேச்சு பேசாமல் அவற்றை அவனுக்குக் கொடுத்து விட்டு ஆசிரமத்திற்குத் திரும்பிச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

12

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



அமெரிக்கா சென்ற விமானம் திரும்பி வந்ததைப்போல நாற்பத்தேழு மணிநேரத்தில் பதில் மின்னஞ்சல் வந்தது எமிலியிடமிருந்து.

"அன்புள்ள சின்னப்பாண்டி...

உங்கள் அழைப்புக்கு நன்றி.

நீங்கள் யார்? தெரியாது எனக்கு.

உங்கள் மொழி நான் அறிந்திருக்கவில்லையென்பது என் குற்றமாக மட்டும் இருக்க முடியாது.

உங்கள் பல்கலைக்கழகத்தின் பெயர் காந்தி என்று தொடங்கக் கண்டேன். என் அறிவும் உணர்வும் ஒன்றாக இயங்குமாயின், அரசியல் துறவி- இந்திய தேசத்தந்தை- விடுதலைப் போராளி என்ற அளவில் நான் அறிந்து வைத்திருக்கும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியாகத்தான் அது இருக்க முடியும்.

உங்கள் கடிதத்தில் ஒரு வாக்கியம் என்னைப் பெரிதும் ஈர்த்தது. என் கட்டுரையைப் பன்னாடுகளிலிருந்தும் பாராட்டியவர்கள் என அறிவையே வியந்தார்கள். அறிவு என்பது வெறும் விபரத் திரட்டு; வாசிப்பின் வரம் அல்லது கணிப்பொறியின் இரவல்- அறிவை மட்டுமே கொண்டாடுவதில்லை நான். அது ஒரு தகவல் போதை; அல்லது மூளைச் சாராயம்.

என் கட்டுரையை மனிதகுலத்தின் மீதான கருணையின் கசிவு என்று குறிப்பிட்டிருந்தீர்கள். அப்போதுதான் என் இதழ் கடையில் பொய்யில்லாத புன்னகை ஒன்று பூத்துவிழுந்தது.

மனிதநேசம் இல்லாத அறிவு யாருக்கு வேண்டும்? மண்ணின் மீது விழாத மழையாலும் மனிதன் மீது விழாத கண்ணீராலும் யாதுபயன்? உங்கள் பல்கலைக்கழகத்துக்கான என் வருகையால் உங்கள் மண்ணுக்குச் சிறுபயன் விளைந்தாலும் பெருமகிழ்வு பெறுவேன் நான்.

என்னைப் பற்றி எழுதுங்கள் என்று கேட்டிருக்கிறீர்கள். அது பல்கலைக்கழகத்தின் கோரிக்கையல்ல; ஈர்க்கப்பட்ட ஒரு வாசகனின் யாசகம் என்று அழகான ஆனால், அத்தப் பணிவான மொழியில் எழுதியிருக்கிறீர்கள்.

சொல்லப்படுகிற அளவுக்குச் சுவை கொண்டதில்லை என் பால்யம்.

அமெரிக்காவில் பலருக்கும் வாய்ப்பதுபோல் எனக்கும் அழகான தாய்- அன்பான தந்தை. அட்லாண்டாவில் பிறந்தவள் நான். ஏரிகளைத் தலைக்குவைத்து உறங்கும் காடுகளின் தலைநகரம் அது.

எங்கள் வீடு என்பது ஒரு துண்டுக் காடு. மனிதர்களின் மொழியை விடப் பறவைகளின் மொழியே முதலில் பரிச்சயமானது எனக்கு. நான் கண் விழித்த உலகத்தின் முதல் ஆச்சரியம் பறவைதான். கூடுதான் என் வீடு; வீடு என்பது நான் தடம் மாறி வந்த இடம் என்றே தோன்றிக் கொண்டேயிருக்கும் எனக்கு. பறவைகளின் குடில் என்பதனாலேயே மனசார நேசித்தேன் மரங்களை. அப்படித்தான் திறந்ததெனக்கு இயற்கை நேசத்துக்கான முதல்பாதை.

அப்போது ஏழுவயதிருக்கும் எனக்கு. மிருகக்காட்சிச்சாலைக்கு அழைத்துச் சென்றார்கள் என்னை அப்பாவும் அம்மாவும். அந்த வளாகத்தை நான் இரசிக்கவில்லை. எந்த மிருகத்தின் முகத்திலும் சிரிப்பில்லை. பறவைகளுக்கு உடல் நலமில்லை. மிருகங்களைப் பார்க்க வந்த மனிதர்களையெல்லாம் கூண்டிலடைத்து- அவர்களை வேடிக்கை பார்க்க மிருகங்களைத் திறந்துவிட வேண்டுமென்று தோன்றியதெனக்கு.

அங்கே பெரிதும் என்னை ஈர்த்தது சிவப்புக் கொண்டைக் குயில் ஒன்று. அது வேண்டுமென்று அடம் பிடித்தேன். கடிந்தார்கள் என்னை; கண்டித்தார்கள். முதன் முதலாய் அம்மா என்னை அடித்ததாகவும் ஞாபகம். உண்ணவில்லை- உறங்கவில்லை- பள்ளி செல்லவில்லை. அம்மா அடித்த அடியில் காய்ச்சலுற்றுக் கிடந்தேன்.

அந்தவாரம் என் பிறந்தநாள் வந்தது.

என்ன வேண்டுமோ... கேள் மகளே! என்றார் அப்பா.

சிவப்புக் கொண்டைக் குயில் வேண்டும்; எனக்கு மட்டுமல்ல என்னோடு வகுப்பில் படிக்கும் எல்லோருக்கும் என்றேன்.

இப்போது நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது.

என்னோடு சேர்த்து என் வகுப்புத் தோழர்கள் அனைவருக்கும் பிறந்த நாள் பரிசாக வழங்கப்பட்டது ஆளுக்கொரு சிவப்புக் கொண்டைக் குயில்.



# கூண்டுக்குள் இறந்து கிடந்தது என் உலகம்

அன்றுபோல் நான் அவ்வளவு மகிழ்ந்ததுமில்லை; அதற்கடுத்த வாரம்போல் அழுததுமில்லை.

ஒரு மாலையில் வந்து பார்த்தால் கூண்டுக்குள் இறந்து கிடந்தது என் உலகம். அழுதேன்- விம்மி விசும்பி அழுதேன். முதல் முதலில் எனக்காக அல்லாமல் இன்னோர் உயிருக்காய் அழுதேன். ஆள் செத்தாக்கூட அப்படித்தான் அழுவார்கள் என்று பின்னாளில் தெரிந்து கொண்டேன். என் ஜியாமெட்ரிபாக்ஸில் சவப்பெட்டி தயாரித்துத் தோட்டத்தில் புதைத்தேன்.

என்னை பாதித்தது அந்தப் பறவையின் சாவு. இந்த உலகத்தை நான் பார்க்கத் தொடங்கியதே மரணத்தின் ஜன்னல் வழியாகத்தான். இந்த உலகத்தைப் பிறப்பிலிருந்து சிந்திக்கத் தொடங்குகிறவன் சோகத்தில் முடிகிறான்; மரணத்திலிருந்து சிந்திக்கத் தொடங்குகிறவன் ஞானத்தில் முடிகிறான்.

இதை வாசிக்கும் போது உங்கள் இந்திய இதயமும் அழுதிருந்தால் ஆச்சரியப்பட மாட்டேன்.

ஏனென்றால் கடவுளுக்குப் பக்கத்தில் பறவைகளை வைத்திருக்கும் பண்பாடு படைத்தவர்கள் நீங்கள் என்று படித்திருக்கிறேன்.

வளர்ந்தேன்.

நான் விரும்பிய கல்வி வாய்த்தது எனக்கு. உயிர்களின் மீதும் பூமியின் மீதுமான நேசத்தில் சுற்றுச் சூழலில் பட்டம் பெற்றேன்; பட்டயப் படிப்பும் கற்றேன்.

சுதந்திரப் பறவையாய்ச் சுற்றிக் கொண்டிருக்கிறேன். என் தந்தைக்கு நன்றி சொல்ல வேண்டும். அவர் என் வங்கிக் கணக்கிலிட்டிருக்கும் பெரும் பணம் போதுமெனக்கு. இன்னும் அதைத் தொடவில்லை; ஊடகங்களின் ஊதியத்தில் ஓடிக்கொண்டிருக்கிறேன்.

இன்னும் என்ன வேண்டும் என்னைப் பற்றி.

உயரம் 170 செ.மீ.

கடைசியாய்ப் பார்த்தபோது எடை 56.5 கிலோ கிராம் (அது அடிக்கடி ஏறும் இறங்கும் எங்கள் டொலர் மதிப்பைப் போல)

நிறம்- ரோஜாவில் கரைந்த மஞ்சள்.

வயது இருபத்து மூன்றும் சில மாதங்களும்.

இவ்வளவும் சொன்னபிறகு என் காதல் பற்றி அறிந்துகொள்ள நீங்கள் ஆர்வம் காட்டலாம்.

அதை நீங்களாய்க் கேட்பது நாகரிமாய் இருக்காது உங்களுக்கு; சொல்லாமல் விடுவது நேர்மையாய் இருக்காது எனக்கு.

அது என்னவோ தெரியவில்லை. என் பருவம் குறுகுறுக்கத் தொடங்கிய நாளிலிருந்து என் ஈர்ப்பெல்லாம் மூத்தவர்கள் மீதுதான்.

அந்த வகையில் முதலில் என் கவனம் கவ்வியவன் அட்லாண்டா சென்ட்டரில் இருந்த ஐஸ்கிறீம் பார்லர்காரன். எவ்வளவு கூட்டத்திலும் அவன் புன்னகை என்மீது மட்டும் வந்து விழும். அவன் வழுக்கைத் தலையின் மீது எனக்கு இனம் புரியாத கிலேசம் இருந்தது; அதன் பளபளப்பில் எனக்கொரு பால் கிளர்ச்சி இருந்தது.

இரண்டாவது என்னை ஈர்த்தது விவாகரத்தான என் பேராசிரியர். என்னைப் பார்த்து மட்டுமே பாடம் சொல்வார். என் கையெழுத்தைப் பாராட்டுவார். அவர்மீது எனக்கு மெல்லிய மோகம் உண்டாக்கியதெல்லாம் அவர் உடல் மொழிதான். அவரைப் பார்க்கும் போதெல்லாம் தந்தையைப் போலொரு காதலர்- காதலர் போலொரு தந்தை என்றே தோன்றுமெனக்கு.

மூன்றாவது ஈர்ப்பு என் தோழியின் தந்தை மீது. எனக்கும் என் தோழிக்கும் பாடம் சொல்வார்.

அப்போதெல்லாம் என் கூந்தல் கடந்து கழுத்தடியில் கதகதக்கும் அவர் கரம். அதில் எனக்கொரு இதம் இருந்தது; அது காதல் இல்லை என்று அறிந்தேன்; ஆனால், அந்தக் கிளர்ச்சியின் பரவசத்தை நான் ஆசையோடுதான் அனுபவித்தேன்.

அது இனக்கவர்ச்சியா? அல்லது நான் மனநோயாளியா?

பின்னொருநாள் கற்றறிந்தேன்.

யாருக்கெல்லாம் மூளையில் ஆக்சிடோசின் அதிகம் சுரக்குமோ அவர்களுக்கெல்லாம் நேருமாம் இது. பகிர்தலும் பாதுகாப்பும் உள்ள இடத்தில் மனசு கூடாரம் கட்டுமாம்.

ஆக்டோசின் அதீதமாய்ச் சுரக்கும் பெண்ணொருத்தியாம் நானும். எனக்கெதிராய்ச் சுரக்கும் மூளைக்கு நானென்ன செய்வேன்? (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதி சிறையில் இன்னும் நான்கு இலங்கையர்கள்

## மரணதண்டனை விதிக்கப்படலாம்

(கொழும்பு)

சவுதி அரேபிய சிறைச்சாலைகளில் இலங்கையைச் சேர்ந்த நான்கு பேர் மரணதண்டனையை எதிர்கொள்ளக் கூடிய அபாயத்துடன்.உள்ளனர் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல திரைப்பட நடிகருமான ரஞ்சன் நாமநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்கள் மீது தற்போது மதரீதியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தா லும் அது ரிஸானாவைப் போலவே மரணதண்டனைக்கு வழிவகுக்கக் கூடும் என அவர்களது பெற்றோர்கள் அஞ்சுவதாக ரஞ்சன் நாமநாயக்க பிபிசியிடம் கூறியுள்ளார்.

புத்தர் சிலையை வைத்து தொழுதார் என்று ஒருவரும் பைபிளை வைத்திருந்ததாக மற்றொருவரும் முகமது நபிகள் குறித்த கேலிச் சித்திரத்தை பேஸ்புக்கில் பெற்றதான குற்றச்சாட்டில் மற்றொருவரும் மந்திரம் ஓதி மணிக்கட்டில் கட்டும் கயிறை வாங்கியதாக ஒரு பெண்மணியும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து 18 இலட்சம் பேர் வெளிநாட்டில் அதிலும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் பணிப் பெண்களாக வேலை பார்த்து அனுப்பும் பணமே இப்போது நாட்டுக்கு பெரும் வருவாயாக காணப்படுகிறது. அதன் காரணமாகவே அரசு இந்த விடயத்தில் கவலை கொள்வதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்கள் மூலம் இலங்கைக்கு ஆண்டொன்றுக்கு கிடைக்கும் ஆறு பில்லியன் டொலர்களை பத்து பில்லியன் டொலர்களாக உயர்ந்த ஜனாதிபதி பட்ஜெட் உரையில் தெரிவித்துள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை ஒரு ஏழை நாடு என்பதாலும் பலர் வறுமை காரணமாக வெளிநாட்டுப்பணி பெண்கள் வேலையை எதிர்பார்த்தாலும் சவுதி அரேபியா இலங்கையை மதிப்பதில்லை எனவும் ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.சவுதியில் வீட்டு வேலைக்கு பெண்களை அனுப்புவதில்லை என்று முடிவெடுத்த இந்தோனேசிய ஜனாதிபதி போன்று முடிவெடுக்க இலங்க்கை ஜனாதிபதி முது கெலும் பற்றவர் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார். (அ-2)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மின் மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் புனரமைப்பு வேலைகளுக்காகவும் ஏற்கனவே அறிவித்த இடங்களுக்கு மேலதிகமாக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம் மற்றும் பளை நகரப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ-9)

# பிரதம நீதியரசரே நீதிமன்றை அரசியல்மயப்படுத்தி விட்டார்

## அமைச்சர் கெஹலிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

நல்லதற்கும் சிதறு தேங்காய் அடிப்பார்கள். சாபத்திற்கும் சிதறு தேங்காய் அடிப்பார்கள். ஆனால், நீதிமன்ற வளாகத்தில் சிதறு தேங்காய் அடித்து பிரீத் நூல்கட்டிக் கொண்டு தெரிவுக்குழுவுக்கு பிரதம நீதியரசர் சென்றது சரியா?தவறா? போன்ற வாதப் பிரதிவாதங்கள் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இடம்பெற்றன.

வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த வாதப்பிரதிவாதங்கள் அமைச்சருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையில் இடம்பெற்றன.

முன்னதாக கேள்வியெழுப்பிய ஊடகவியலாளர்கள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நாடாளுமன்ற தெரிவுக்குழு ,உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் உள்ளிட்ட கேள்விகளை கேட்டனர்.

அந்த கேள்விகளுக்கு பதிலளித்த ஊடகத் துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல பிரதம நீதியரசரே நீதிமன்றத்தை அரசியல்மயப் படுத்தி விட்டார் என்றார்.

தெரிவுக்குழு முன்னிலையில் ஆஜராக் குவதற்காக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தான் வழமையாக வெளியேறும் கதவினூடாக வெளியேறாமல் பொதுமக்கள் குழுயிருக்கும் வாயிலின் ஊடாகவே வெளியேறினார்.

அவர் நீதிமன்றத்தை விட்டு வெளியேறும் போது நீதிமன்ற வளாகத்தில் சிதறு தேங்காய் உடைக்கப்பட்டது.பிரீத் நூல் கட்டப்பட்டது. கைகளை அசைத்தக் கொண்டே தெரிவுக் குழுவுக்கு சமுகமளித்து அவர் நீதிமன்றத்தையே அரசியல்மயமாக்கிவிட்டார்.

இதன்போது இடைமறித்த ஊடகவியாலாளர்கள் பிரீத் நூல் ஆசீர்வாதத்திற்கே கட்டப்படுகிறது.பிரீத் நூல் கட்டக்கூடாதா? அப்படியாயின் ஜனாதிபதி பிரீத் நூல் கட்டிக் கொள்கின்றாரே என வினவினார். அதற்கு பதலளித்த அமைச்சர் பிரதம நீதியசரும் ஜனாதிபதியும் சமமானவர்களா என கேள்வி எழுப்பினார்.

பிரதம நீதியரசர் அவருடைய வீட்டில் சமய சடங்குகளை செய்து பிரீத் நூலை கட்டிக் கொண்டால் எமக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.ஆனால்,நீதிமன்றத்தையே அரசியல்மயப்படுத்திவிட்டார்.அதனை அனுமதிக்க முடியாது.

சரத் பொன்சேகா சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டபோது ஊடகங்களுக்கு ஏதாவது ஒன்றை கூறிச் செல்வார்.பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அதனை மட்டும்தான் செய்ய வில்லை என்று அமைச்சர் கூறினார்..

மீண்டும் இடைமறித்த ஊடகவியலா ளர்கள் நீதிமன்ற வளாகத்தில் தேங்காய் உடைத்தது தவறாயின் இன்று (நேற்று) குண்டாந்தடிகளுடன் நின்றிருந்த அரசாங்கத்திற்கு ஆதாரவான ஆர்பாட்டங்காரர்கள் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் நடத்தியது சரியா?

இந்த நிலைமையை கட்டுப்படுத்தாமல் பொலிஸார் பக்கச்சார்பாக நடந்துக்கொ ண்டது சரியா? அரசாங்கத்திற்கு சார்பான வர்கள் பிரதம நீதியரசருக்கு எதிரான சுவரொட்டிகளை ஒட்டியிருப்பது ஒழுக்கத்தனமானதா என வினவினார்.

இந்த கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் நீதிமன்றத்தையும் வளாகத்தையும் அரசியல்மயப்படுத்தியது யார் ? சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பது தவறானதாகும்.நீதிமன்ற வளாகத்தில் தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரம் எனக்கு தெரியாது. இது தொடர்பில் தேடியறிந்து நடவடிக்கைகளை எடுப்பதற்கு பணிப்பதாக கூறினார். (அ-2)

# உயர் நீதிமன்றம் அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொண்டுள்ளது

## இதுவே தவறு என்கிறார் கெஹலிய

(கொழும்பு)

உயர்நீதிமன்றத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு கையளிக்கப்பட்டது அரசியலமைப்பு வியாக்கியானம் அல்ல. அரசியலமைப்பு திருத்தமாகும்.அதனை சபாநாயகர் உட்பட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையானோர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனையடுத்தே அது தொடர்பிலான விவாதம் முன்னெடுக்கப்பட்டது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இம் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில்,

நாடாளுமன்றம் அரசியமைப்பை பலமானதாக ஏற்றுக்கொண்டுள்ளது. உயர்நீதிமன்றத்திற்கு மட்டுமே அரசியலமைப்பை வியாக்கியானம் செய்யமுடியும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றது.

ஆனால், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக்குழு விவகாரத்தில் உயர்நீதிமன்றம் அரசியலமைப்பை வியாக்கியானம் செய்யவில்லை.ஆனால், அரசியலமைப்பில் திருத் தங்களை மேற்கொண்டுள்ளது. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசியலமைப்பை திருத்துவதற்கான முழு அதிகாரமும் நாடாளுமன்றத்திற்கே இருக்கின்றது.நீதிமன்ற கட்டமைப்பில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது. பிரதம நீதியரசரின் நடத்தையை பார்த்தால் நீதித்துறை வரலாற்றிலேயே இவ்வாறான நிலைமைகள் ஏற்படவில்லை.நீதிமன்ற விடுமுறை காலத்தில் ரீட் மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

நீதிபதிகள், நீதியரசர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.நாடாளுமன்றத்திற்கு பொறுப்பு இருக்கின்றது. தெரிவுக்குழு விவகாரம் தர்க்கிக்கப்பட்டது.அதற்கு பின்னர் சட்ட நிபுணர்களின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டது.

ஆகையினால் அமைச்சராக அல்ல. இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் நீதித்துறையை அரசியல்மயப்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். (அ-2)




அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆயிரத்து 500 கறவை பசுக்கள் கடந்த புதன்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன. அப்பசுக்களை கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் ,பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் பார்வையிடுவதையும் இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசியாவின் பாதுகாப்பும் இந்தியாவின் தலைமையும்...

இந்திய மாகடல் பிராந்தியத்தில் இந்தியா தனது மூலோபாய மற்றும் இராணுவ நலன்களை அடைந்து கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இதன் அயல் நாடுகள் தாம் அதிருப்தியடைந்ததற்கான எடுத்துக்காட்டாக பங்களாதேஸ் போர் மற்றும் இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படை பணியில் ஈடுபடுத்தப்பட்டமை போன்றன அடிக்கடி சுட்டிக்காட்டப்படுகின்றன.

பாகிஸ்தான் போர் மூள்வதில் இந்தியா எந்தவொரு சதியிலும் ஈடுபடவில்லை என்பதை இதன் அயல்நாடுகள் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. பாகிஸ்தான் விட்ட சொந்தத் தவறே பங்களாதேஸ்யுத்தம் ஆரம்பமாகக் காரணமானது. இதே போன்று இலங்கையின் முன்னைநாள் அதிபரான ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் வேண்டுகோளின் பேரிலேயே இலங்கைக்கு இந்திய அமைதிகாக்கும் படை அனுப்பட்டது.

இந்நிலையில் இவ்வாறான உண்மைகளை இந்தியாவின் சிறிய அயல் நாடுகள் விளங்கிக் கொள்ளவில்லை. மாறாக இந்திய மாகடல் பிராந்தியத்தில் இந்தியா தனது சொந்த நலனை அடைந்து கொள்வதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக இந்தியாவின் அயல் நாடுகள் நம்புகின்றன.


இந்தியாவைப்பொறுத்தளவில் பாகிஸ்தான் மற்றும் சீனாவிவுடனான முரண்பாடு உண்மையாக உள்ள போதிலும் இது கோட்பாட்டு ரீதியான முரண்பாடல்ல. இந்நிலையில் தன்னுடன் இந்திய மாகடலில் உள்ள நாடுகள், ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் திட்டமிடல்கள் தொடர்பாக இந்தியாவுக்கு அறிவிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகிறது. இதன் மூலம் இந்தநாடுகள் வேறு பிராந்திய நாடுகளை தமது அரசியல் மற்றும் மூலோபாய நடவடிக்கைகளில் செல்வாக்குச்செலுத்துவதை எதிர்ப்பதை இந்தியா உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

இலங்கையில் சீன நிதியுதவியுடன் அம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிக்கப்படுதல், மாலைதீவின் ஜி.எம்.ஆர்.விவகாரம், இந்த நாடுகளிலும் இந்தியாவின் ஏனைய தென்னாசிய அயல் நாடுகளுடனும் சீன நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பொதுத் திட்டங்கள் போன்றன இந்திய சீனா தனது அதிகாரத்தை நிலைநிறுத்துவதானது பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக கருதப்படுகிறது.

இந்தியாவின் சிறிய அயல்நாடுகளுடன் இந்தியா பிராந்திய மூலோபாய மற்றும் வரலாற்று ரீதியான பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு தென்னாசிய பாதுகாப்பு பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவேண்டும். இதன் மூலமே இந்தியாவுக்கும் இதன் சிறிய அயல்நாடகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க முடியும். பிராந்தியப் பாதுகாப்பு பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கு பிராந்தியத்தில் மிகப்பெரிய இராணுவப் பலத்தைக்கொண்டுள்ள இந்தியா இதற்கான செலவினங்கள் உள்ளடங்கலாக பல்வேறு பொறுப் உதவிகளை வழங்கியது. 1987இல் இலங்கையின் அழைப்பின் பேரில் தனது அமைதிகாக்கும் படையை இந்தியா இலங்கைக்கு அனுப்பி வைத்தது. ஆனால், இது பின்னர் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்டது.

1988 நவம்பர் 3இல் மாலைதீவில் ஏற்பட்ட ஆட்சிக்கவிழ்ப்பை கட்டுப்படுத்துவதற்கு இந்திய இராணுவம் தலையீடு செய்தது. இதன் பின்னர் 2004 இல் இலங்கை மற்றும் மாலை தீவு ஆகிய இருநாடுகளிலும் ஏற்றபட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போதும் இந்தியா தனது உதவிகளை வழங்கியது. இந்நிலையில் இந்தியாவானது தனது அயல்நாடுகளின் யுத்தம் மற்றும் அமைதி நடவடிக்கைகளில் அதிகம் செல்வாக்குச் செலுத்துவதில் ஆர்வமாகவும் விருப்பத்துடனும் இருப்பதையே இவ்வாறான சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.


1988 இல் மாலைதீல் இந்திய விமானப்படை



இவ்வாறான பிராந்தியப் பாதுகாப்புப் பொறிமுறை ஒன்றில் பாகிஸ்தான் இணைந்துகொள்வதில் பிரச்சினையை ஏற்படுத்தலாம். இந்த விவகாரத்தில் இந்திய மத்திய அரசும் நிச்சயமற்றுள்ளது. பாகிஸ்தானுடன் பாதுகாப்பு உடன்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதென்பது இந்தியாவின் அரசியல், இராணுவ இராஜதந்திரத்தைப் பொறுத்தது.

இந்தியாவானது, தனது நாட்டின் எதிரி நாடுகள் அல்லது தன்னுடன் சிறிய நாடுகள் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பாக பிராந்தியத்திற்கு வெளியேயுள்ள சக்திமிக்க நாடுகளுடன் தனது சிறிய அயல் நாடுகள் தொடர்புகளைப் பேணும் போது அவற்றின் விபரங்களைத் தன்னுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என இந்திய மூலோபாய சமூகம் கருதுகிறது.

1988 இல் இலங்கைத்தீவில் தாக்குதலில் ஈடுபட்ட இந்திய( முதலைக்கெலி)உலங்குவானூர்தி




இதன்காரணமாக இந்தியா தனது பிராந்தியத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இந்திய மாகடலில் இந்தியாவுக்கு அருகிலுள்ள சிறிய அயல் நாடுகள் தமது வர்த்தகப் பங்காளிகளைத் தெரிவு செய்வதில் இந்திய மத்திய அரசாங்கத்தின் இறைமை செல்வாக்குச் செலுத்துவதுடன், இவ்வாறான வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இந்திய அரசின் அங்கீகாரத்தைப் சிறிய நாடுகள் பெற்றுக்கொள்ளவேண்டும் என இந்தியா எதிர்பார்க்கிறது.

இந்தியாவின் மிகச்சிறிய அயல் நாடுகள் எவையும் பிராந்திய பாதுகாப்பு, இராணுவத் தலையீடுகளை மேற்கொள்வதற்கான தகமையைக் கொண்டிருக்கவில்லை. இதனைச் செய்வதற்கான இயலுமையை இந்தியா மட்டுமே கொண்டுள்ளது.

இந்தியாவின் சிறிய அயல்நாடுகள் தமது பூகோள- மூலோபாய நகர்வு மூலோபாய சமூகத்தை சினங் கொள்ள வைத்துள்ளது. அதாவது இந்த நாடுகள் இந்திய மத்திய அரசின் ஆதரவுடன் செயற்படும்போதிலும் சீனாவுடன் இவ்வாறான வர்த்தக சார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது தொடர்பில் இந்தியா விசனமடைந்துள்ளது.

இந்த நாடுகள் சீனாவுடன் மூலோபாய மற்றும் வர்த்தக உறவை பேணுவதானது இந்தியாவின் பாதுகாப்பு நலனுக்கும் இதன் மூலோபாய நலனுக்கும் பங்கம் விளைவிப்பதாக கருதப்படுகிறது. இந்திய மாகடலின் எல்லையில் [illegible] இடத்தில் [illegible] இலங்கை மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளில் புகளை ஏற்கவேண்டியிருக்கும். அத்துடன் இச்சிறிய நாடுகளின் நகர்வுகளை மீளக்கணித்துக் கொள்ளவேண்டும்.

தேவைப்படுமிடத்து பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கு இந்தியா தனது இராணுவ ஆதரவுகளை வழங்கியதைக் கடந்தகால சில பதிவுகள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். 1971 இல் இலங்கையில் இடம்பெற்ற முதலாவது ஜே.வி.பி.கிளர்ச்சி முறியடிப்பின்போது இந்தியாவானது இலங்கைக்கு 'தனது இராணுவ உதவியை வழங்கியது. இதேபோன்று இதே ஆண்டில் பங்களாதேஸ் போருக்கும் இந்தியா தனது இராணுவ பங்காளியாகச் சேராத அரசுடன் நல்லுறைவைப் பேணுவதா அல்லது இல்லையா என்பதைப் பொறுத்தே இந்தியா, தென்னாசியாவில் மேலும் தனது அதிகாரத்தை வலுப்படுத்த முடியும். இவ்வாறான நன்மை பயக்கும் சில முயற்சிகளும் நகர்வுகளும் முதலில் இந்தியத்தரப்பிடமிருந்து வெளிப்படுத்தப்பட வேண்டிய தேவையுள்ளது.

*த ஹிண்டு- ஊடகத்திற்கு என்.சத்தியமூர்த்தி வரைந்ததிலிருந்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் 2013

## கும்பம்

# வந்துவிட்டது புத்தாண்டு; இனி என்ன? வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும்

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்!**

**நம்பிக்கைக்குரிய நண்பர்களை தேர்ந்தெடுத்து நல்லவிதத்தில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் கும்ப இராசி நேயர்களே!**



வந்துவிட்டது புத்தாண்டு. இனி வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டப் போகிறது. குருவின் வக்ர இயக்கம் முடிந்த பின்னர் கூடுதல் பலன் உங்களுக்கு கிடைக்கும்.

வந்த புத்தாண்டில் வளர்ச்சி கூடிடுமா? மந்தன் சனியால் மகத்துவம் கிடைத்திடுமா? எந்த வழியில் நமது முன்னேற்றம் வந்து சேரும். அதற்கு ஏதேனும் பரிகாரங்கள் செய்ய வேண்டுமா? என்றெல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்த உங்களுக்கு இராசிநாதன் உச்சம் பெற்று நல்ல வாய்ப்புகளைக் கொடுக்கும் விதத்தில்தான் சஞ்சரிக்கிறார்.

ஆனால், அவரோடு இராகு அல்லவா கூடியிருக்கிறார். அதுமட்டுமல்ல முன்னேற்றப் பாதைக்கு வித்திடும் 3 ஆம் இடத்தில் கேதுவும் அல்லவா சஞ்சரிக்கிறார். எனவே, ஒரு கிரகம் வளர்ச்சியையும், ஒரு கிரகம் தளர்ச்சியையும் கொடுக்கும் விதத்தில்

**சிவல்புரி சிங்காரம்**

சஞ்சரிக்கிறார். ஒருவர் கொடுப்பதை ஒருவர் கெடுப்பது என்பது உலக இயல்பு. அதுபோலத்தான் கிரகங்களின் சஞ்சாரமும் இராசிநாதன் உச்சம் பெற்று வேண்டிய அளவு பொருளாதாரத்தை விருத்தி செய்து கொடுக்க முன்வரும் பொழுது ஒருசில கிரகங்கள் உறுதுணை புரிந்தாலும் முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும் முக்கிய கிரகம் திருப்திகரமாக சஞ்சரிக்காவிட்டால் பயனில்ல அல்லவா? எனவே, இலாபம் வருவதுபோல் தோன்றினாலும் அது கடைசிநேரத்தில் கை நழுவிப்போகலாம்.

அதற்கு என்ன காரணம்? என்பதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். வருடத் தொடக்கத்திலேயே 6 இற்கு அதிபதி சந்திரன் 6 ஆம் இடம் எனப்படும் எதிரிகள் ஸ்தானத்தில் சொந்த வீட்டிலேயே சஞ்சரிக்கிறார். எனவே, தனக்குத்தானே எதிரியாகும் சூழ்நிலையும் உருவாகும். எதையும் மனம்விட்டுப் பேசாமல் இரகசியமாக வைத்துக் கொண்டு செயற்படுவதன் மூலம் சில நல்ல பலன்களைக் காணலாம்.

என்ன இருந்தாலும் சர்ப்ப பரிகாரங்களைச் செய்து கொள்வதோடு, சனி பரிகாரங்களையும் செய்து கொள்வது நல்லது.

புத்தாண்டின் கிரக நிலைகளை விளக்கும் கட்டத்தையும், உங்கள் சுய ஜாதக கட்டத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இரண்டின் கிரகநிலைகளும் ஏற்ற திசாபுத்திகளும் ஒத்து வரும்பட்சத்தில் உங்கள் எண்ணங்கள் ஈடேறும். இல்லையேல் வாரவழிபாடு, மாதவழிபாடு, வருட வழிபாடு, சிறப்பு வழிபாடு என்று முறையாக வழிபாடுகளை தேர்ந்தெடுத்து செய்தால் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்க இயலும்.

ஆண்டின் தொடக்கத்தில் குரு வக்ர இயக்கத்தில் இருந்தபடியே சுக்கிரனைப் பார்க்கிறார். எனவே, பணம் வந்த மறுநிமிடமே செலவாகலாம். பக்குவமாகப்பேசி காரியங்களை சாதித்துக் கொண்டாலும் முடிவில் மனஸ்தாபங்களே வந்து சேரலாம். எதையும் தீர்க்கமாக ஆராய்ந்து முடிவெடுத்து செயற்படுவதே நல்லது.

**01.01.2013 முதல் 27.05.2013 வரை**

இக்காலத்தில் சூரிய, புதனின் சேர்க்கையால் புத ஆதித்ய யோகம் செயற்படுகிறது. எனவே, கல்வித் தடைகள் அகலும். கல்யாண வாய்ப்புகள் குடும்பத்தில் நடப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். ஒருசில கிரகங்கள் உலாவரும் நிலையில் மாற்றம் வரும்வரை நீங்கள் பொறுமையைத்தான் கடைப்பிடிக்க வேண்டும்.

குறிப்பாக இராசிநாதன் உச்சம் பெற்றிருப்பதால் பணக்கவலை தீரலாம். பக்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம். ஆனால், மனக்கவலை தீருமா? என்பது சந்தேகம்தான். மாற்று கருத்துடையோரின் எண்ணிக்கையை கூட்டிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்வது உங்களின் புத்திசாலித்தனம். மக்கள் செல்வங்களை உங்கள் கண்காணிப்பில் வைத்துக்கொள்ளுங்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உண்டு.

விரய ஸ்தானத்தில் செவ்வாய் உச்சம் பெற்றிருக்கிறார். 3, 10 இற்கு அதிபதியான செவ்வாய் உச்சம் பெற்றிருப்பதால் தொழில் மாற்ற சிந்தனைகள் மேலோங்கும். பழைய தொழிலை கொடுத்துவிட்டு புதிய தொழிலை தொடங்கும் எண்ணம் ஒருசிலருக்கு மேலோங்கும். இடம், பூமி விற்பனையால் இலாபம் கிடைக்கும். தொழில் நடைபெறும் இடத்தை ஒருசிலர் விலைக்கு வாங்கி அழகான கட்டடமாக மாற்றி அதை ஷாப்பிங் காம்ப்ளக்சாகவும் கடைகளாகவும் கட்டிவிடும் வாய்ப்பு உருவாகும்.

9 ஆம் இடத்தில் இராகு சஞ்சரிப்பதால் தந்தைவழி சொத்துக்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். சாதுவாக இருந்த சகோதரர்கள்கூட விரோதிகளாக மாறலாம். எனவே, அவர்களை அனுசரித்துச்சென்று பூர்வீகசொத்துக்களில் ஆதாயம்பெற நினைப்பது புத்திசாலித்தனமாகும்.

வக்ர குருவின் பார்வை 8,10,12 ஆகிய இடங்களில் பதிகிறது. 2 ஆம் இடத்தில் பதிவதால் உடல்நலம் சீராகும். ஒவ்வொரு மருந்தாக உட்கொண்டு எதுவும் பலன் தரவில்லையே என்று நினைத்தவர்கள், இப்பொழுது பார்க்கும் மாற்று மருத்துவத்தால் பாதிக்குமேல் குணமாகி பணிபுரிவதில் இருந்த தொய்வுநிலை அகலும்.

தொழில், கூட்டாளிகளில் சில மாற்றங்களை செய்வீர்கள். செயற்பாடுகளில் தீவிரம் காட்டாமலும் பதற்றப்படாமலும் செய்தால் எந்த செயலும் வெற்றிகரமாக முடியும். இது போன்ற காலங்களில் திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடு உங்களுக்கு தேவை.

**28.05.2013 முதல் 31.12.2013 வரை**

இக்காலத்தில் குரு மிதுனத்தில் சஞ்சரிக்கப்போகிறார். குருவின் பார்வை நேரடியாக உங்கள் இராசியில் பதிகிறது. அதுமட்டுமல்லாமல் 9,11 ஆகிய இடங்களிலும் பதிவாகிறது.



குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கேற்ப வருடத்தின் முற்பாதியை விட, பிற்பாதி யோகம்தரும் விதத்தில் அமைந்திருக்கிறது. என்றாலும் இடையில் குருவின் வக்ரமும் குருவின் அஸ்தமனமும் புதனின் அஸ்தமனமும் புதனின் வக்ரமும் வந்து கொண்டேயிருக்கிறது. எனவே, திருப்தியாக பலன் கிடைப்பதில் சில இடையூறுகள் ஏற்படலாம்.

பதினொறாமிடத்தைக் குரு பார்ப்பதால் இளைய சகோதரத்தின் வழியே இணக்கம் ஏற்படும். இல்லத்திற்கு தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழும் வாய்ப்புகள் கிட்டும். குழந்தைகளின் கடல்பயண வாய்ப்பு கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். அரசுவழிச் சலுகைகளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். வீடு கட்டுவதற்கும் வாகனம் வாங்குவதற்கும் கடன்கேட்டு விண்ணப்பித்தவர்கள் நீண்டநாட்களாக நல்ல தகவல் வரவில்லையே என்று நினைத்திருக்கலாம். அந்தநிலை இனிமாறும். எதிர்பார்த்த தொகை வந்து சேர்ந்து இனி துரிதமாக வேலை நடைபெறும்.

தந்தை வழியில் இருந்த விரிசல் மறையும் பங்காளிப்பகை மாறும். தங்களுக்கு கிடைக்க வேண்டிய பங்குகளை தானாகக்கொண்டு வந்து சேர்ப்பர். வாகன மாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும். வைத்திருக்கும் பழைய வாகனத்தைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்கி மகிழ்ச்சி காண்பீர்கள்.

**குருவின் வக்ர காலம்**

இக்காலத்தில் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. மக்கள் செல்வாக்கு அதிகம் பெற்றிருக்கும் நீங்கள் நாணயப் பாதிப்பு ஏற்படாமல் நடந்து கொள்ள வேண்டும். காரணம் வாக்கு ஸ்தானாதிபதியாக குரு விளங்குகிறார். அத்தோடு மட்டுமல்ல இலாபஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குகிறார்.

எனவே, எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து சொல்வது நல்லது. கொடுத்த வாக்கைக் கடைசி நேரத்தில்தான் காப்பாற்ற இயலும். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேர்வதில் தாமதம் ஏற்படலாம். தன்னம்பிக்கையுடன் செயற்படவேண்டிய மாதமிது. தட்சிணாமூர்த்தி வழிபாடு தித்திப்பான வாழ்க்கையை வரவழைத்துக் கொடுக்கும்.

இக்காலத்தில் குடும்ப ஒற்றுமை கூட வேண்டுமானால் நீங்கள் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். எந்த செயலையும் ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகும். கட்டடப்பணிகள் பாதியிலேயே நிற்கலாம்.

திருமண முயற்சிகளில் நிதானப் போக்கை கடைப்பிடிப்பது நல்லது. மீனத்தில் இருந்து செவ்வாய் பார்க்கும் பொழுது பங்குதாரர்களால் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடலாம். எனவே, கூட்டாளிகளிடம் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. அங்காரக வழிபாடும் ஆதியந்த பிரபு வழிபாடும் நன்மை தரும்.

இந்த ஆண்டு நன்மையும் தீமையும் கலந்த ஆண்டாகவே அமையும். வருடத் தொடக்கத்தில் குருவின் வக்ர இயக்கத்தால் குடும்பசுமை கூடும். கொடுக்கல்- வாங்கல்களில் திருப்தி இருக்காது. சகோதரர்களிடம் கருத்து வேறுபாடுகளும் சஞ்சலங்களும் உருவாகலாம். ஆரம்பத்தில் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரம். ஆனால், குருப் பெயர்ச்சிக்குப் பின்னர் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கப் போகிறீர்கள்.

உங்கள் இராசியை குரு பாரக்கப் போவதால் குழப்பங்கள் அகலும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பாசத்தோடு பழகி நேசிக்கும் நண்பர்களை கூட்டாக வைத்துக் கொண்டு தொழில் செய்ய வைத்துக் கொள்வர். இராகு- கேதுவின் ஆதிக்கம் 3,9 இல் உள்ளது. எனவே, பெற்றோர்களின் உறவு திருப்திகரமாக இருக்குமா என்பது சந்தேகம்தான். சர்ப்ப சாந்தி செய்வதன் மூலமும் சனி, செவ்வாய் வழிபாட்டின் மூலமும் சகஜ நிலைக்கு வர இயலும்.



**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு!**

உங்கள் இராசிநாதன் சனி என்பதால் சனிக்கிழமைதோறும் விரதமிருந்து அனுமன் வழிபாட்டையும் சனி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். யோக நட்சத்திரம் பார்த்து ஆலயங்களில் அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

உங்கள் பிறந்த திகதி மற்றும் கூட்டுத் தொகைக்குரிய எண்களின் ஆதிக்கம் பார்த்து அதற்குரிய தெய்வ வழிபாட்டை மேற்கொள்வதும் உகந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர்கள் நூல்களை கொள்வனவு செய்ய முடிபு

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக் களத்தால் உள்ளூர் எழுத்தாளர்க ளின் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்தல் தொடர்பில் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வதியும் எழுத்தா ளர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தெடர்பு கொண்டு விண் ணப்பிக்குமாறு யாழ்ப்பாண பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (அ-2)

# 10 அடி ஆழத்திற்கு கீழிறங்கியது நிலம்

கண்டி- பேராதனை வீதியில் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு அண்மையிலுள்ள வீதி சுமார் 10 அடி ஆழத்திற்கு கீழிறங்கியுள்ளதுடன் சுமார் 10 அடி தூரத்திற்கு மண்சரிவும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மலையகத்தில் இன்னும் 24 மணி நேரத்திற்குள் மண்சரிவு அபாயம் இருப்பதாக தேசிய கட்டட மற்றும் ஆராய்ச்சி அமைப்பு எதிர்வு கூறியுள்ளது.

பேராதனை பிரதான வீதி கீழிறங்கியமையினால் அந்த வீதியினூடாக வாகனங்களில் செல்வதை குறைத்துக் கொள்ளுமாறும் அந்த அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது. சீரற்ற காலநிலையினால் அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் மலையகத்தில் குறிப்பாக கண்டி, நுவரெலியா, மாத்தளை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு, பாரிய கற்கள் சரிந்து விழுதல், மண்திட்டு சரிந்து விழுதல் போன்ற அபாயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் குறித்த அமைப்பு எச்சரித்துள்ளது. (அ-2)

# போராட்டங்களின் பின்னணியில் இரண்டு மேற்குலக நாடுகள்

## சிங்கள நாளேடு தெரிவிப்பு

அரசாங்கத்திற்கு எதிராக மேற் கொள்ளப்பட்டு வரும் போராட்டங்க ளின் பின்னணியில் இரண்டு மேற் குலக நாடுகள் செயற்பட்டு வருவ தாக அரசிற்கு ஆதரவான சிங்க ளப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை பயன்ப டுத்தி இந்த சக்திகள் அரசாங்கத்தை ஆட்சி கவிழ்க்க முயற்சிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதப் போராட்டத்திற்கு நிதி மற்றும் வேறும் வழிகளில் ஒத் துழைப்பு வழங்கிய நாடுகளே இவ் வாறு அரசாங்கத்திற்கு எதிரான போரா ட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

இரண்டு நாடுகளைச் சேர்ந்த தூதரகங்களும் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியில் பிரேரணை குறித்த தகவல்களை சர்வதேச சமூ கத்திற்கு வழங்கி வருகின்றன.

எதிர்வரும் மார்ச் மாதம் நடை பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு நெருக்கடியை ஏற்ப டுத்தும் நோக்கில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதியை சர்வதேச நீதிமன் றின் முன் நிறுத்தி அரசாங்கத்தை பதவியிழக்கச் செய்து நாட்டை பிள வுபடுத்த குறித்த இரண்டு மேற்குலக நாடுகளும் முயற்சித்து வருவதாக குறித்த பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# பொது நலவாய மாநாட்டில் அவுஸ்திரேலியா பங்கேற்கும்

இவ்வாண்டு இறுதியில் இலங் கையில் நடைபெறவுள்ள பொதுந லவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டு அமர்வில் பங்கேற்பது என்ற நிலைப்பாட்டை அவுஸ்திரே லியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஏற்கனவே அவுஸ்திரேலியா வின் வெளியுறவு அமைச்சர் பொப் கார் இலங்கைக்கு சென்றிருந்த போது பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தில் தமது நாடு பங்கேற்கும் என்று அறிவித்திருந்தார்.

இதனை கொழும்பின் அவுஸ் திரேலிய உயர்ஸ்தானிகரகம் மீண் டும் உறுதிப்படுத்தியுள்து. இதன்படி அமைச்சர் பொப் காரின் கூற்றுப் படி அவுஸ்திரேலியா இந்த மாநா ட்டில் பங்கேற்கும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

எனினும் மனித உரிமைகளின் மேம்பாடு தொடர்பில் மாநாட்டில் பங்கேற்பதில்லை என்று கனடா அறிவித்துள்ளது.

அத்துடன் பிரித்தானியாவும் இந்த மாநாட்டில் பங்கேற்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (அ-2)

# தைப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சித்தன்கேணி ஸ்ரீநாக கன்னியம்பாள் ஆலய தைப் பொங்கல் பெருவிழா கடந்த திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை மறுதினம் திங்கட்கி ழமை தைப்பொங்கல் பெருவிழா வும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை கார்த்திகை விரதமும் வைரவர் மடை யும் நடைபெறும்.

தைப்பொங்கல் நிகழ்வுகளாக சுழிபுரம் அம்பாள் வில்லிசைக் குழு வினரின் பஜனைப் பாடல்கள், சைவச் சொற்பொழிவுகள் என்பன நடை பெறவுள்ளன. (அ-2)




★ 1528-சுவீடனின் மன்னனாக முதலாம் குஸ்தாவ் முடி சூடினான்.

★ 1539-புனித ரோமப் பேரரசு மன்னன் ஐந்தாம் சார்ள்ஸ் மற்றும் பிரெஞ்சு மன்னன் முதலாம் பிரான்சிஸ் ஆகியோருக்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது.

★ 1853-தாய்பிங் இராணுவம் சீனாவின் வூச்சாங் நகரைப் பிடித்தது.

★ 1875-சீனாவின் மன்னனாக குவாங்-சூ முடி சூடினான்.

★ 1908-முதற்தடவையாக தூர இடத்துக்கான வானொலி செய்தி ஈஃபெல் கோபுரத்தில் இருந்து அனுப்பப் பட்டது.

★ 1915-அமெரிக்கக் காங்கிரஸ் பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

★ 1918-பின்லாந்தில் உள்ள யூதர்கள் முழுக் குடியுரிமையைப் பெற்றார்கள்.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: பின்லாந்தின் பல நகரங்களின் மீது ரஷ்யா குண்டுகளை வீசியது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் நாசிகளுக்கு எதிரான பெரும் போரை கிழக்கு ஐரோப்பாவில் ஆரம்பித்தது.

★ 1964-சான்சிபாரின் புரட்சிவாதிகள் சன்சிபார் புரட்சியை முன்னெடுத்து சன்சிபாரைக் குடியரசாக அறிவித்தனர்.

★ 1967-எம்.ஜி.ஆர். கொலை முயற்சி: நடிகர் எம்.ஆர்.ராதா, எம்.ஜி. ராமச்சந்திரனை துப்பாக்கியால் சுட்டுப் படுகாயப்படுத்தினார்.

★ 1970-நைஜீரியாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1976-பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஐ.நா. பாதுகாப்பு அவையில் வாக்குரிமையில்லாமல் விவாதங்களில் கலந்து கொள்வதற்கு ஐ.நா. பாதுகாப்பு அவை 11-1 என்ற வாக்கு வித்தியாசத்தில் அனுமதி அளித்தது.

★ 1992-மாலியில் அரசியல் கட்சிகள் அமைப்பதற்கு ஏதுவாக பொது வாக்கெடுப்பு மூலம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டது.

★ 2004-உலகின் மிகப் பெரும் பயணிகள் கப்பலான ஆர்.எம்.எஸ். குயீன் மேரி 2 தனது கன்னிப்பயணத்தை ஆரம்பித்தது.

★ 2005-புளோரிடாவின் கென்னடி ஏவுதளத்திலிருந்து போயிங் டெல்டா -II என்ற விண்கலத்தை 133 மில்லியன் மைலுக்கு அப்பால் பரிதியைச் சுற்றி பூமியை நெருங்கி வரும் டெம்பெல் 1 என்ற வால்வெள்ளினைக் குறி வைத்து நாசா ஏவியது.

★ 2006-சவுதி அரேபியாவில் மினா நகரில் சாத்தான் மீது கல்லெறியும் நிகழ்ச்சியின் போது இடம் பெற்ற நெரிசலில் சிக்கி 44 இந்தியர்கள் உட்பட 362 பேர் உயிரிழந்தனர்.

★ 2006- 25 ஆண்டுகளுக்கு முன்னர் பாப்பரசர் இரண்டாம் ஜோன் போலை சுட்டுக் காயப்படுத்திய மெஹ்மேட் அலி ஆக்கா என்பவர் துருக்கிய சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

★ 2007-மாக்னாட் வால்வெள்ளி சுற்றுப் பாதை வீச்சுக்குக் கிட்டவாக வந்து 40 ஆண்டுகளில் தெரிந்த மிகவும் பிரகாசமான வால் வெள்ளியானது.

### பிறப்புக்கள்

★ 1863-சுவாமி விவேகானந்தர் (இ.1902)

★ 1899-போல் ஜேர்மன் முல்லர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1965)

★ 1917-மகேஸ்யோகி, இந்திய ஆன்மீகவாதி(இ.2008)

★ 1960-டாமினீக் வில்கின்ஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

★ 1972-பிரியங்கா காந்தி, இந்திய அரசியல்வாதி

### இறப்புக்கள்

★ 1976-அகதா கிறிஸ்டி, ஆங்கில எழுத்தாளர் (பி.1890)

★ 1997-சார்ள்ஸ் ஹக்கின்ஸ், நோபல் பரிசு பெற்ற கனேடிய புற்றுநோய் ஆராய்ச்சியாளர் (பி. 1901)

★ 2000 - வி.ஆர்.நெடுஞ்செழியன், தமிழக அரசியல் தலைவர் (பி.1920)

### சிறப்பு நாள்

இந்தியா தேசிய இளைஞர் தினம் (சுவாமி விவேகானந்தர் பிறப்பு)

### இரா.நெடுஞ் செழியன்



இரா.நெடுஞ்செழியன் தமிழக அரசியல் வாதியும் இலக்கிய வாதியும் ஆவார். இவர் தமிழகத்தின் நிதி அமைச்சராகவும்சிறிதுகாலம் மாற்றுமுத லமைச்சராகவும் பதவி வகித்தவர். இவர் நாவலர் என்றும் அழைக்கப்படுவார்.

**அரசியல்**

இவர் 1980 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் அமைச்சரவை அமைக்கும் பொழுதெல்லாம் நிதி அமைச்சராகப் பதவி வகித்தார்.

அண்ணா இறந்த பொழுது 1969 ஆம் ஆண்டு பெப்ரவரி 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை, எம்.ஜி.ஆர். இறந்த பொழுது 1987 ஆம் ஆண்டு டிசெம்பர் 24 ஆம் திகதி தொடக்கம் 1988 ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் திகதி வரை இடைக் கால முதலமைச்சராக பதவி வகித்தார்.

**மறைவு**

இவர் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பல் பயன்தரும் மரங்களும் வேளாண் காடுகளும்

வாருங்கள் எம்மினிய உறவுகளே! மரம் சார்ந்த பயிர்ச்செய்கை (Tree based Farming) என்பது காடு வெட்டி களனி திருத்தி பயிர்செய்த காலத்திலிருந்தே கடைப் பிடிக்கப்பட்டு வந்தாலும் இதனை எமது வாழ்வியலுடன் சேர்த்தே காணமுடிகின்றது. குறிப்பாக வட பகுதியை வரைவுக்குட்படுத்தி னால் பனை, தென்னை போன்ற மரங்க ளின் ஆளுமைக்குட்பட்டதாக அதிலும் பனை மரத்து வாழ்க்கைப் பாரம்பரியமாகி பின்னர் அதிலிருந்து விடுபட்டதான பயிர்ச்செய்கை முறைமைக்குள் உள்ளீர்க்கப்பட்டிருக்கின்றோம்.

மரங்களைக் கொண்டதொரு கூடல் அதற்குள்ளே நாச்சார வீடு. அங்கே பல குடும்பங்கள் அவர்களது உறவுகள் இனிமையான ஒற்றுமையாக வாழ்ந்த வாழ்க்கையை இன்றும் பலர் உதாரணமாக்குவதுடன் உவமையாக்கியும் பெருமைப்பட்டுக் கொள்வர். அவ்வாறான கூட்டுக்குடும்பங்களில் இருந்து சிறப்பு, மகிழ்ச்சி, ஒற்றுமை, விட்டுக் கொடுப்பு இன்னும் பலம் அனைத்துமே ஒருங்கிணைந்ததை அவதானித்திருக்கலாம். ஒன்றுபட்டாலே உண்டு வாழ்வு. இது மரங்களின் கூட்டம் எமக்குச் சொல்லி வைத்துள்ள கதை.

விக்கும் செயலாகும். மரங்களின் மதிப்பையும் மகிமையையும் இம்மக்கள் சரிவர புரிந்து கொண் டதனால் மர நடுகையை இவ்வாறான சடங்குகளினூடாக நிறைவேற்றுகின்றார்கள்.

இன்னும் இதுபற்றி நிறையவே கூறலாம். எமது பிரதேசத்திலிருக்கும் அதிசயமெனவும் இதனைக் கூறலாம். பல இடங்களில் பனையின் அடியைச்சுற்றி அரச மரமோ, ஆலமரமோ முழுமையாக பற்றி சுற்றி வளர்ந்திருப்பதையும் அம்மரங்களை ஊடறுத்து பனை மேலே வளர்ந்து இருப்பதையும் காணலாம். இதில் அரச மற்றும் ஆலமரத்துக்கு பனை மரம் ஒரு தூணாக இருக்கும். அநேகமாக ஏ 9 பாதையினூடாக பயணிப்பவர்கள் பாதையோரம் இக்காட்சியினை கண்குளிர காணலாம்.



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 24-X

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

மரம் சார்ந்த பயிர்ச்செய்கையினை பல விதமாக நோக்கலாம். இது பற்றிய தெளிவு அறிவுபூர்வமாக உள்வாங்கப்பட வேண்டும் எனும் எண்ணக்கருவில் பிறந்ததே இக்கட்டுரை. இயன்றவரை விளக்க முற்பட்டுள்ளேன். அறிவு பூர்வமான தேடல் பலவாறாக உருக்கொண்டிருப்பதை பலமட்டங்களிலும் அறிய முடிந்ததற்கான விளைவே இது.

பாரம்பரியமாக வாழ்ந்த மக்களினதும் வாழ்வியல் வரலாறுகளை ஒருகணம் மீட்டிப் பார்த்தால் அவர்களது வாழ்க்கை படி நிலைகளை எமக்கு படிப்பினையாக்கிக் கொள்ளலாம். வாழ்ந்தவர்கள் வரலாறாகியிருக்கின்றனர்.

தமிழ் நாட்டில் தேக்கு மரங்களை வரிசையாக நடவு செய்து அதனை ஆரம்பத்திலிருந்தே பக்க அரும்புகளை கத்தரித்து மரம் நேராக நீண்டு வளர வைத்து விடுவார்கள். இவ்வாறான தேக்கு மரங்களை நடுகை செய்து அக்காணியை தங்களது பெண்பிள்ளைகளுக்கு சீதனமாக கொடுத்து விடுவர். பெண் பிள்ளைக்கு பிறக்கும் குழந்தை வளர்ந்து ஆளாக தேக்க மரமும் வளர்ந்து முதிர்ந்து விடும். அந்த நேரத்து பணதேவையை இத் தேக்கு மரங்களை விற்று பூர்த்தி செய்வார்கள் திருமணச் சடங்கில் சீதனமாக மரங்களை நடவு செய்து கொடுக்கும் வழக்கம் சூழலையும் மெருகுபடுத்தும் அதேநேரம் இயற்கையன்னையையும் மகிழ்விக்கும் இன்னும் குளிர்

இங்கே பனை, ஆல், அரசு என்பன தனித்து வளரக்கூடிய மரங்களாயினும் ஆலும் அரசும் பனையில் வளர்ந்திருப்பது ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்து இரண்டும் ஓரிடத்திலே வளர்ந்திருப்பது எமக்கொரு பாடமாகவும் இருக்கின்றதல்லவா. உறவுகளின் இணை பிரியாத் தன்மையை எடுத்தியம்பும் இவ்வாறான காட்சிகளினூடாக உயிரின் பல்வகையை (Biodiversity) என்பது இலகுவாக உணர்த்தப்பட்டிருக்கின்றது. இந்த நிகழ்வுகளின் உள்ளார்ந்த விடயத்தை இன்னும் ஆழமாக அவதானித்தால் மரங்களின் கூட்டமைப்பு கூறும் விபரம் புரியும்.

வேளாண் காடுகளை பல்வகைத் தன்மையினதாக ஆக்கிக் கொள்வதிலேயே அதன் சிறப்பு முழுமை பெறும். இதனையே எமது விளைநிலங்களில் பிரதிபண்ண முயற்சிக்கின்றோம்.

இன்னும் இதனை சுருக்கி வீட்டுத் தோட்டமாக்கி அதனும் அனைத்தையும் உள்ளடக்க முயல்கின்றோம். கட்டுவன் பகுதியிலிருக்கும் ஒரு வீட்டுத் தோட்டத்தில் 67 தாவரங்கள் இருக்கின்றன என்றால் பாருங்களேன்!

# புலிகள் மீதான தடையை நீடித்தது இந்திய அரசு

## வர்த்தமானியிலும் வெளியீடு

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் விதித்த தடை நீட்டிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்தியாவில் தடை விதிக்கப் பட்டது.

குறித்த தடை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நீட்டிக்கப்படுகின்றது. கடைசியாக 14.5.2012 இல் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீட்டித்து மத்திய உள்துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டது.

இந்தத் தடை நீட்டிப்பு சரியானதா இல்லையா என்பது குறித்து நீதிபதி வி.கே. ஜெயின் தலைமையிலான சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு தீர்ப்பாயம் விசாரணை சென்னை, ஊட்டி, டில்லி ஆகிய இடங்களில் நடைபெற்றது.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீட்டிப்புக்கு எதிரான தீர்ப்பாயத்தில் வாதிட்டனர்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீட்டித்து மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையை நீதிபதி எம்.கே. ஜெயின் தலைமையிலான தீர்ப்பாயம் உறுதிப்படுத்தியுள்ளது. (அ-2)



பெண்கள் விடுதலைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் சவுதியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கை பணிப்பெண் ரிசானா நபீக்கின் மரணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் கொழும்பு- கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றதைப் படத்தில் காணலாம்.

# சர்வாதிகார போக்குக்கு முடிபு கட்டப்பட வேண்டும்

## பிரேரணையை எதிர்க்கும் சட்டத்தரணிகள் கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை மற்றும் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஆகியவற்றுக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகள் இன்றுடன் (நேற்று) முடியப் போவதில்லை. இது தொடக்கமே தவிர முடிவல்ல என சட்டத்தரணிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொழிற் சங்கவாதிகள் தெரிவித்தனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா கருத்து தெரிவிக்கையில்,

எமது கருத்தை இந்த அரசாங்கம் கவனத்தில் எடுத்து இந்த நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வரவேண்டும். சர்வாதிகாரத்திற்கு முடிவுகட்ட வேண்டும். பொல்பொட், இடி அமின் போன்றோரின் சர்வாதிகாரம் போன்று இந்த சர்வாதிகாரமும் நீடிக்க முடியாது என்றார்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லால்காந்த கருத்து தெரிவிக்கையில், குற்றப்பிரேரணையை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்குமாயின் அது அரசியலமைப்பை மீறும் செயற்பாடாகும் என்றார்.

இதில் கலந்து கொண்ட ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகா கருத்து தெரிவிக்கையில், சட்டத்தரணிகளும் சட்டத்துறையிலுள்ள நட்பு சக்திகளும் தமது போராட்டத்தை தொடரவேண்டும். இது தொடக்கமே தவிர முடிவல்ல என்றார். (அ-2)

## சட்டம் ஒழுங்கு சீர்குலைவால்

# வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளியேற முயற்சிக்கின்றனர்

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாடு திரும்ப முயற்சித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுவதாக அரசாங்கம் பிரசாரம் செய்கின்றது. எனினும் எஞ்சியுள்ள சொற்ப வெளிநாட்டு முதலீட்டாளர்களும் திரும்பிச் செல்கின்றனர்.

நாட்டில் ஜனநாயகம் மற்றும் சட்டம் ஒழுங்கு நிலைமைகளில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் ஒருபோதும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்யமாட்டார்கள்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கிய சந்தர்ப்பங்களிலேயே ஈ.எப்.எப். பிரிவின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக்கொள்ளப்படும். அரசாங்கம் இந்தக் கடனுக்காக விண்ணப்பம் செய்துள்ளது.

பொருளாதாரத்தை மீளமைக்கும் நிபந்தனையுடனேயே சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும்பாதிப்புக்குள்ளானோருக்கு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்டத்தில் கடும்பாதிப்புற்றவர்களுக்கான கொடுப்பனவுகள், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள இறந்தவரின் விபரமும் பயனாளிகள் விபரமும் வருமாறு,

ஆறுமுகம் சிவபாலசிங்கம் (எஸ்.செல்வராணி, எஸ். அனுஷன், எஸ். ஹம்சிகா-குமிழமுனை)

தீபன் ஸ்ரீவிமலரா... (வி.தீபன்-வள்ளுவர்புரம்)

ஏ.ஜெ.அன்ரன் கனியூட் (எஸ்.அன்ரன் கனியூட் - பி.டபிள்யூ.டி.றோட், முல்லைத்தீவு)

அழகையா கஜதீபன் (எஸ்.அழகையா - ஒட்டுசுட்டான்)

சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா (இல.278/3, பாரதிபுரம்)

அந்தோனிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (யூ.அனுசிவாந்தனா - செல்வபுரம்)

பரமசிவம் விக்னேஸ்வரி (என்.பரமசிவம், பி.திவ்யா- திருவள்ளுவர்நகர்)

செல்லையா சோமசுந்தரம் (எஸ்.சந்திராணி, எஸ்.சர்மிளா, எஸ்.சர்மிளன், எஸ்.சாருஜன், எஸ்.ரமின்தன் - மாணிக்கபுரம்)

துரைசிங்கம் ஜெயராகுலன் (ஜெ.ஜெயமலர், ஜெ.பவித்ரா -புளியங்குளம்)

கந்தையா ரதினேஸ்வரன் (ஆர்.ஜெயசெல்வி, ஆர்.சுபாங்கி, ஆர்.கம்சனா - குமிழமுனை)

கண்ணையா வள்ளியம்மா (கே.இராசலிங்கம் - வித்தியாபுரம்)

பொன்னம்பலம் தர்மராசா (டி.தனலட்சுமி, டி.யதுஷன் - விஸ்வமடு)

மதியாபரணம் துஷ்யந்தினி (ஆர்.மதியாபரணம் - மாணிக்கபுரம்)

செல்வராசா நகுலேஸ்வரன் ( என்.விக்னேஸ்வரி, என்.ரஜீவன், என்.நிரூபன், என்.நிரோஜினி, என்.நிரோஜன் - அம்பஹாமம்)

ரங்கன் வரதன் (வி.ஜெயகுமார்-மாணிக்கபுரம்)

விஜயரட்ணம் சுதர்சினி (டபிள்யூ.சீதா-துணுக்காய்)

கோவிந்தன் ரங்கசாமி (ஆர்.கலாமதிரட்ணம், ஆர்.சுஜிகரன் - மாணிக்கபுரம்)

ஜெயகுமார் தனுஷிகா (வல்லிபுரம் ஜெயகுமார் - புளியங்குளம்)

யோகராசா எழிலன் (வை.வசந்தி -விசுவமடு

கோவிந்தன் அமர்தலிங்கம் (ஏ.கோவிந்தம்மா-மாணிக்கபுரம்)

முத்துமுருகன் சிவகுமார் (எஸ்.தேவி, எஸ்.தர்ஷிகா, எஸ்.தனுஷிகா, எஸ்.தனுஷியா, எஸ்.யாழரசன் - மாணிக்கபுரம்)

சின்னையா சிவகஜீம் (எஸ்.சின்னம்மா-துணுக்காய்)

நவரட்ணம் சுவேந்திரன் (என்.ரஞ்சிதம்-முத்தையன்கட்டு)

முத்துமணி பாலச்சந்திரன் (பி.கஜானி, பி.அபிநயா, பி.கஜந்தன், பி.மேனகன்-மன்னாகண்டல்)

சதாசிவம் விதுஷா (எஸ்.ஜீவகுமாரி-இடதுகரை, முத்தையன்கட்டு)

செல்லத்துரை மகாலிங்கம் (எம்.சுபாஜினி, எம்.பானுஜா, எம்.அஜித் - கருவேலங்கண்டல்)

இராமச்சந்திரன் மனோதரன் (பி.பாக்கியலட்சுமி-மாணிக்கபுரம்)

சிவலிங்கம் கிட்ணம்மா (எஸ்.யாழினி, எஸ்.டினோஜன்-மாணிக்கபுரம்)

மங்களேஸ்வரன் நாகம்மா (எம்.நாகம்மா-வள்ளுவர்புரம்)

செல்வரட்ணம் நிரோஜன் (வி.செல்வரட்ணம் - வித்தியாபுரம்)

விக்டர் ஜெயமணி பிரின்சி (வி.ஜே.பாத்திமா பத்மினி - வித்தியாபுரம்)

ஞானசேகரம் சிறியானி (எஸ்.ஞானசேகரம், ஜி.கிரிஷாந்தன் - மாணிக்கபுரம்)

மகாலிங்கம் வேந்தன் (வி.மகாலிங்கம்-பண்டாரவன்னி)

புலேந்திரராசா அஜந்தகரன் (பி.பரமேஸ்வரி - புளியங்குளம்)

நித்தியானந்தன் பகீரதன் (பி.நித்தியானந்தன் - மாணிக்கபுரம்)

தியாகராசா ராஜிகுமார் (எஸ்.தியாகராசா-மாணிக்கபுரம்)

அருளம்பலம் யசோதினி (ஏ.ஞானாம்பிகை அம்மா - புத்தடி விஸ்வமடு)

சத்தியமூர்த்தி கௌரியம்பாள் (எஸ்.அனஸ்ராஜ் - துணுக்காய்)

தங்கராசா மல்லிமலர் (கே.தங்கராசா, ரீ.ஜனான்ரன், ரீ.ஜனான்திகா, ரீ.சர்மிகா - தச்சடம்பன்)

செல்வராசா தவமணி (கே.செல்வராசா, எஸ்.ஜெனிசலா, எஸ்.நிதுஷன் -குளமுறிப்பு)

இராசரட்னம் கேதீஸ்வரன் (கே.பரீதா, கே.தர்சிகா, கே.ரெபேக்கா - இந்துபுரம்)

இராசரட்னம் நிரூபன் (டபிள்யூ.இராசரட்னம் - எருவில்)

கிருஷ்ணபிள்ளை சசிகரன்(எஸ்.மதீனா, எஸ்.சோபிகா - தொட்டியடி, விஸ்வமடு)

அம்பிகைதேவன் தேன்குமரன் (ஏ.கனகேஸ்வரி - வசந்தபுரம்)

ரவிச்சந்திரன் சுதர்சன் (ஆர்.சுமதி - வள்ளுவர்புரம்)

நடராசா முருகேசு (சின்னசலம்பன்)

மோகன் தயாளினி (அமதிப்ரம்)

கனகராசா புஸ்பராணி (தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளை)

பஞ்சலிங்கம் மஞ்சுளா (திருவள்ளுவர்நகர்)

கெங்காதரன் பவதாரணி (தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளை)

விமலதாஸ் அனுரதி (வளாங்காநகர் மல்லாவி)

பாஸ்கரன் கிரிகாந்த் (திருவள்ளுவர் நகர்)

இன்பதாஸ் எழிலினி (யோகபுரம் கிழக்கு)

ஜெயகாந்த் தயாபரன் (கல்விளான்)

சிவசூரியன் நிமலன் (வளாங்காநகர் மல்லாவி)

நடராசா குருபரன் (பாரதி நகர்)

அழகலிங்கம் மகேஸ்வரன் (செல்வபுரம்)

பேரம்பலம் அன்ரன் ஜேசுதாசன் (செல்வபுரம்)

ஐயாகுட்டி ஞானரூபதி (செல்வபுரம்)

(அ-267)

## பெண்ணொருவர் குத்திக்கொலை

இந்துருவ-மஹவத்த பகுதியில் கூரான ஆயுதத்தினால் குத்தி பெண்ணொருவர் கொலை, செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

வீட்டிற்குள் நுழைந்த ஒருவரே குறித்த பெண்ணை கொலை செய்திருக்கலாம் என பொலிஸ் ஊடகப் பிரிவு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

பலத்த காயங்களுக்கான பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

39 வயதான மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணித்தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிப்பதுடன் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை, கல்கமுவ-காடுவெவ பகுதியிலும் பெண்ணொருவர் கூரான ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கணவரால் குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

## எங்கள் பிள்ளைகள் உயிருடன் உள்ளனரா?

வன்னியில் நடைபெற்ற இறுதிப்போரின் போது எமது பிள்ளைகள் பலர் காணாமல் போயுள்ளனர். பலர் படையினரிடம் சரணடைந்துள்ளனர். எமது பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள், என்று இதுவரை தெரியவில்லை. அவர்களைக் கண்டுபிடித்து எமக்கு அறியத்தாருங்கள் என முல்லைத்தீவு பெற்றோர்கள் இலங்கை கத்தோலிக்க ஆயர் குழுவிடம் கண்ணீர்மல்கியவாறு உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### ஆயர் குழுவிடம் புதுக்குடியிருப்பு மக்கள் கண்ணீர்மல்க கேள்வி

வன்னி மக்களின் நிலைமைகளை நேரில் அறிந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் இலங்கை ஆயர் மன்றத்தின் தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலான 10 ஆயர்களைக் கொண்ட குழுவினர் முல்லைத்தீவிற்கு பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது ஆயர்களை சூழ்ந்து கொண்ட அப்பகுதி வாழ்மக்கள் கதறியழுதவாறு கைகளை ஏந்தி விடுத்த இந்தக் கோரிக்கை அங்கு சென்றிருந்த ஆயர்களின் மனங்களையும் நெகிழ வைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குழுவினர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை உள்ளிட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு ஆயர்களும் தனித்தனியாக மக்களின் குடிசைகளைத் தரிசித்து அங்கு அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில் ஆராய்ந்துள்ளனர். அதன்போதே அங்கு கூடிய பெற்றோர் ஆயர்களிடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

இறுதிப் போரின்போது எமது பிள்ளைகள் பலர் காணாமற் போயுள்ளனர். பலர் படையினரிடம் சரணடைந்தனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்பவை தொடர்பில் எதுவும் எங்களுக்குத் தெரியாது. அவர்கள் எம்மிடம் திரும்பி வருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் நாங்கள் கடந்த மூன்று வருடங்களாக காத்திருக்கின்றோம். எங்கள் பிள்ளைகள் தொடர்பான விபரங்களை அரசிடம் தொடர்பு கொண்டு அறிந்து சொல்லுங்கள் எனக் கண்ணீர் மல்கியவாறு ஆயர்களிடம் உருக்கமான கோரிக்கை விடுத்தனர்.

சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள போதும் எமக்கு எந்தவித உதவிகளையும் அரசு வழங்கவில்லை. மழை, வெயில் ஆகியவற்றுக்கு மத்தியில் எங்கள் வாழ்வு நகர்கிறது. பிள்ளைகள் கல்வியை தொடர்வதற்கு எதுவும் இல்லை.

எங்களது நிலைமைகளை இப்போது நீங்களும் நேரில் வந்து கண்டிருக்கின்றீர்கள். இதனை அரசுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று ஆயர் குழுவிடம் தெரிவித்தனர். (அ-2)

## நெல்வயல்களை அழிக்கும் கட்டாக்காலி கால்நடைகள்

### கட்டுப்படுத்த கோரிக்கை

ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட ஒலுமடு தச்சடம்பன், கரிப்பட்டமுறிப்பு ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளால் நெல்வயல்கள் நாசம் செய்யப்படுவதோடு போக்குவரத்து வீதிகளில் அவை படுத்திருப்பதன் காரணமாக விபத்துக்களும் ஏற்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட திகதிக்குள் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளின் நெற்பயிர்களை இக்கால்நடைகள் தொடர்ச்சியாக அழித்து வருகின்றன. வங்கிகளில் கடன் பெற்று பயிர் செய்த விவசாயிகள் அண்மையில் பெய்த மழை வெள்ளத்தாலும் இக்கட்டாக்காலிகளினாலும் பாதிக்கப்படுவதால் கடனை மீள செலுத்த முடியாத அவலநிலை தோன்றியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, ஒலுமடு கமநல சேவைப் பிரிவினரும் கமக்கார அமைப்பினரும் துரிதமாக செயற்பட்டு கால்நடைகளை கட்டுப்படுத்தி உதவுமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளனர். (அ-3-15)

## புதிய பிரதம நீதியரசரை ஏற்றுக்கொள்ள வேண்டாம்

### சட்டத்தரணிகள் ஒன்றியம் கோரிக்கை

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவி நீக்கப்பட்டு புதிய நீதியரசர் அல்லது பதில் நீதியரசர் நியமிக்கப்பட்டால் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என உயர் நீதிமன்ற சட்டத்தரணிகளிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சட்டத்தரணிகளின் ஒன்றியம் உயர்நீதிமன்ற சட்டத்தரணிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

புதிய நீதியரசர் நியமிக்கப்பட்டால் அவரை ஏற்கக்கூடாது. புதிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாமையும் ஏற்கக் கூடாது. அவர்களோடு இணைந்து செயற்படக்கூடாது.

அரசியல் அமைப்பை மீறி தற்போதைய பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சட்டத்தரணிகளாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட போது அரசியல் அமைப்பிற்கு உட்பட்டு நடப்போம் என உறுதியளித்துள்ளோம்.

எனவே, புதிய நீதியரசர் நியமிக்கப்பட்டு அவரை ஏற்றுக் கொண்டால் அது அரசியல் அமைப்பை மீறும் செயலாகும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா-பாக். இடையே வலுக்கிறது முறுகல் நிலை

## கண்காணிப்பு தீவிரம் என்கிறார் அந்தோனி

ஜம்மு -காஷ்மீர் மாநிலத்தில் உள்ள எல்லையில் இந்திய இராணுவ வீரர்கள் இருவரை பாகிஸ்தான் இராணுவம் சுட்டுக் கொன்றது. தொடர்ந்து நேற்று முன்தினம் நடந்த மோதலின்போது பாகிஸ்தான் வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். இதனால் எல்லையில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒரே நாளில் 4 தடவை பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியது. இதனால் எல்லையில் உள்ள இராணுவ வீரர்களிடம் பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றது.

இதேவேளை, எல்லைப்பிரச்சினை காரணமாக இந்தியாவில் இருந்து பாகிஸ்தானின் கட்டுப்பாட்டு காஷ்மீர் மாநிலத்திற்கு செல்லும் 25 சரக்கு பாரவூர்திகளின் கட்டுப்பாட்டு எல்லையில் பாகிஸ்தான் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டன.

தொடர்ந்து பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீரில் இருந்து ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு வரும் பேருந்து போக்குவரத்தை பாகிஸ்தான் தற்காலிகமாக இரத்து செய்துள்ளது.

பாகிஸ்தானின் இந்நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவித்துள்ள இந்திய மத்திய பாதுகாப்பு மந்திரி ஏ.கே.அந்தோனி கூறுகையில்,

பாகிஸ்தான் இராணுவம் எல்லையில் அடிக்கடி போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவது கவலை தருவதாக உள்ளது. எனவே, எல்லை கட்டுப்பாட்டு கோடு பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளோம்.

எல்லை கட்டுப்பாட்டு கோடு பகுதியில் இராணுவ வீரர்கள் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. நாட்டை பாதுகாக்க தேவைப்படும் பட்சத்தில் அவர்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள்.

மேலும் காஷ்மீர் மாநிலத்துக்கு நாட்டின் ஏனைய பகுதியில் இருந்து கூடுதல் இராணுவ வீரர்களை அழைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் காஷ்மீர் மாநிலத்தில் போதுமான இராணுவ வீரர்கள் உள்ளனர்.

நமது நாட்டை காக்க தேவையான எல்லா நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துள்ளோம் என்று தெரிவித்தார். (அ-5)

# வரலாறு காணாத பனிப்பொழிவு; இஸ்ரேலின் இயல்புநிலை பாதிப்பு

இஸ்ரேல் நாட்டில் வரலாறு காணாத அளவு பனிப்பொழிந்து வருகிறது.



இஸ்ரேல் நாட்டில் கடந்த 20 ஆண்டுகள் இல்லாத வகையில் கடுமையான பனிப்புயல் வீசியுள்ளது.

இதனால் 6 அங்குலம் முதல் ஒரு அடி உயரம் வரையில் பனிக் கட்டிகள் குவிந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள துடன் வாகன போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டதுடன் வடகிழக்கு இஸ்ரேல் பகுதி மிகவும் பாதிப்படைந்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# எண்ணெய் கிடங்கில் தீ விபத்து; இருவர் உடல் கருகிப் பலி

## அசாமில் சம்பவம்

அசாம் மாநிலம் சிப்சாகர் மாவட்டம் கெலக்கியில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்தின் (ஓ.என்.ஜி.சி) கிடங்கு உள்ளது. இதில் உள்ள 3 ஆவது கிடங்கின் ஒரு பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. கொளுந்துவிட்டு தீ எரிந்ததால் தொழிலாளர்கள் அலறியடித்து வெளியேறினர்.

இதையடுத்து ஓ.என்.ஜி.சியின் தீயணைப்பு படை வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இந்த தீ விபத்தில் 2 தொழிலாளர்கள் உடல் கருகி இறந்தனர்.

பல ஆயிரம் தொன் எண்ணெய் எரிந்து நாசமானது. மொத்தச் சேத விபரம் மற்றும் தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை.

விபத்து தகவல் அறிந்ததும் மூத்த அதிகாரிகள் அசாம் மாநிலத்துக்கு விரைந்தனர். (அ-5)

# பாக்.கில் இரட்டை குண்டு வெடிப்பு! 93 பேர் பலி; 169 பேர் படுகாயம்

**பாகிஸ்தானின் தென்மேற்கு நகரமான குவெட்டாவில் இடம்பெற்ற இரட்டை குண்டு வெடிப்பில் 93 பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் கூறியுள்ளனர்.**

இத்தாக்குதலில் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என பாகிஸ்தானின் உள்துறை செயலர் அக்பர் துரானி கவலை வெளியிட்டுள்ளார்.

அந்நகரில் மக்கள் நடமாட்டம் நிறைந்த ஸ்னூக்கர் விளையாட்டு விடுதியில் முதலாவது குண்டுத் தாக்குதல் நடைபெற்றுள்ளதாகவும் இத்தாக்குதல் நடந்து வந்த ஒரு தற்கொலை குண்டுதாரியால் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் நம்புவதாக ஹமீத் ஷகீல் எனும் அதிகாரி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.



குறித்த தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாக கூறும் பொலிஸார் அதில் தமது பல அதிகாரிகளும் அடங்குவதாக தெரிவித்துள்ளனர்.

முதலாவது தாக்குதல் நடைபெற்று சில நிமிடங்கள் கழித்து ஸ்னூக்கர் வளாகத்திற்கு வெளியே வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் குண்டு வெடித்ததில் அந்த ஸ்னூக்கர் கழகம் இருந்த கட்டடம் இடிந்து விழுந்துள்ளது.

ஒரு வாகனத்தின் கீழ் இரண்டாவது குண்டு வைக்கப்பட்டிருந்ததாகவும் அந்த விடுதிக்கு அதிகம் வந்து செல்லும் துணை இராணுவத்தினரை குறி வைத்தே இத்தாக்குதல் இடம்பெற்றதாகவும் குறித்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல்களில் பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் ஷியா முஸ்லிம்கள் என்று நம்பப்படுகின்றது.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை காலை குவெட்டாவிலிலுள்ள ஒரு அங்காடிப் பகுதியில் மற்றொரு குண்டு வெடித்ததில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

ஒருங்கிணைந்த பலூச் இராணுவம் என்னும் ஆயுதக் குழுவே இந்தத் தாக்குதலை நடத்தியாக அதன் பேச்சாளர் கூறியுள்ளார்.

ஷியா மற்றும் சுனிப் பிரிவு முஸ்லிம் மக்களிடையே ஏற்படும் இனமோதல் மற்றும் பிரிவினைவாத போராட்டத்தினால் பலூச்சிஸ்தான் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. (அ-5)

# பலாத்காரத்தின் பின் சிறுமி மீது தீ வைப்பு

## இந்தியாவில் தொடர்கிறது வன்முறை

வீட்டில் தனியாக இருந்த 14 வயது சிறுமி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு பின்னர் மண்ணெண்ணெய் ஊற்றி எரிக்கப்பட்டுள்ள சம்பவம் இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தன்னை பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்டபோது இளைஞரை அச்சிறுமி பலமுறை தாக்கியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அந்த இளைஞர் அச்சிறுமியை தீ வைத்து எரித்துள்ளார்.

சிறுமியின் அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த அயலவர்கள் அச்சிறுமியை மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ள அச்சிறுமியின் தந்தை அளித்த முறைப்பாட்டில் இளைஞரின் மாமாவை கைது செய்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-5)

# நீதிமன்றம் சென்ற கிளிகளின் காதல் கதை

வங்கதேசத்தில் காதலனிடமிருந்து பிரிக்கப்பட்ட கிளி நீதிமன்றத்தின் மூலம் மறுபடியும் காதலுடனும் இணைந்துள்ளது.

வங்கதேசத்தைச் சேர்ந்தவர் இக்ரம் சலீம். இவர் பிரேசில் நாட்டைச் சேர்ந்த பஞ்சவர்ணக் கிளிகளை வளர்த்து வந்தார்.

வாடகை வீட்டில் இந்த கிளிகளை வளர்க்க போதிய இடவசதி இல்லாததால் சிறிது காலத்துக்கு தாகா நகரில் உள்ள தனியார் உயிரியல் பூங்காவில் விட்டிருந்தார்.

உயிரியல் பூங்காவில் ஆண் பஞ்ச வர்ண கிளியுடன் இந்த ராணி கிளிக்கு தொடர்பு ஏற்பட்டு காதல் மலர்ந்தது.

இதற்கிடையே வேறு வீட்டுக்கு குடிபெயர்ந்த சலீம் தனது செல்ல பெண் கிளி ராணியை உயிரியல் பூங்காவிலிருந்து அழைத்து வந்தார். ஆனால் தனது காதலனை விட்டு பிரிந்திருக்க முடியாமல் கடந்த ஒருவாரமாக பெண்கிளி ராணி பட்டினி கிடந்தது.

உயிரியல் பூங்கா உரிமையாளர் அப்துல் வதூத் ஆண் கிளியை தர மறுத்ததை தொடர்ந்து இது தொடர்பாக சலீம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

அதில் ஆண் கிளியை பிரிந்திருக்கும் ராணி பட்டினி கிடப்பதால் அதன் இணையுடன் சேர்ந்து வாழ உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி உயிரியல் பூங்காவில் உள்ள ஆண் கிளியை சலீமிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். இதன் மூலம் இரண்டு கிளிகளும் ஒன்று சேர்ந்துள்ளன. (அ-5)

# பிற இனத்தவர்கள் 'அல்லா' என்ற சொல்லை பயன்படுத்த முடியாது

## மலேசியாவில் வந்தது தடை

மலேசியாவில் முஸ்லிம் அல்லாதவர்கள் அல்லா என்ற சொல்லை பயன்படுத்த திடீரென தடை விதிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவின் செலாங்கூர் மாநில இஸ்லாமிய விவகாரங்கள் குழுச் செயலர் முகமது மிஸ்ரி இத்ரிஸ் கருத்து தெரிவிக்கையில், செலாங்கூரில் முஸ்லிம் அல்லாதவர்கள் அல்லா என்ற சொல்லை பயன்படுத்தக் கூடாது என தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், அல்லா என்ற சொல் புனிதமானது. முஸ்லிம்களுக்கு மட்டுமே உரித்தானது. அதை ஏனையவர்கள் பயன்படுத்தக் கூடாது என்று கடந்த 2012ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி ஒலிநாடாவில் சட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இனிமேல் முஸ்லிம் அல்லாதவர்கள் யாரும் அல்லா என்ற சொல்லை செலாங்கூரில் பயன்படுத்தக் கூடாது என்று சுல்தான் அறிவித்துள்ளார். இந்த உத்தரவை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுல்தான் எச்சரித்துள்ளார் என்றார்.

இதேவேளை, மலேசியாவின் முக்கிய எதிர்க்கட்சியான ஜனநாயக செயல் கட்சியின் பொதுச் செயலாளர் புத்தாண்டு நிகழ்ச்சியின் போது பேசுகையில், அல்லா என்று பைபிளில் கூறியுள்ளபடி மலேசிய மொழியில் பயன்படுத்த மலேசிய அரசு அனுமதிக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்.

மேலும் மலேசியாவில் வசிக்கும் கிறிஸ்தவர்கள் கூறுகையில், பல நூற்றாண்டுகளாக மலாயா மொழி பைபிளில் இடம்பெற்றுள்ள அல்லா என்ற சொல்லை பயன்படுத்தி வருகிறோம். இப்போது தடை விதிப்பது முறையல்ல. இந்த அடிப்படை உரிமைக்கு எல்லா அரசியல் கட்சியினரும் மதிப்பளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ அமைதியும் மகிழ்ச்சியும் பெற்றால் அவர்கள் பொறாமைப்படலாம். இருந்தாலும் நீ மகிழ்ச்சியாக இரு.
-அன்னை தெரேசா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தைப் பொங்கல் வருகுது மகனே! வீட்டில் கட்டாயம் பொங்கல் செய்

கொழும்பில் இருக்கின்ற தந்தையொருவர் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற ஆசிரியத் தொழில் புரியும் தன் மகனுக்கு எழுதிய கடிதம் இது.

அன்பு மகனே! எதிர்வரும் 14ஆம் திகதி தைப் பொங்கல் வருகிறது. கட்டாயம் வீட்டில் பொங்கல் செய்ய மறந்துவிடாதே.

தை என்பது தமிழ் மக்களின் வாழ்வில் முக்கியமான மாதம். தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையை எங்கள் மனங்களில் ஏற்படுத்துவதன் மூலம் மனம் உற்சாகமடையும்.

வசந்த காலத்தின் நுளைவாயிலாக இருக்கின்ற தை மாதம் பிறப்பது வசந்த காலத்தின் திருக்கதவு திறப்பது போன்றது.

எனவே வீட்டில் புதுப்பானை வைத்து, பொங்கல் படைப்பது உளவியல் ரீதியிலும் முக்கியமானதென்பதை நீ ஒரு ஆசிரியர் என்ற வகையில் ஏற்றுக் கொள்வாய் என நம்புகின்றேன்.

அதிலும் ஆசிரியத் தொழில் வெறுப்பாக இருக்கிறது அப்பா! என்று நீ அடிக்கடி என்னிடம் கூறியதை நினைத்துப் பார்க்கிறேன்.

அன்பு மகனே! கல்வியில் டிப்ளோமா செய்த உனக்கு உளவியல் பற்றி நான் கூறவேண்டிய தேவையில்லை.

கல்வி உளவியல் என்பது தனித்து மாணவர்களின் உளவியலை மட்டும் குறிப்பிடவில்லை. மாறாக ஆசிரியர்களின் உளவியல் பற்றியும் குறிப்பிடுகின்றது.

உள ஆரோக்கியத்துடன் ஒரு ஆசிரியர் இருக்கின்ற போதுதான் அவரால் சிறந்த முறையில் கற்பித்தலை மேற்கொள்ள முடியும்.

எனவே சம காலத்தில் ஆசிரியத் தொழிலில் உனக்கு இருக்கக்கூடிய வேலைப்பளு, மாணவர்களின் குழப்படிகள், இடமாற்றம் வந்துவிடுமோ என்ற ஏக்கம், கூட்டத்திற்குச் சென்ற அதிபர் என்னென்ன படிவங்களைக் கொண்டு வந்து குவிப்பாரோ என்ற கலக்கம் என அனைத்தும் சேர்ந்து உனக்கு மன அழுத்தத்தை தந்துள்ளது என்று நான் கருதுகிறேன்.

இதற்கு மேலாக தொடர்ச்சியான கருத்தரங்குகள், ரயர் கம்பனி முதல் பெயின்ற் கம்பனி வரை நடத்துகின்ற போட்டிகள் என்பனவும் புனிதமான ஆசிரியத் தொழில்; உன்னிடம் வெறுப்பாகிப்போயிற்று என்றுதான் சொல்லவேண்டும்.

என் அன்பு மகனே! இத்தகைய வெறுப்பு நிலைகளை நீக்கவே தைப் பிறப்பில் கட்டாயம் வீட்டில் பொங்கல் செய் என்று சொல்கிறேன்.

சூரிய பகவானுக்கு நன்றி சொல்கின்ற தமிழர் பண்பாட்டின் விழுமியத்தை நீ கடைப் பிடிக்கின்ற போது அது உன் பிள்ளைகளுக்கும் நன்றியின் உணர்வை உணர்த்தி நிற்கும்.

ஆகையால்,அங்கு; இங்கு என்று ஓடித்திரிவதை விடுத்து தைப்பொங்கலின் போதாவது வீட்டிலிருந்து பொங்கிப் படைத்து உன் மனைவி, பிள்ளைகள், உறவுகளுடன் மகிழ்வைப் பகிர்ந்து கொள்.

இப்படிக்கு உன் அருமை அப்பா.

இக்கடிதத்தை வாசித்த மகன் தன் தந்தைக்கு எழுதும் கடிதம் நாளை வரும்.

# வெளிநாடு சென்றுள்ள பெற்றோரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் தொழில் வாய்ப்புக் கருதி வெளிநாடு சென்றுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் உதவிப்பணம் வழங்குவது தொடர்பாக சுற்றுநிருபம் ஒன்று இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் முகாமையாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து சென்றுள்ள பெற்றோர்களது பிள்ளைகளே இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படவுள்ளனர்.

கடந்த 2012ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாக இருத்தல் அல்லது கடந்த 2011ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக இருத்தல் வேண்டும் அல்லது கடந்த 2011ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். மேற்படி விபரங்களுக்குள் உள்ளடங்குகின்ற மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை நிழற்பிரதி செய்து தேவை யான மாணவர்களுக்கு வழங்கி அதனைப் பின்னர் பாடசாலை அதிபர்கள் உறுதிப்படுத்தி முகாமையாளர் (நலன்புரி), நலன்புரி பிரிவு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், இல 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் 0112864117 என்றதொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-3-15)

## அரச ஊழியர்களுக்கு அஹ்ரகாரா வழங்கும் இலத்திரனியல் அட்டை

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் உத்தியோகத்தர்களில் அஹ்ரகாரா காப்புறுதித் திட்டத்தில் இணைந்துள்ளவர்களது அங்கத்துவத்தை மீளாய்வு செய்து இலத்திரனியல் அட்டை வழங்கப்படவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் கீழ் அஹ்ரகாரா காப்புறுதி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள மாதிரி படிவத்தை பூரணப்படுத்தி இரு பிரதிகளை துணுக்காய் கல்வி வலயத்தின் நிர்வாக பிரிவில் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அத்தோடு பிறப்புச் சான்றிதழ் (உரிய அலுவலரினதும் தங்கியிருப் போரதும்), தேசிய அடையாள அட்டை பிரதி, விவாகச்சான்றிதழ், கடைசி மாத சம்பள விபரம், நியமனக் கடிதத்தின் பிரதி, புதிய கடவுச்சீட்டு அளவினதாக வர்ணப் புகைப்படங்கள் 2 ஆகிய ஆவணங்களையும் விண்ணப்ப படிவங்களும் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்படைக்கத் தவறுபவர்கள் இழப்பீடுகள் ஏற்படும்போது அதைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (அ-3-15)

## நெற்பயிர் செய்கைகளில் நோய்களின் தாக்கம்
### விவசாயிகள் பாதிப்பு

யுத்தத்திற்கு பின் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் மிகவும் துன்பத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

நெற்பயிர்ச் செய்கை மற்றும் ஏனைய பயிற்செய்கைகளை செய்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த பெரியளவில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இருப்பினும் விதை செய்த நெற் பயிர்களுக்குள் புற்களின் பெருக்கம் அதிகமாக காணப்படுகிறது.

அத்துடன் தத்தி, மடுச்சுக்கட்டி என்பவற்றால் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறது. மருந்துகள் பாவித்தும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு முடியாமல் அதிக செலவுகளையும்செய்து கஷ்டமடைய வேண்டியதாயிற்று.

தற்போது பெய்து வரும் பெரும் மழையால் நெற்கதிர்கள் பால் பருவத்திற்கு முன்பாகவே விழுந்துவிட்டன.

இதனால் எதிர்பார்த்த பலனை அடைய முடியாத நிலை பரவலாக ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் மழையுடன் கூடிய காற்று ஏற்படுமாக இருந்தால் ஏதிலிகளாக உள்ள இந்த விவசாயிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த என்ன செய்வதென் அங்கலாய்க்கின்றனர்.

எனவே இந்த விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு வீட்டுத் திட்டங்கள் போன்ற ஏனைய அத்தியாவசிய உதவிகளையேனும் வழங்க ஆவன செய்யவேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



என்னுடைய சீடர்களால் உபதேசிக்கப்பட்ட எனது சந்நியாசிகளிடமிருந்து இந்த தர்மாவை கற்றறியுங்கள். எனது சந்நியாசிகளுக்கு நீங்கள் காட்டும் மரியாதை எனக்குக் காட்டும் மரியாதையாகும். எனது சந்நியாசி தோன்றிய குடும்பம் அருளப் பெற்றது. இவ்வுலகில் நீங்கள் எனக்குச் செய்யக்கூடிய மிகப்பெரிய சேவையானது நீங்கள் எனது சந்நியாசியாகத் தொண்டு செய்வது தான். எனது சீடர்கள் தர்மாவை வெளிப்படுத்துகிறார்கள். எனது சந்நியாசிகள் தர்மாவை உபதேசிக்கிறார்கள். நீங்கள் தர்மாவைப் பரப்பிக் காக்கவேண்டும். எனது தர்மாவிற்காக இங்கே நீங்கள் பாடுபட்டால் இங்கேயே நான் உங்களுக்கு வெகுமதியளிப்பேன். பின்னர் பன்மடங்கு அதற்கும் மேலாக அளிப்பேன். நான் உங்களைத் துயரப்படவைப்பதே உங்களுக்கும் எல்லாவற்றிற்கும் உதவுவதற்காகத்தான். நீங்கள் தர்மாவிற்குத் தீங்கு செய்தால் நீங்கள் துயரப்படுவீர்கள். நீங்கள் மற்றவர்களையும் துயரப்படவைப்பீர்கள். நீங்கள் சுயதேவைகளுக்காகத் தர்மாவைத் தவறாகப் பயன்படுத்தினீர்கள் என்றால் நீங்கள் மற்றவர்களையும் துயரப்பட வைப்பீர்கள்.

## மண்டபம் இடமாற்றம்

கம்பன் கழகத்தால் நடத்தப்படும் பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் நல்லூர் கோவிலின் வடக்கு வீதியில் அமைந்துள்ள மங்கையர்க் கரசி வித்தியாலயத்தில் நடைபெறும் எனக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது. முன்னர் இப் போட்டிகள் நல்லூர் கோவில் வீதியில் உள்ள கம்பன் கோட்டத்தில் நடைபெறும்என அறிவிக்கப்பட்டு தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவர் பதவிக்கு மூவர் போட்டி

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கு போட்டியிட 3 சட்டத்தரணிகள் முன்வந்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய உபுல் ஜயசூரிய, ஆர். ஆர். எஸ். தங்கராஜா மற்றும் திரந்த வலலியத்த ஆகிய மூவரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கு போட்டியிடவுள்ளனர். இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக தற்போது விஜேதாச ராஜபக்ஷ செயற்பட்டு வருகின்றார்.

எதிர்வரும் மார்ச் மாதம் இவரது பதவிக்காலம் முடிவடைகிறது. அதன் பின் இரண்டாம் தடவை போட்டியிடப் போவதில்லை என அவர் அறிவித்துள்ளார். இதனால் புதியவர்கள் போட்டியிட முன்வந்துள்ளனர். இவர்களுக்கான தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்
### வெற்றி வாழ்வின் இரகசியம்



நன்மை செய்யவும் நல்லவர்களாக வாழவும் விரும்புபவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.

உண்மை எதற்கும் தலை வணங்கத்தேவையில்லை. மனித சமூகம்தான் உண்மைக்குத் தலை வணங்க வேண்டும்.

எல்லாவிதமான அறிவும் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது. அதை விழித்து எழச் செய்வதே நல்லாசிரியரின் கடமை.

இன்றைய கல்வித்திட்டம் மனிதனை இயந்திரமாக மாற்றிக்கொண்டிருக்கிறது. ஒழுக்கம், மனவலிமை, பரந்த அறிவு இவற்றை புகட்டுவதாக கல்வித்திட்டம் மாறவேண்டும்.

மனிதர்கள் விலங்குகளைவிட அதிக ஒழுக்கமானவர்களாக இல்லை. சமுதாயக்கட்டுப்பாடு என்ற சாட்டையால் மனிதன் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறான்.

கற்பு நெறியிலிருந்து பிறழும்போது மனித சமூகம் முடிவை நோக்கி நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும்.

நாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்வை அனுசரித்து அமைத்துக் கொள்வதுதான் வெற்றி வாழ்வுக்கான இரகசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய அணி பயிற்சியாளரை நீக்க வலியுறுத்தல்

இந்திய கிரிக்கெட் அணியின் சமீபகால தோல்விகளால் அணித்தலைவர் டோனி, பயிற்சியாளர் பிளட்சர் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

இதில் டோனியைவிட பயிற்சியாளர் பிளட்சர் தான் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறார்.

இந்நிலையில் இந்திய அணியின் பயிற்சியாளர் பிளட்சரை நீக்க வேண்டும் என்று முன்னாள் அணித்தலைவர்கள் துலீப் வெங்சர்க்கார், அஜீத் வடேகர் ஆகியோர் வலியுறுத்தி உள்ளனர்.

அதே நேரத்தில் டோனிக்கு அவர்கள் தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர்.

## உமர் அக்மல் மீது கடுமையான விமர்சனங்கள்

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த பாகிஸ்தான் குழாமில் ஈடுபட்டிருந்த உமர் அக்மல், அத்தொடரில் 3 போட்டிகளில் பங்குபற்றியிருந்தார். அப்போட்டிகளில் அவர் பொறுப்பற்ற ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இவரது ஆட்டம் குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்த பாகிஸ்தானின் முன்னாள் தலைவரும், நேர்முக வர்ணனையாளருமான வசீம் அக்ரம், எப்போது உமர் அக்மல் பொறுப்பாக விளையாடப் புரிந்து கொள்வார் எனக் கேள்வியெழுப்பினார்.

உமர் அக்மல் - சர்வதேசப் போட்டிகளில் போதுமானளவு காலத்திற்கு இதுவரை போட்டிகளில் பங்குபற்றியுள்ளதாகத் தெரிவித்த வசீம் அக்ரம், தனது விளையாட்டு முறை குறித்து உமர் அக்மல் அறிந்து செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## அர்ஜுனின் கடின உழைப்புக்கு பலன் கிடைத்து!

**- சச்சின் பெருமிதம்**

14 வயதுக்கு உட்பட்டோருக்கான மும்பை அணியில் அர்ஜுனுக்கு இடம் கிடைத்தது பற்றி சச்சின் கருத்துக்கூறுகையில் மற்ற பெற்றோர்களை போல எனக்கும் மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. அர்ஜுன் மும்பை அணிக்காக ஆடுவதில் பெருமைப்படுகிறேன்.

அவனது கடின உழைப்பிற்கு பலன் கிடைத்துள்ளது. அணியில் அவனை சாதாரண வீரராகவே அனைவரும் கருத வேண்டும் என்றார்.

## முதலாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியாவிடம் மண்டியிட்டது இலங்கை



அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ளது. இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி 107 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

மெல்பேரன் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 305 ஓட்டங்களைக் குவித்தது. முதலாவது விக்கெட்டுக்காக 53 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, 2 விக்கெட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதிலும், அணித்தலைவர் ஜோர்ஜ் பெய்லி, ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் பிலிப் ஹியூஸ் இருவரும் 140 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக பிலிப் ஹியூஸ் 129 பந்துகளில் 112 ஓட்டங்களையும், ஜோர்ஜ் பெய்லி 79 பந்துகளில் 89 ஓட்டங்களையும், டேவிட் ஹசி ஆட்டமிழக்காமல் 34 பந்துகளில் 60 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக நுவான் குலசேகர, லசித் மலிங்க, அன்ஜலோ மத்தியூஸ், அஜந்த மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

306 என்ற மிகப்பெரிய இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 40 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்று 107 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. முதலாவது விக்கெட்டை 8 ஓட்டங்களுக்கு இழந்த இலங்கை அணி, 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

ஆனால் மூன்றாவது விக்கெட்டுக்காக 94 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், திலகரட்ண டில்ஷானின் விக்கெட் இழப்பிற்குப் பின்னர் விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாக இழக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக டினேஷ் சந்திமால் 95 பந்துகளில் 73 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 70 பந்துகளில் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப்போட்டியில் திலகரட்ண டில்ஷான், அன்ஜலோ மத்தியூஸ், லஹிரு திரிமன்ன ஆகியோர் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்திருந்தனர். லஹிரு திரிமன்ன பந்தெதனையும் சந்திக்காது ஆட்டமிழந்திருந்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக கிளின்ட் மக்காய் 33 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், மிற்சல் ஜோன்சன் 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், மிற்சல் ஸ்ரார்க் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக பிலிப் ஹியூஸ் தெரிவானார்.


## T-20 தலைவர் பதவியிலிருந்து தோனி விலகவேண்டும் - ராவிட்

ருவென்ரி-20 போட்டிகளுக்கான அணித் தலைவர் பதவியிலிருந்து டோனி விலக வேண்டும் என முன்னாள் அணித்தலைவர் டிராவிட் கூறியுள்ளார்.

சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை டோனி தலைமையிலான இந்திய அணி இழந்தது. இது குறித்து இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் டிராவிட் கூறுகையில், டெஸ்ட் போட்டிகளில் அணித் தலைவராக செயற்பட டோனிக்கு தகுதி உள்ளது. இப்பொறுப்பில் சிறப்பாக செயற்பட முடியும்.

அனைத்து நேரங்களிலும் அணித்தலைவராக இருந்தால், அவருக்கே சலிப்பு ஏற்பட்டு விடும். எனவே ருவென்ரி-20 மற்றும் ஐ.பி, எல் சென்னை அணியின் அணித்தலைவர் பொறுப்பில் இருந்து விலகி, விளையாட்டில் மட்டும் கவனம் செலுத்தலாம். அதே நேரத்தில் ருவென்ரி-20 மற்றும் ஒருநாள் போட்டியில் சாதாரண வீரராக நீடிக்கலாம்.

மூன்று விதமான கிரிக்கெட் போட்டிகளுக்குமான அணித்தலைவர் பொறுப்பை விராத் கோஹ்லியிடம் அளிக்கலாம். இளம் வீரராக இருப்பதால், இவருக்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.



## பாகிஸ்தான் சுப்பர் லீக் உத்தியோகபூர்வமாக ஆரம்பம்

பாகிஸ்தானின் ருவென்ரி 20 லீக் தொடர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த ருவென்ரி 20 லீக் பாகிஸ்தான் சுப்பர் லீக் என அழைக்கப்படவுள்ளது.

5 அணிகள் பங்குபெறவுள்ள இத்தொடர் 15 நாட்கள் இடம்பெறவுள்ளதோடு, 23 போட்டிகள் ஒரு தொடரில் இடம்பெறவுள்ளன. இத்தொடர் இவ்வாண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இத்தொடரில் பங்குகொள்ளும் ஒவ்வொரு அணியும் 6 வெளிநாட்டு வீரர்களையும், 10 உள்ளூர் வீரர்களையும், 2 வளர்ந்துவரும் வீரர்களையும் உள்ளடக்க அனுமதிக்கப்படுவர் என அறிவித்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, இத்தொடர் வெற்றிபெறும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எந்தப் பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த 5 அணிகளும் உருவாக்கப்படும்,

உருவாக்கப்படும் அணிகளை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள நிறுவனங்கள் போன்ற விடயங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை என்ற போதிலும், பெப்ரவரி மாத இறுதிக்குள் மேற்படி விடயங்களைப் பூர்த்தி செய்ய முடியும்என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரின் ஆலோசகராக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்குச் செயற்படும் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஹரூன் லோகார்ட், இந்த பாகிஸ்தான் சுப்பர் லீக் 100 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் பெறுமதியில் காணப்படும் எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்த இந்தியா எதிர்ப்பு

International Cricket Council

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபை ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இது மாற்றத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் புதிய நடைமுறையின் படி ஒரு தொடரில் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் போட்டியை நடாத்தும் நாடு மாத்திரம் விரும்பினால் போதுமானது என நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


தற்போதைய நடைமுறையின் படி தொடரொன்றில் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் போட்டியில் பங்குபற்றும் இரண்டு நாடுகளும் சம்மதம் தெரிவிக்க வேண்டுமென்ற நிலை காணப்படுகின்றது.

இந்த நடைமுறை தொடர்பாக வாக்களிப்பு நடாத்தப்படவுள்ளது எனவும், 10 முழுமையான அங்கத்துவம் உள்ள நாடுகளும், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தலைவர், உப தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரிகள் ஆகியோரின் வாக்குகள் கருத்திற் கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நடைமுறை தொடர்பாக 10 முழுமையான அங்கத்துவ நாடுகளில் இந்தியா தவிர அனைத்து நாடுகளும் முழுமையான விருப்பத்தை வெளியிட்டுள்ளன. தொடர்ச்சியாக நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் இந்தியா இந்த நடைமுறைக்குத் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் தொடரும் இந்தியாவின் சோகம்



இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்திய அணி அந்நிய நாட்டிடம் சொந்த மண்ணில் அடிவாங்கும் சோகம் தொடர்கின்றது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி சமீபத்தில் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து அந்த அணியுடன் விளையாடிய டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

20 ஓவர் தொடரை 1:1 என்ற கணக்கில சமன் செய்தது.

அடுத்து 5 ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி இந்தியா வந்துள்ளது.

இதில் முதலாவது ஒருநாள் போட்டி ராஜ்கோட்டில் நேற்று மதியம் 12 மணிக்கு தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. ஆரம்ப வீரர்களாக இயன் பெல், அணித் தலைவர் குக் ஆகியோர் களம் இறங்கினர்.

முதல் ஓவரை புவனேஸ்குமார் வீசினார். அந்த ஓவரில் பெல், குக் தலா ஒரு ஓட்டம் மட்டுமே எடுத்தனர்.

அடுத்த ஒவரை இஷாந்த் சர்மா வீசினார். இந்த ஓவரில் பெல் முதல் பவுண்டரி அடித்தார். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர்.

பெல் சிறப்பாக விளையாடி அரைச்சதம் அடித்தார். இந்த ஜோடியை பிரிக்க முடியாமல் இந்தியப் பந்துவீச்சாளர்கள் திணறி வந்தனர்.

இந்த நிலையில் பெல் 85 ஓட்டங்களுடன் எதிர்பாராத விதமாக ரன் அவுட் ஆனார்.

அடுத்து வந்த பீற்றர்சன், அணித்தலைவர் குக்குடன் ஜோடி சேர்ந்து விளையாடினார். குக் அதிரடியாக விளையாடி அரைச்சதம் அடித்தார். ரெய்னா வீசிய 32-வது ஓவரில் குக் 75 ஓட்டங்களுடன் ரகானேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக வந்த மோர்கன் அதிரடியாக விளையாடி 41 ஓட்டங்களுடன் டின்டா பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதன்போது இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தொடர்ந்து வந்த கீஸ்வெட்டர் களத்தில் நின்ற பீற்றர்சனுடன் இணைந்து விளையாடினார். பீற்றர்சன் 44 ஓட்டங்களுடன் டின்டாவின் பந்தில் ஹோலியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் வந்த பட்டேல், கீஸ்வெட்டருடன் இணைந்து அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 325 ஓட்டங்களைக் குவித்தது.

பட்டேல் 44 ஓட்டங்களுடனும், கீஸ்வெட்டர் 24 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்தியப் பந்துவீச்சாளர்கள் தரப்பில் டின்டா 2 விக்கெட்டுக்களையும், ரெய்னா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 326 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் இந்திய அணி களம் இறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கிய காம்பீரும், ரகானேயும் சிறப்பாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இதனால் இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது.

இந்திய அணி தனது முதலாவது விக்கெட்டை 96 ஓட்டங்களைப் பெற்றிருக்கும் போது இழந்தது.

ரகானே 47 ஓட்டங்களுடன் டிரெட்வெல் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து ஹோலி களமிறங்கினார். காம்பீர் 48 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் அரைச்சதம் அடித்தார். எனினும் மேலதிகமாக இரண்டு ஓட்டங்களைச் சேர்த்த அவர் 52 ஓட்டங்களுடன் டிரெட்வெல் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

களத்தில் நின்ற ஹோலியுடன் இணைந்த யுவ்ராஜ் சிங் களமிறங்கிய முதலே அடித்து விளையாடினார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஹோலி 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த ரெய்னா யுவராஜ் சிங்குடன் இணைந்து சிறப்பாக விளையாடினார். இதனால் இந்திய அணி வெற்றியை நோக்கிப் பயணித்தது. ஆனால் அரைச்சதம் அடித்த யுவ்ராஜ் சிங் 61 ஓட்டங்களுடனும், ரெய்னா 50 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அதன் பின் போட்டி இங்கிலாந்து பக்கம் திரும்பியது.

பின்னர் வந்த தோனி 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணியின் வெற்றி உறுதியானது.

ஜடேஜா (7), அஸ்வின்(13), டின்டா(3) ஓட்டங்களில் ஆட்டம் இழக்க இந்தியா 50 ஓவர்கள் 9 விக்கெட் இழப்பிற்கு 316 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் இங்கிலாந்து 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இங்கிலாந்து அணியின் டிரெட்வெல் தெரிவானார்.

## பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் பொதுக்கூட்டம் 4 ஆண்டுகளின் பின் நடந்தது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் பொதுக்கூட்டம் கடந்த நான்கு வருடங்களுக்குப் பின்னர் கடந்த 6-ம் திகதி நடைபெற்றது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் நிர்வாகசபை உறுப்பினர் ம.சதீஸ்கரன் எடுத்த முயற்சியை அடுத்து இப்பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் பொதுக்கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்ற யாப்பின் விதிக்கு அமைவற்று கடந்த நான்கு ஆண்டுகளாக பொதுக்கூட்டம் கூட்டப்படாததை யடுத்து லீக்கின் நிர்வாக சபை உறுப்பினர் ம.சதீஸ்கரன் இலங்கை உதைபந்தாட்ட லீக்கின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இதையடுத்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் பொதுக்கூட்டம் கடந்த 6-ம் திகதி நடைபெற்றது. (ந)

# உரும்பிராய் சென்.மைக்கல் வி.கழகத்தின் கிரிக்கெட் இறுதிப் போட்டி நாளை



அளவெட்டி மத்தி



கோப்பாய் சென்.மேரிஸ்

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் இறுதிப்போட்டி நாளை 13ம் திகதி ஞாயிற்றுகிழமை பிற்பகல் 3 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் இறுதிப்போட்டியில் அளவெட்டி மத்திய அணியும் கோப்பாய் சென்மேரிஸ் அணியும் மோதவுள்ளன.

இதில் அணிக்கு 9 பேர் கொண்ட 12 ஓவர்களாக போட்டி இடம் பெறவுள்ளது. மூன்றாம் இடத்திற்கான போட்டி பிற்பகல் 2 மணிக்கு அன்றையதினமே அதே மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் மானிப்பாய் ஒக்ஸ்பேட் அணியும், நெல்லியடி சிறிமுருகன் அணியும் மோதவுள்ளன.

இப்போட்டி அணிக்கு 6 பேர் கொண்ட 5 ஓவர்களாக இடம் பெறவுள்ளது.

# நிறைவேறியது...

தீர்மானம் எடுப்பார் என குறிப்பிடப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர், பிரதம நீதியரசரை பதவியிலிருந்து நீக்குவதான தீர்மானத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கையெழுத்திட்ட கடிதத்தை பிரதம நீதியரசருக்கு அனுப்பி வைப்பார் என்பதே அடுத்தகட்ட நடவடிக்கையாகும்.

### அடுத்த பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ்?

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவி நீக்கம் செய்யப்பட்டால் அடுத்த பிரதம நீதியரசராக முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் நியமிக்கப்படுவார் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியால் ஷிராணியின் குற்றப் பிரேணை அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்பட்டால் அடுத்த பிரதம நீதியரசராக யார் நியமிக்கப்படுவார் என்ற கேள்வி எல்லோர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது.

இதில் முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், ஷிராணி திலகவர்த்தன, சத்யா ஹெட்டிகே ஆகியோரது பெயர்கள் முணுமுணுக்கப்படுகின்றன.

எனினும் மொஹான் பீரிஸுக்கு குறித்த பதவியை வழங்க அதிக வாய்ப்புக்கள் காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

### ஷிராணியின் வீட்டிற்கு முன்னால் அமைச்சர்கள்

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், பிரதம நீதியரசரின் வீட்டுக்கு முன்பாக நேற்றிரவு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் அமைச்சர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அரச ஆதரவாளர்களும் கோல்டன் கீ வைப்பீட்டாளர்களுமே பிரதம நீதியரசரின் வீட்டுக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த ஆர்ப்பாட்டக்காரர்களுடன் அமைச்சர்களான அனுர பிரியதர்சன யாப்பா, மகிந்தாநந்த அளுத்கமகே, டிலான் பெரேரா, லசந்த அழகியவண்ண ஆகியோரே பேச்சுவார்த்தை நடத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை சமரசப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் வீட்டுக்கு முன்பாக குழுமியுள்ளவர்கள் பால்சோறு சமைத்துக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### சர்வதேச நீதி ஆணைக்குழு கண்டனம்

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை சர்வதேச நீதி ஆணைக்குழு கண்டித்துள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குற்றப்பிரேரணையானது உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளை மீறியுள்ளது. இது நாட்டின் சமநிலையில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என அவ்வமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

### நாட்டிற்கு இன்று சோகமான நாள் -ஐ.தே.க

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குற்றப் பிரேணையில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை நாம் சுட்டிக் காட்டினோம்.


எனினும் சபாநாயகர் அதைஏற்றுக்கொள்வதாக இல்லை. இன்றையநாள்(நேற்று) நாட்டிற்கே சோகமானதானதொரு நாளாகும் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவிக்கையில்

நாட்டிற்கே இன்று(நேற்று) சோகமான நாளாகும். குற்றப் பிரேரணை தொடர்பில் எங்களுடைய ஆட்சேபனைகளை ஏற்றுக் கொள்ளாமைக்கான சரியான காரணத்தை சபாநாயகர் தெளிவுபடுத்தவில்லை என்றார். (செ-11)

## மரண அறிவித்தல்

### விஸ்வநாதஜயர் ஜெகதீஸ்வரசர்மா



காரைநகரைப்பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை மற்றும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய ஆனந்தபவனத்தில் வசித்தவருமாகிய இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் (யாழ்ற்றன் கல்லூரி- காரைநகர்) விஸ்வநாதஜயர் ஜெகதீஸ்வர சர்மா நேற்று 11.01.2013 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னாரின் பூதவுடல் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றிய தலைமைச் செயலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நேற்று மாலை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (இ)

தலைமைச் செயலகம்
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்,

தகவல்
சோ.அகிலேஸ்வரி அம்மா(சகோதரி)
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் சங்கானை சண்டிலிப்பாய் கிளைத் தலைவரும் சுழிபுரம் ஸ்ரீவரதராஜா பேக்கரி உரிமையாளரும் ஆகிய திரு.இ.ஸ்ரீராம் அவர்களின் பாசமிகு மாமனார் ஆகிய **அமரர் பண்டாரி வேலாயுதம்** அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்
559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-2130)

நிர்வாகத்தினர்,
அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்.


# உச்சநீதிமன்ற...

அரசு சட்டத்தின் ஆட்சியையும், ஜன நாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும் மதிக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு எதிரான இந்த நடவடிக்கையை பல்வேறு சிவில் சமூக அமைப்புகளும் கண்டித்துள்ளன. (செ-11)

# அமைப்பாளர்...

பதவியை இராஜினாமா செய்யத் தீர்மானித்தேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் மேர்வின் சில்வாவின் இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

களனி தொகுதி அமைப்பாளர் பதவியை இராஜினாமா செய்வதாக அமைச்சர் மேர்வின் சில்வா வழங்கிய கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (செ-11)

# 10 நிமிடங்...

என காணப்பட்டுள்ளார் எனவும் அவரை பதவி நீக்கும் யோசனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் கூறப்படும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஆற்றுப்படுத்தப்பட்ட அறிக்கை நேற்று நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் இல்லை என் எதிரணியினர் சுட்டிக்காட்டியதை அடுத்தே அவை நடவடிக்கை 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (செ-11)

# நீதிமன்ற...

வெளியிட்டனர்.

ஷிராணிக்குஆதரவாக தாங்கள் ஆர்ப்பாட்டம்செய்யவில்லை என்றும் நீதித்துறையின் சுயாதீனத்திற்கு ஆதரவாகவே போராட்டம் செய்வதாகவும் சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர். (செ-11)

# ஆசிரியர் இட...

களிலும் பெயர் இடம்பெறும் பட்சத்தில் அவ் ஆசிரியர்களுக்கு இடமாற்றல் கடிதங்களை உடனடி யாக வழங்குவதெனவும் .

இவர் களுள் ஆசிரியர் இடமாற்றம் 2012 மார்கழிக்கான நிபந்தனைகளின் மேல் முறையீடு செய்ய காரணம் இருப்பின் 18.01.2013 க்கு முன்னர் மேன்முறையீடு செய்யலாம் எனவும்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான முழு விபரம் நாளைய வலம்புரியில் வெளிவரும். (செ-11)

# ரிசானாவின்...

சவூதி அதிகாரிகள் கூறியிருந்தனர். ஆனால் இந்த குற்றச்சாட்டை ரிசானா மறுத்துள்ளார்.

குழந்தை இறந்த போது ரிசானா 17 வயதுடையவராக காணப்பட்டுள்ளார். எனவே, சிறுபாராயத்தினரின் உரிமைகள் பற்றிய சர்வதேச விதிகளுக்கு முரணானது என இந்த மரண தண்டனையைமனித உரிமைகள் கண்காணிப்பு எனும் அமைப்பு கண்டித்துள்ளது.

சவூதி உள்விவகார அமைச்சு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதை உறுதி செய்தது. ஆனால், அது பற்றிய விபரங்களை வெளிப்படுத்தவில்லை.

இவரது மரண தண்டனையை குறைக்கு'மாறு பல விண்ணப்பங்கள் செய்யப்பட்ட போதும் ரிசானா நபீக்கின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதை நான் கண்டிக்கின்றேன்எனமத்தியகிழக்குக்கான வெளி நாட்டு அமைச்சர் அலிஸ்ரெயர் பேட் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

தலை வெட்டப்படுவது கொடூரமானதும் மனித தன்மை அற்றதுமான நடவடிக்கையென நாம் கருதுகிறோம். அடிக்கடி மரண தண்டனை நிறைவேற்றப் படுவது உட்பட மனித உரிமைகள் பற்றி எமது விசனத்தை சவூதி அதிகாரிகளுக்கு தெரிவித்து வருகின்றோம் என அவர் மேலும் கூறினார். (செ-11)


## நினைவு கூரல்



பிறப்பு :
05.04.1957

இறப்பு :
08.12.2012

திருமதி
**பெ (F) லீஷியா மனோநிதி ஜெனநாதன்**
(நவீல்ட் பாடசாலை, கைதடி)

'உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.' *பிலிப்பியர் 4:5*

அன்னாரது நினைவுகூரல் ஆராதனை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (13.01.2013) முற்பகல் 11 மணிக்கு சுண்டுக்குழி பரி.யோவான் ஆலயத்திலும் அதைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வு பரி.யோவான் கல்லூரி பீற்றோ மண்டபத்திலும் நடைபெறும். இந் நிகழ்வுகளில் பங்குபற்றுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.C.N.ஜெனநாதன் குடும்பத்தினர்.

இல. 22 சந்தனமாதா கோவில் வீதி,
சுண்டுக்குழி. T.P:- 021 222 7093 (1467)



சாதனை ஆலோசனை நிறுவனத்தில்

**விசா ஆலோசனைக்கு Laptop மடிக்கணனி இலவசம்**



தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் 14.01.2013 அன்று எந்த ஒரு நாட்டிற்கும் எந்தவகை விசா ஆலோசனை செயற்திட்டத்தில் இணைந்தால் Laptop மடிக்கணனி இலவசமாக வழங்கப்படும்.

(நிபந்தனைகளிற்கமைவாக)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்** (PV 82703)

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 0212219016 (சி-2108)



## தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு பகுதி நேர வேலை வாய்ப்பும் இலவச அழகுக்கலைப் பயிற்சியும்



1. முக அலங்காரம் 2.முடி அலங்காரம்

பருக்கள், முடி உதிர்தல், பொடுகு, பித்தவெடிப்பு, கருவளையம்... போன்றவற்றுக்கான தீர்வுகளும் காணப்படும்.

- O/L பரீட்சைக்குத் தோற்றியோருக்கும் ஏனையோருக்குமான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
- மாணவர்கள், உத்தியோகத்தர்கள் போன்றோருக்கு அவர்களது நேரத்திற்கேற்றவாறு பயிற்சி நெறிகள் உண்டு.

பயிற்சியில் இணைய விரும்புபவர்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் என்பவற்றினை பதிந்து கீழுள்ள இலக்கத்திற்கு SMS அனுப்பி பதிவு செய்துகொள்ளுங்கள்.

**அனைத்து பயிற்சி நெறிகளும் 15.01.2013 ஆரம்பம்**

அன்றைய தினம் கலந்துகொள்ள முடியாவிடின் வேறொரு தினத்தில் கலந்துகொள்ளமுடியும்.

**தொடர்புகளுக்கு : 0779688057**
187/30, யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1464)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ:
06.01.1948

கண் நெகிழ:
25.12.2011

திருமதி
**தங்கவடிவேலு பவளராணி**



பவளச்சிரிப்பில் பாசத் தாயாய்
பார் போற்றும் பண்புடையாளாய்
இல்லத்தின் இனியவளாய் - எம்
இதயத்தை கலங்க வைத்து
இறைவனடி தாள் பணிந்து
ஆண்டு ஒன்று ஆனதம்மா
ஆறவில்லை எம் மனங்கள்

குடும்பத்தினர்

ஏழாலை தெற்கு, சுன்னாகம். (சி-2106)






மழலைகளுக்கான விளையாட்டுப் பொருட்களுக்கு 10% விலைக்கழிவு மற்றும் மழலைகள் ஆண், பெண்களுக்கான உடைகள், 100% (Cotton) உடைகள் சகலவிதமான மழலைகளுக்கான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ்பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

3000/- இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கான குலுக்கல் 14.01.2013 10 மணியளவில் நடைபெறும்.

## API Baby Mart
& Show Room

267, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org